# கந்தபுராண - -

# - - மறைபொருள்

A New
Interpretation of the Kandapuranam
Unfolding the Truth about the Ancients'
Heaven and Earth
Golden Meru
Kailasam
Etc.

---

BY
DANIEL JOHN, M. R.,

All Rights Reserved.] [Price Rupee One.

GF

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS,
MOUNT ROAD : MADRAS

# இந்நூல்

சிவன் தம்பலையில் வசித்தார்
அருச்சுனன் கீரிமலைத் தீர்த்தம் ஆடினான்
பூர்வ யாழ்ப்பாண அரசர் குகன் வம்சத்தார்
மூற்குகர் கிருட்டிணன் புத்திரர்
யாழ்ப்பாணத்தின் பூர்வ பெயர் காந்தருவ நகரம்
பாக்கு நீரிணைத்தீவுகள சத்ததீவு
நயினைதீவின் பூர்வபெயர் நாகதீவு
எனும் புராதனங்களை

தாம் இயற்றிய
யாழ்ப்பாணச் சரித்திரத்தில்
குறித்து வைத்ததால்
இந்நூலின் உற்பத்தி காரணராகிய
என் தந்தையின்
ஞாபகத்துக்கு
பிரதிக்கினை செய்யப்பட்டது

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| கந்தபுராணம் | | ... | 1 |
| அதிகாரம் 1. | பூமியின் இயற்கை | ... ... | 3 |
| 1. | பூமியின் பாகங்கள் | ... ... | 3 |
| | ஏழு தீவுகளும் ஏழு கடல்களும் | ... | 5 |
| | சொன்னத்தரையும் சக்கரவாளமலையும் | | 7 |
| | புறத்திலாழி | ... ... | 7 |
| | பேர்ஞாலம் | ... ... | 7 |
| | இவற்றின் நிலை ஒழுங்கு | ... | 7 |
| 2. | பாகங்களின் நிரூபணம் | ... ... | 9 |
| | சொன்னத்தரை | ... ... | 9 |
| | சக்கரவாளமலை | ... ... | 9 |
| | புறத்தில் ஆழி | ... ... | 11 |
| | பேர் ஞாலம | ... ... | 11 |
| | எழு கடல் | ... ... | 12 |
| | ஏழாற்றுப் பிரிவு | ... ... | 13 |
| | சதத தீவுகள | ... ... | 16 |
| | பெரு நேமி | ... ... | 16 |
| | தபனிய பார் | ... ... | 17 |
| | நிசிப்படலம் | ... ... | 20 |
| | தொல் பாருலகு | ... ... | 22 |
| | பாதலங்களும் மேலுலகங்களும் | ... | 23 |
| | அளவுகள் | ... ... | 23 |
| | பொழிப்பு | ... .. | 23 |
| அதிகாரம் 2. | சத்த தீவுகள். தனித்தனி நிரூபணம் | ... | 25 |
| | சம்புதீவு | ... ... | 25 |

4187

பக்கம


உப்புக்கடற் தீவு ... ... 25
நாவலந் தீவு ... ... 26
மணிபல்லவம் ... ... 26
நாகதீபம் ... ... 28
மணிபல்லவக் கடல் ... 29
நாவற்பழத் தீவு ... ... 30
நரித் தீவு ... ... 31
சாகம் ... ... 31
குசை .. ... 32
கிரவுஞசம் ... ... 32
இலவு ... ... 33
கோமேதகம் ... ... 33
புட்கரம் . . .. 33
பொழிப்பு ... ... 34

அதிகாரம் 3. சம்புதீவு. அதின் உள் விரிவு ... 36
நவகண்டததின் இயல்பு ... 37
அட்டகிரியின் இயல்பு ... ... 37
கயிலாசம் ... ... 38
சோம லோகம் ... ... 38
சூரிய லோகம .. ... 39

அதிகாரம் 4. மேரு ... ... 41
1. மேருவின் நிலையம் ... ... 41
2. மேருவின் உள் விரிவு ... ... 42
பல் சிகரம் ... ... 42
மும்மூர்த்தி பதம் ... ... 43
எண்மர் தேயம் ... ... 43
3. மேருவின் இயல்பு ... ... 43
4. அட்டநாகம். அட்டதிக்கயம் ... 46

| | | | பக்கம் |
|---|---|---|---|
| அதிகாரம் 5. | இமையம் | ... ... | 49 |
| | தொல் இமையம் | ... ... | 50 |
| அதிகாரம் 6. | கயிலாசம் (பெருங் கயிலை) | ... | 52 |
| | வான யாறு | ... ... | 55 |
| | மகா ஈஸ்வரகுளம் | ... ... | 56 |
| அதிகாரம் 7. | அராவணை | ... ... | 57 |
| | நேமிக்காவல் | ... ... | 58 |
| | சரவணை | ... ... | 58 |
| | ஊருத்துறை | ... ... | 58 |
| அதிகாரம் 8. | சுவர்க்கம் | ... ... | 60 |
| | பொன்னகர் | ... ... | 61 |
| அதிகாரம் 9. | சில உலகங்களும் அண்டங்களும் | ... | 64 |
| | உலகங்கள் | ... ... | 64 |
| | மலரயன் பதம் | ... ... | 64 |
| | விஷ்ணு லோகம் | ... ... | 64 |
| | சிவ லோகம் | ... ... | 64 |
| | மகலோகம் | ... ... | 65 |
| | மூவுலகு | .. ... | 66 |
| | அண்டங்கள்—அண்டர் | ... ... | 66 |
| அதிகாரம் 10. | வேறு சில இடங்கள | ... ... | 69 |
| 1. | சரவணம் | ... ... | 69 |
| 2. | குமரனின் விளையாட்டிடங்கள | ... | 69 |
| 3. | நாகம் | ... ... | 70 |
| 4. | கிரவுஞ்ச கிரி | ... ... | 70 |
| 5. | கந்தவரை, கந்தவெற்பு, கந்தமாதனம் | ... | 71 |
| 6. | தேவகிரி, இமையவர் சயிலம், கடவுள் வெற்பு, அமரர் வெற்பு, மணிவரை. | | 71 |
| 7. | பரங்குன்று | ... ... | 72 |

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 8. | " வழி " இடங்கள் | ... | ... 73 |
| 9. | குமாரபுரி, சேய் நல்லூர் | ... | ... 73 |
| 10. | சுரம், பெரும்பாலை | ... | ... 74 |
| 11. | செந்தி | ... | ... 75 |
| அதிகாரம் 11. | இமையவரின் சரித்திரம் | ... | ... 80 |
| | இந்திரனின் இராச்சியம் | ... | ... 80 |
| | அசுரர் | ... | ... 81 |
| | அசுரர் படையெடுத்தல் | ... | ... 81 |
| | சூரபன்மன் அரசு செய்தல் | | ... 82 |
| | இமையவரிடும்பை | ... | ... 82 |
| | கந்த குமரன் படையெடுத்தல் | | ... 85 |
| | இந்திரனின் மகுடாபிஷேகம் | | ... 86 |
| அதிகாரம் 12. | இமையவரின் சந்ததியார் | | ... 87 |
| அனுபந்தம். | மணிமேகலை விளக்கம் | ... | ... i |
| 1. | மணிமேகலா தெய்வம் | ... | ... i |
| 2. | காந்தாரம் | ... | ... v |
| 3. | காயங்கரை ஆறு | ... | ... ix |
| 4. | சேயுயர் பூம்பொழில் | ... | ... xi |
| 5. | அசோதரம் | ... | ... xi |
| 6. | சித்திபுரம் | ... | ... xi |
| 7. | நாவலந்தீவு | ... | ... xii |
| 8. | அந்தரத்தீவு | ... | ... xii |
| 9. | பாரகம் | ... | ... xiii |

# ஆதார நூல்கள்


A. I. Ancient India. Ptolemy, Mc Crindle. 1927.

A. J. Ancient Jaffna, Mudaliar Rasanayagam.

D. T. R. Ramayana. Dutt's Translation.

Mhv. Mahavamsa. Geiger's Translation.

Y. V. M. Yalpana Vipava Malai. Brito's Translation.

சொ-ஒ. த. அ. சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி, Rev. S. Gnana Prakasar.

மணி. மணிமேகலை. டக்தா சாமிநாதையர்.

யா. வை. கௌ. யாழ்ப்பாண வைபவ கௌமுதி, க, வேலுப்பிள்ளை.

யா. வை. வி. யாழ்ப்பாண வைபவ விமர்சனம், சுவாமி ஞானப்பிரகாசர்.

யோ. யா. ச. யாழ்ப்பாணச் சரித்திரம். S. John. 3rd Edition.

# கந்தபுராணம்

இமையவர் எனப்பட்ட ஓர் பண்டைச் சனஙகளின் அதிபூர்வ கர்ணபாரம்பரியத்தின் ஓர் பாகமே கந்தபுராணங் கூறும் சரித்திரமாம்.

"மன்புனைகயிலை தன்னின் மலைமகளோடு மீண்டு
முன்பென வமர்ந்து நாதன் முழுதுல குயிர்கட்கெல்லா
மின்பமும் புணர்பு நல்கி யிமையவர் யாரும் வேண்டத்
தன்பெரு நுதற்கட் டியாற் சரவணபவனைத தந்தான்."

பாயிரப்படலம் 64

என்றார்.

கந்தபுராணத்துக் கதாநாயகனாகிய கந்தகுமரனை சிவபிரான் உதிக்கச் செய்த காரணம்,

"வெந்திற லவுணரை வீட்டுதற் கொரு
மைந்தனை யருள் கென "

திருவவதாரப்படலம் 56

இமையவர் செய்த பிரார்த்தனை என்பர்.

இதுவரையும் இவ்விமையவர் யார், இவரின் தேசம் யாது என யாராவது செவ்வனே ஆராய்ந்து விளக்கியதாகக் காணேன். நம் அறிஞர் கந்தபுராணத்துக்குக் கொடுக்கும் வியாக்கியானம் நம்பப்படக்கூடிய தன்மையுள்ளதாகத் தோன்றாமையின், அது ஓர் கற்பித கதை எனப் பலரும், பொய் எனச் சிலரும் கூறுவர். ஆனால் "புராணம்" புராதன சரித்திரமாதலின் இப்புராணததிலடங்கிய சரித்திர உண்மையை ஆராய்ந்தறிதல் பிரயோசன முள்ளதாகும்.

" ஏதிலாக் கற்ப மெண்ணில சென்றன
வாத லாலிக் கதையு மனந்தமாம்
பேத மாகுமப் பேதத்தி னுள் விரித்
தோது காந்தத்தி னுண்மையைக் கூறுகேன்."

அவையடக்கம் 15.

அதாவது, இச்சரித்திரம் எண்ணில்லாத காலத்துக்கு முந்தியதாதலால், இதைப் பலவாறு வேற்றுமைப்படுத்தி வழங்கினராயினும் முதனூலிற் கூறப்பட்ட சரித்திரம் யாதென்பதை உள்ளவாறே ஆராய்ந்து கூறுவேன் என்றார் கச்சியப்ப சுவாமிகள். இவர் கந்தபுராணத்தைத் தமிழில் அருளிச் செய்தது கி. பி. 771-ம் ஆண்டு வரையிலாயினும், அவர் கூறுவது தாம் உண்மையெனக் கண்ட ஆதிச் சரித்திரமெனக் கூறியிருப்பதால் அச்சரித்திரத்தை நாம் மதிப்புடனெடுத்தாளக் கடமைப்பட்டவர்களாகிறோம்.

ஆறுமுக நாவலரவர்களின் பதிப்புப்படி, சுப்பிரமணிய சாஸ்திரிகள், சிவசிதம்பர ஐயரவர்கள் இயற்றிய உரைகளின் உதவி கொண்டு செய்யுள்களின் பொருள் விளக்கப்படும். சில செய்யுள்களில் யான் கொடுக்கும் அர்த்தம் மேற்கூறிய உரையாசிரியரிலிருந்து வேறுபாடுள்ளது. பதப்பொருள் வேற்றுமைக் காதாரம் விசுவநாத பிள்ளையின் தமிழ்—ஆங்கில அகராதி.

9157

# அதிகாரம் 1

## பூமியின் இயற்கை

பூமியின் இயற்கையைப்பற்றிப் பண்டையோர் கூறிய வரலாறு அண்டகோசப்படலத்திற் கொடுக்கப்பட்டிருக்கிறது. (இப்படலம் அ. கோ. ப. எனக் குறிக்கப்படும்.)

வேதமொடு தந்திரமு மவற்றின்சார்பு மிருதிகளும்
பிறநூலும் வேறுவேறு
வோதிடுமண் டத்தியற்கை மலேவோவென்று லுண்மை
தெரிந்திடிற் படைப்பு முலப்பில்பேத
மாதலினு லவ்வவற்றின் றிரிபுநாடி யறிந்தவுனக்
கீண்டுண்மை யதுவே சொற்று(ம்).''

அ. கோ. ப. 66.

என்றார். அதாவது, பற்பல நூல்கள் ஒன்றோடொன்று வேற்றுமைபடக் கூறியவற்றை, அவ்வந்நூலின் வேற்றுமைகளை ஆராய்ந்து, தாம் உண்மையெனக் கொண்டவற்றையே சுவாமிகள் கூறினார்.

குறிப்பு:—படைப்பு "உலப்பு இல் பேதமாதல்"—சேதமடையாது வேறுபடல் (உண்மையாகாது). ஆகவே, (நூல்களின்) " திரிபு நாடி அறிந்த உண்மையதுவே, உனக்கு, ஈண்டு சொற்றும்" எனக் கொள்வாம்.

பூமியின் இயற்கையை கீழ் வருஞ் செய்யுள்களிற் சுவாமிகள் குறித்துள்ளார்.

### 1. பூமியின் பாகங்கள்

பலவகைப் பிலங்கட்கெல்லாம் பரமதாயுற்ற தொல்பா
ருலகினுள்விரிவு மங்கணுள்ளவு முரைப்பன் கேட்டி
குலவிய சம்பு சாகங் குசை கிரவுஞ்சங் கோதி
லிலவுகோ மேதகம்புட் கரமிவை யேழுதீவே.''

"பரவுமிவ் வுலகி லுப்புப் பாறுயிர் நெய்யே கன்ன
லிரதமா மதுநீ ராகு மெழுகட லேழுதீவும்
வரன்முறை விரவிச்சூழ மற்றதற் கப்பாற் சொன்னத்
தரையது சூழ்ந்து நிற்குஞ் சக்கரவாளச் சையம்."

"அன்னதற்கப்பால் வேலைக் கரசனும் புறத்தி லாழி
பின்னது தனக்கு மப்பாற் பேரிருள் சேர்ந்த ஞால
மன்னவ காண்டி யப்பால் வலிகெழு மண்டத்தோடு
துன்னுமிப் பொருள்கள் யாவுஞ் சூழ்ந்து கொண்டிருக்கு
மன்றே.

அ. கோ. ப. 19—21.

இச் செய்யுள்கள் சுட்டுவது பின்வருமாறு என உரை யாசிரியர் கொள்வர்.

பூமியின் மத்தியத்தில் சம்புத்தீவு
சம்புத்தீவைச் சூழ்ந்து உப்புக்கடல்
உப்புக்கடலைச் „ சாக தீவு
சாக தீவைச் „ பாற்கடல்

இவ்வண்ணம் ஏனைய தீவுகளும் கடல்களும் ஒன்றை யொன்று சூழ்ந்து நிற்கும்.

சுத்த நீர்க் கடலைச சூழ்ந்து சொன்னத்தரை
சொன்னத்தரையைச் „ சக்கரவாளமலை
சக்கரவாளமலையைச் „ புறக்கடல்
புறக்கடலைச் „ பெரிய இருள்
செறிந்த பூமி.

அதாவது, இவை ஏககேந்திர வளையங்களாயிருந்தன.

இதுவே பொதுவான கொள்கை. ஆனால் பண்டையோர் தாம் வசித்த தீவுகளும் கடல்களும் மற்றும் தேசங்களும் இயற்கையிலில்லாத நவீன வடிவமும் ஒழுங்குமுள்ளனவாயிருந்ததாகக் கூறியிருந்திருக்கமாட்டார்கள்.

கச்சியப்ப சுவாமிகளின் பாக்களும் இயற்கைக்கு மாறுன பொருளமைந்தவையல்ல என்பது சுவாமிகள் பாவித்திருக்கும் சில சொற்களிலிருந்து தெளிவாகிறது.

"சூழ்," "அப்பால்."—சில இடங்களில் "சூழ்" எனும் பதத்தையும் வேறு சில இடங்களில் "அப்பால்" எனும் பதத்தையும் சுவாமிகள் பாவித்திருக்கிறுர். இவ்விரு பதங்களும் ஒரே பொருளுடையனவல்ல.

"விரவல்," "துன்னல்."—"விரவல் = கலத்தல" "துன்னல் = கிட்டல், நெருங்கல்." இவை ஒரே இயல்பைச் சுட்டும் பதங்களல்ல.

"யாவும்."—"யாவும் = எல்லாம்". இச் சொல் எல்லாநகூடி, ஒருங்கே, எனும் இயல்பையன்றி, தனித் தனியே, ஒவ்வொன்றும் எனும் இயல்பைக் குறிக்கமாட்டாது.

ஆகவே, மேலே கொடுக்கப்பட்ட செய்யுள்களின் பொருள் பின்வருமாறு எனக் கொள்வாம்.

## ஏழு தீவும் ஏழு கடலும்

சம்பு, சாகம முதலியவை ஏழு தீவுகள்
உப்புக்கடல், பாற்கடல் முதலிய வை ஏழுகடல்கள்.

ஏழு கடல்களினதும் ஏழு தீவுகளினதும் அடுக்கைக் காட்டி,

"எழுகடல் ஏழு தீவும் வரன்முறை விரிவிச்சூழும்."

என்றுர். அதாவது,

எழுகடல் விரவி ஏழுதீவையும் வரன்முறை சூழும்.

ஏழு கடல்களேயும் ஒரு தொகையாக்கியதால் அவையே கலந்து (விரவி) ஏழு தீவுகளேயுஞ் சூழ்ந்தன எனப் பொருள் கொள்ளலே முறையாகும். இவ்வித ஒழுங்கு இயற்கைக்கு மாறுனதல்ல.

இத்தீவுகளினதும் கடல்களினதும் இயல்பைப்பற்றி சுவாமிகள் வேறு இடங்களிலுங் குறித்திருக்கிறார். அவற்றை யும் ஈண்டு கவனித்தல் தகும்.

"தள்ளரும் பரவை ஏழும்" என்றார் இந்திரனருச் சனைப் படலம் 4-ம் செய்யுளில். ஏழு கடல்களும் விரவி ஒன்றாகியதால் "தள்ள அரும்" என்றார். அதாவது ஒன்றி லிருந்தொன்றைப் பிரிக்க முடியாது.

"பொங்கு திரைப் புணரிகளின் முடிவுதோறும் புடை யுறவே வளைந்தொவ்வோர் பொருப்பு நிற்கும்" என்றார் அண்டகோசப்படலம் 58-ம் செய்யுளில். தீவுகள் கடல் களின் முடிவில் இருந்தன. கடல்களின் தொடக்கத்தைப் பற்றிக் குறியாது விட்டார். ஆகவே, சம்புத்தீவு உப்புக் கடலின் முடிவிலன்றித் தொடக்கத்தில் இருந்ததல்ல. இது ஏககேந்திர வளையக் கொள்கைக்கு மாறாகிறது.

குறிப்பு:—கடல்களின் தொடக்கம் எதுவெனப் பின் காட்டுவாம்.

"ஏழுநேமியும் பெரும்புறக்கடலு மெண்டிசையுஞ் சூழ" பெரும் பாலை (சுரம்) இருந்ததென சரம்புகு பட லம் 2-ம் செய்யுளிற் குறித்தார். ஏழு கடல்களும் புறக் கடலும் சுரத்தைச் சுற்றி எட்டு வளையங்களாக இருந்தன வாயின் உள் வளையத்தை மாத்திரம் குறித்தாற போதுமே! இவை வளையங்களாயின் "எட்டுத் திக்கிலும்" எனக் குறிக்க அவசியமில்லையே! "சூழ" எனும் பதமே போதிய தல்லவா?

ஆகவே, வெவ்வேறு தீவினருகில் வெவ்வேறு பெய ரால் வழங்கப்பட்டாலும் ஏழு கடல்களும் விரவி ஒன்றா யிருந்தன. இக்கடலில் ஏழு தீவுகளும் இருந்தன. தீவு

களைச் சுற்றிக் கடலிருந்ததன்றி, கடலைச் சூழ்ந்து தீவுக ளிருந்ததில்லை.

மேலும், "அற்று அதற்கு," அத்தன்மை பொருந் திய (விரவிய) அதற்கு, என்று எழு கடல்களையும் ஒரு மையில் சுட்டினர்.

## சொன்னத் தரையும் சக்கரவாள மலையும்

"அற்றதற் கப்பாற் சொன்னத்தரையது சூழ்ந்து நிற் குஞ் சக்கரவாளச் சையம்" எழு கடல்களுக்கும் அப்பால் (சூழ்ந்து என்றுரல்ல) சொன்னத்தரையானது சூழ்ந்திருக் கின்ற சக்கரவாள மலை: அதாவது, சொன்னத்தரையினூற் சூழப்பட்ட சக்கரவாளமலை.

குறிப்பு:—சொன்னத் தரையது = சொன்னத் தரை யானது.

## புறத்திலாழி

"அன்னதற் கப்பால் வேலைக் கரசனும் புறத்திலாழி." சக்கரவாள மலையைச் சுட்டி, "அன்ன"—அத்தன்மை பொருந்திய (சொன்னத் தரையாற் சூழப்பட்ட) "அது" என்றூர். அப்பால் (சூழ்ந்து என்றுரல்ல) புறக்கடல்


## பேர் ஞாலம்

"பின்னது தனக்கு மப்பாற் பேரிருள் சேர்ந்த ஞாலம்." புறக்கடலுக் கப்பால் (சூழ்ந்து என்றுரல்ல) இருள் சேர்ந்த பெரிய ஞாலம்.

"அப்பால் வலிகெழு மண்டத்தோடு." பெரிய ஞாலத் துக் கப்பால் (சூழ்ந்து என்றுரல்ல) அண்டகோள ஓடு.

## இவற்றின் நிலை ஒழுங்கு

"துன்னும் இப்பொருள்கள் யாவும் சூழ்ந்து கொண் டிருக்கும்."



N
காயங் கரை ஆறு
புறக்கடல்
குசாத்துறை
செந்தி
சுவர்க்கம்
பொன்னகர்
பாலை
செய்நலூர்
(காந்தாரம்)
(யாழ்ப்பாணம்)
ஏழு தீவுகள்
சம்பு (நயினா)
ஏழு கடல்கள்
பாக்கு நீரிணை
✳ ஏழாற்றுப் பிரிவு
2 சாகம்
3 குசை
4 கிரவுஞ்சம்
5 இலவு
6 கோமேதகம்
7 புட்கரம்
மன்னார்
சொன்னக்கரை
(இலங்கை)
சக்கரவாள மலை
புறக் கடல்
இருள் கடல்
சொன்ன தரை

"எழு கடல்.........விரவிச் சூழும்" எனக் கூறிய பின் அப்பால், அப்பால் எனக் குறிக்கப்பட்டவைக்குத் தனித்தனியே பயனிலை கூருது இவை எல்லாவற்றையும் தொகுத்து "இப்பொருள்கள் யாவும் சூழ்ந்து கொண்டிருக்கும்" என்ருர். அதாவது, அடுத்தடுத்து இருக்கும் (துன்னும்) சொன்னத்தரையினைச் சூழப்பட்ட சக்கரவாள மலை, புறக்கடல், பெரிய ஞாலம், அண்டகோள ஓடு எனப்பட்ட பொருள்கள் எல்லாம் கூடி (தனித்தனியே அல்ல) முன் கூறப்பட்ட எழு கடலைச் சுற்றி உள்ளன.

## 2. பாகங்களின் நிரூபணம்

மேற் குறிக்கப்பட்ட பொருள்கள் பூமியின் கண் எது எதுவென ஈண்டு நிரூபிப்பாம்.

### சொன்னத் தரை

சொன்னத் தரை எனப்பட்டது ஈழம், இலங்கை. "ஈழம் = பொன் = சொன்னம்" இப்பெயரே போதிய சான்ருகும். பாவை வழக்கில் இலங்கை சொன்ன லங்கா எனப் படுவதை அறிவோமே. இதன் ஓர் பாகமாகிய யாழ்ப்பாணக் குடா நாடு "பொன்னிலுடு" எனப்பட்டதென பின் நிரூபிப்பாம். (அதிகாரம் 8).

### சக்கரவாள மலை

சக்கரவாள மலை இலங்கையின் வடமேற் பாகத்திலிருக்கும் மாந்தைக் கருகிலிருந்த தெனச் சங்கப் புலவரின் கவித்திரட்டாகிய குறுந்தொகையிலிருந்து வெளிப்படுகிறது.

"முறை அதி யானை யுண்குருகின் கானலம்
பெருந் தோட்ட மள்ளரார்ப் பிசைவெரூஉங்
குட்டுவன் மாந்தை யன்ன."

பெருந்தோட்டம் = மாதோட்டம் = மாந்தை.

இவ்வடிகள் இலங்கையிலிருக்கும் மாந்தையைச் சுட்டுவ தாகக் காட்டியவர் முதலியார் இராச நாயகம் அவர்கள். ஆனால் அவர் "யானை யுண்குருகின் கானலம்" எனப்பட்டது ஆனைகள் மேயும் வனம் எனப் பொருள் கொண்டார் (A. J. p. 21).

"யானை உண் குருகு" ஓர் பட்சியின் பெயர். இப் பட்சி "சக்கரம்" "சக்கரவாகப் புள்" எனவும்படும். வால்மீக இராமாயணத்தில் இது "சிங்க" எனப்பட்டிருக்கிறது; ஆனை திமிங்கலம் முதலியவற்றைக் காவித் தன் கூடு சேர்த்து உண்ணும் (D. T. R. p. 817). சக்கரவாகப் புளளின் இருப்பிடமாகிய ஓர் காடு மாந்தைக் கருகில் இருந்த தென்பது இதனால் திண்ணமாகிறது. அங்கே சக்கரவாளமலை இருந்திருக்க வேண்டும். சக்கரவாளமலை = சக்கரவாகமலை: வாள் = ஒளி; வாகு = அழகு.

குறிப்பு :— தொலமி கலிப (Galiba) மலை எனக்குறித்தது (A. I. p. 249) இது போலும். "கல் இபம்" = மலை (யில் வசிக்கும) யானை (யுண்குருகு).

திருக்கைலாசப்படலம் 13-ம் செய்யுளில் ஆழியங்கிரி (சக்கரவாள மலை) கயிலாசத்தின் ஓர் எல்லையாயிருந்த தெனப்பட்டிருக்கிறது. கயிலாசம் மாந்தை (திருக்கேதீஸ்வரம்) எனப் பின் நிரூபிப்பாம். (அதிகாரம் 6).

ஆகவே, சக்கரவாளமலை இலங்கையிலிருந்தது என்பது நிராட்சேப நிரூபணமாம். இலங்கையைச் சுற்றி அது இருந்ததல்ல.

குறிப்பு :— இலங்கையின் பெயராகிய "சிங்களம்" "சிங்க" எனப்பட்ட பட்சியிலிருந்தே உற்பத்தியானது. இராமாயணத்தில் வழங்கப்பட்ட "சிங்கிகா" எனும் பெயரும் இவ்வண்ணமே.

## புறத்தில் ஆழி

இலங்கையை அடுத்திருக்கும் சமுத்திரம் இந்து சமுத்திரம்.

திருக்கைலாசப்படலம் 13-ம் செய்யுளில் "பெருஞ் சலதி" கயிலாசத்தின் எல்லைகளுளொன்ருகக் குறிக்கப்பட்டிருக்கிறது. "பெருஞ் சலதி" எனப்பட்டது புறக்கடல், இந்து சமுத்திரம். இது மாந்தைக்குத் தென்மேற்கிலிருக்கிறது—மாந்தையே கயிலாசம் எனப் பின் நிரூபிப்பாம். (அதிகாரம் 6). மாந்தைக்கருகில் சக்கரவாளமலை இருந்ததாகக் காட்டினும் ஆகவே,

"சொன்னத், தரையது சூழ்ந்து நிற்குஞ் சக்கரவாளச் சையம், அன்னதற் கப்பால வேலைக்கரசனும் புறத்திலாழி" எனப் புலவர் கூறியபடியே இயற்கையிலிருக்கிறது.

## பேர் ஞாலம்

"பேரிருள் சேர்ந்த ஞாலம்" என்றதை "இருள் சேர்ந்த பேர் ஞாலம்" எனக் கொள்வாம். அண்டகோசப் படலம் 24-ம் செய்யுளில் இதன் அளவு 35 கோடி 19 இலட்சம் 40 ஆயிரம் யோசனை என்ருர். அதாவது, தீவுகளைப் பார்க்கவும் சொன்னத்தரையைப் பார்க்கவும் இருள் நிலம் அதிவிசாலமானது.

ஆகவே, பூமியின் அதி பெரிய பாகமே "பேரிருள் சேர்ந்த ஞாலம்" எனப்பட்டது என்பது தெளிவாகிறது. இது இந்து சமுத்திரத்தை அடுத்திருக்கும் இந்தியா.

"வருந்திய வமரர்தம்மை மனப்படத் தேற்றி நாளுந
திருநதலன் பணித்தவேவல் செய்திடத் தூண்டிவான்மே
விருந்தனன்சயந்தனென்போ னிரு நிலத்திடைமுன்போன
புரந்தரன் செய்த தன்மை யானினிப் புகலுகின்றேன்.

இந்திரன் கரந்துறை படலம் 38.

சயந்தன் = இந்திரன் மகன். இரு = பெரிய.

சிதம்பரத்துக்குச் சமீபத்திலிருந்த சீகாழிக்கு இந்திரன் ஒளித்தோடியதைச் சுட்டி "இரு நிலத்திடை முன் போன" என்றார். ஆகவே இரு நிலம் எனப்பட்டது இந்தியா.

பேர் ஞாலம் இருள் சேர்ந்தது என்றார். இதிலிருந்து, அதிபூர்வ காலத்தில பண்டையோர் இந்தியாவை இருட் கண்டமென வழங்கினரென்பது தெளிவாகிறது. ஒளி பொருந்திய ஓர் இடமும் இருந்ததென இத்தாலறிய வருகிறது. இது எதுவென பின் தெளிவாகும்.

நமது காலத்தில் ஆபிரிக்கா இருட்கண்டமெனப் பட்டது ஈண்டு கவனிக்கப்படத்தக்கது.

## ஏழு கடல்

"துன்னுமிப் பொருள்கள் யாவுஞ் சூழ்ந்து கொண்டிருக்கும்"

இதுவரையும் நிரூபிக்கப்பட்டபடி, ஒன்றிற கொன்றடுத்திருக்கும் சொன்னத்தரை—இலங்கை, புறத்திலாழி—இந்து சமுத்திரம், பேர் ஞாலம்—இந்தியா, இவையெல்லாம் கூடி சூழுவது பாக்கு நீரிணை என்பது உள்ளங் கையி நெல்லிக் கனிபோலாம்.

பாக்கு நீரிணையே ஏழு கடல.

பாக்கு நீரிணையில் இன்றும் "ஏழாற்றுப் பிரிவு" எனப்படும் ஓர் இடம் இருப்பது இதுவே ஏழுகடல் என்பதற்குப் போதிய சான்றாகும்.

பண்டைக்காலத்தில் "ஏழு கடல்", "ஏழு நதி" "சிந்து" எனப்பட்டது.

'சுற்றுறு மெழுநதி யிமையத் தொல்கிரி, யுற்றனர்.''

வரைபுனைபடலம் 29.

''சேர்த்த நான்முக னுறங்குழிச் சிந்துவூடழுந்திப்
பேர்த்து ஞாலம் விட் டெழுதரு மேரு''

மகேந்திரஞ் செல்படலம் 3.

''சிந்து'' என்னும் பதத்துக்கு ''ஆறு'' எனவும் ''கடல்'' எனவும் பொருள் உண்டு. ஈண்டு ''எழு நதி'' எனப்பட்டது ''எழு கடல்'', பாக்கு நீரிணை. உமாதேவியின் கல்யாணத்துக்கு பாக்கு நீரிணையில்வசித்த சனங்கள் வந்தார்கள். கலியாணம் நிறைவேறியது இமையத்திலாதலால ''எழு நதி இமையத் தொல்கிரி உற்றனர்'' என்றார். இவ் இமையம் பாககு நீரிணையிலிருந்ததெனப் பின் நிரூபிப்பாம் (அதிகாரம் 5). ''சிந்து'' விலிருந்ததாகக் கூறப்பட்ட மேருவும் பாக்கு நீரிணையிற்றான் எனப பின் நிரூபிப்பாம் (அதிகாரம் 4). ஈண்டு சிந்து எனப்பட்டது கடல்.

ஏழாற்றுப் பிரிவு.—ஒவ்வோர் கடலின் முடிவில் ஒவ்வோர் தீவு இருந்ததெனக் கவனித்தாம். புலவர், முடிவைப் பற்றிக் கூறினாரன்றித் தொடக்கத்தைப்பற்றிக் கூறாதுவிட்டார். எழு கடல்களும் தொடங்கிய இடம் ஏழாற்றுப் பிரிவு. இது நயினாதீவுக்கு வடகிழக்கே யிருக்கிறது. இதினுற்பத்தியைப்பற்றிய ஓர் கட்டுக்கதை உண்டு. இக் கதையில் அதி பிரயோசனமுள்ள குறிப்புகளடங்கியிருப்பதால் அவற்றை ஈண்டு கவனிப்பாம்.

இராமரின் முன்னோனாகிய சகரன் எனப்பட்ட ஓர் அயோத்திய அரசன் இருந்தான். அவன் யாகஞ் செய்ய எண்ணி நேர்ந்துவிட்ட குதிரையை இந்திரன் களவாடி மறைத்து வைத்தான். குதிரையைத் தேடிப்பிடித்து வரும்

படி தன் அறுபதினுயிரம் புத்திரரைச் சகரன் அனுப்பி ஞன்.

அவர்கள் எங்குந் தேடியும் குதிரையைக் காணுது, அதைத் தேடிப் பூமியைத் தோண்டினார்கள். சம்புத்தீவைச் சுற்றவரத் தோண்டினர்கள். தோண்டியபோது ஆழத்தினின்று நீர் தோன்றிப் பாய்ந்து சத்த சாகரமாயிற்று. சத்த சாகரமே எழுகடல்.

அவர்கள் கடைசியாகத் தோண்டியது சம்புத்தீவின் வடகிழ்ப் பக்கம். (D. T. R. p 99).

எழாற்றுப்பிரிவு நயினுதீவின் வடகிழ்ப் பக்கத்திலிருக்கிறது. நயினுதீவே சம்புத்தீவென பின் நிரூபிப்பாம். (அதிகாரம் 2).

பாக்கு நீரிணைக் கடலில் ஓர் இடத்தில் நீரானது ஊற்றுப்போல் கிளம்பி அட்டதிக்கும் பரந்து பாய்வதைக் கவனித்த பண்டையோர் கடலின் அடியில் ஓர் துவாரம் உண்டு, துவாரத்தைத் தோண்டியவரும் உண்டு, தோண்டியதற்குக் காரணமும் உண்டு என்று ஓர் கட்டுக்கதையை உண்டாக்கினார்கள். கட்டுக் கதையாயினும் இது இயற்கையிற் காணப்படும் ஓர் நூதன காட்சியோடு சேர்ந்தது.

இக்காட்சியைப் பண்டையோர் கட்டுக்கதையோடு மாத்திரம் விடாது இந்நீரூற்றின் விவரத்தையும் சொல்லிக் காட்டினர். இவ்வூற்று எழு தீவுகளின் மத்தியிலிருப்பதாலும் அட்டதிக்கும் பரந்து பாய்வதாலும் அது எழு ஆறுகளின் தொடக்கம், எழு ஆறுகளும் பிரிந்து ஒவ்வோராறும் ஒவ்வோர் தீவைச் சூழ்ந்து பாய்கிறதென்று சொல்லி ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு பெயரிட்டு வைத்தனர். பண்டையோர் ஆற்றையும் "சிந்து" என்றூர் கடலையும் "சிந்து"

என்றார். "ஏழாறு" என்றலென் "எழுகடல்" என்றலென் பண்டையோர் சுட்டியது பாக்கு நீரிணையாம்.

இவ்வண்ணம் பண்டையோர் சொல்லிக் காட்டியதையே கச்சியப்பசுவாமிகள்

"எழுகடலேழுதீவும், வரன்முறை விரவிச் சூழும்"
"பொங்குதிரைப் புணரிகளின் முடிவு தோறும் புடையுறவே வளை தொவ்வோர் பொருப்பு நிற்கும்"

என்றார்.

சுவாமிகள் இவ்வண்ணங்கூற உரை ஆசிரியா, தீவுகளைச் சூழ்ந்து வளைந்து நின்ற கடல்களை வளையங்களாக்கினர்.

தள்ளரும் பரவை ஏழையும் பிரித்து வெவ்வேறாக்கினர். ஏழு வளையங்களாக்கினர்.

சம்புத்தீவை உள்ளபடியே உப்புக்கடல் வளையத்துக்குள் விட்டிட்டு ஏனைய ஆறு தீவுகளையும் வளையங்களாக்கி ஏழு கடல்வளையங்களுக்கு மிடையிடையே புகுத்தி விட்டு, அதற்கிணங்க,

"சொன்னத்தரையது சூழ்ந்து நிற்குஞ் சக்கரவாளச் சையம்" என்றதைக் கவிழ்த்து உரை கூறி,

"அப்பால" என்றதைச் "சூழ" ஆக்கி,
"யாவும" என்றதை "ஒவ்வொன்றும்" ஆக்கி,

பூமியினியற்கையை இயற்கைக்கு மாறாக விளக்கி, "பூர்வ ரூபம் பாழுடைத்தாய்த் திரிபுபெற்ற" தற்கால ரூப மாகிற்றென்பா.

பலரும் இவை ஒன்றையொன்று சூழும் ஏககேந்திர வளையங்களெனக்கூற, சுப்பிரமணிய சாஸ்திரிகள் பூகோளத்தின் வடபாதி சம்புத்தீவு தென்பாதியில் ஏனைய பொருள்கள் வளையங்களாக ஒன்றின் தெற்கே ஒன்றாக இருந்தன என்பர்.

## சத்த தீவுகள்

எழுகடல் பாக்குநீரிணையாதலின், சம்பு சாகம் முதலிய ஏழு தீவுகளும், என் தந்தையாகிய யோன் ஆசிரியர்

"இந் நாட்டின் (யாழ்ப்பாணத்தின்) உதரக்கனிகள் போல விளங்கும் ஊர்காவற்றுறைத்தீவு, காரைதீவு, எழுவை தீவு முதலாஞ் சத்த தீவுகள்" (யோ. யா. ச. ப. 3) எனக் குறித்த பாக்கு நீரிணைத் தீவுகளன்றி வேறாகா.

ஏழு தீவுகளும் ஓர் கூட்டமாக இருந்தன எனப் பண்டையோர் சொல்லிக்காட்டியதையே புலவர் "குலவிய" என்றார். "குலவிய" என்றதால அவை ஒன்றின்மே லொன்றாக இருந்ததல்ல எனக் காட்டி "பரவு மிவ்வுலகில்" என்றார்.

"பரந்து கூடு மண்டலங்கள்" என திருக்கைலாசப் படலம் 11-ம் செய்யுளில் வருவதும் இவ்வியல்பையே குறிக்கிறது.

## பெரு நேமி

ஒவ்வோர கடலின் முடிவிலிருந்த பொருப்பைக் குறித் திருக்கும் வண்ணம் ஏழு கடல்களும் விரவியதால் உண் டாகிய பெருங்கடலின் முடிவிலிருந்த பொருப்பையும் சுவாமிகள் குறித்திருக்கிறார்.

"பொங்குதிரைப் புணரிகளின் முடிவுதோறும் புடையுறவே
வளைந்தொவ்வோர் பொருப்பு நிற்கு
மிங்குளதோர சாகமுதற் றீபமுற்று மிருக்கு நர்க்கு நரை
திரை மூப் பின்ன வில்லை
யங்கவர்கள் கலியினுங்கிம் புருடர் தன்மை யடைவர்
பதினுயிர மாண்டமர்வ ரப்பாற்
றங்கியது தபனியப்பா ரதனைச் சூழ்போய்த் தடம்
பெருநே மிப் பொருப்புச் சார்வுற் றன்றே."

அ. கோ. ப. 58.

" அப்பாற்றங்கியது தபனியப்பாரதனைச் சூழ்போய்த் தடம்பெரு நேமிப்பொருப்புச் சார்வுற்றன்றே" என்றதை, சுப்பிரமணிய சாஸ்திரிகள் " அப்பால் தங்கியது தமனியப் பார; அதனைச் சூழ்போய் தடம் பெரு நேமி பொருப்பு சார்வுற்று அன்று" எனக்கொண்டு அப்பால் இருப்பது பொற்பூமி (தமனியப்பார்). அதனைச் சூழ்ந்து விசாலமான பெரிய சக்கரவாள மலை (நேமிப் பொருப்பு) உள்ளது எனப் பொருள் கூறியுள்ளார். ஆனால், " தடம் பெரு நேமி பொருப்பு தபனிய பாரதனை (பாரை) சூழ்போய் சாரவுற்று தங்கியது," எனக்கொள்ளலே முறையாகும். " அன்றே" அசைச்சொல்.

" பொருப்பு" எனும் பதம் முதலாம் அடியில் "கடற் கணையாக உயர்ந்திருக்கும் திடரை" ச் சுட்டுவது போலவே நாலாம் அடியிலும் " நேமி" க் கணையாக இருக்கும் திடரைச் சுட்டுவதாகக் கொள்ளப்படலாம். நேமி = கடல். இப்படியே கொள்வாம்.

குறிப்பு:—சக்கர வாளமலை யாதொரு பொருளையும் சூழ்ந்திருக்கவில்லை என முன் காட்டப்பட்டது.

தபனிய பார:—ண்டு " தபனியப் பார்" எனப்பட்டது பொற்பூமி (சொன்னத் தரை) அல்ல. " தபனம் = வெப்பம்" ஆகவே " தபனிய பார" = வெப்பமுற்ற பார் (பாரகம்).

" ஆவதோர் காலையீசனறுமுக நுதற்கண் மாட்டே
மூவிரு பொறிகடோன்றி முளரியான் முதலாவுள்ளோ
ரேவரு மணுகல் செல்லா வெல்லைதீர் வெம்மைத்தாகிப்
பூவுல கண்டமுற்றும் பொள்ளெனப் பராயவன்றே.

திருவவதாரப் படலம் 45.

இப் பொறிகளால்,

" பக்கன பாரகம் பதலை முற்றுற
நெக்கன பணிகண் மெய் நெளித்து நீங்கிய
திக்கய மரற்றியே தியக்க முற்றன
தொக்கன வுயிர்த் தொகை துளக்கமுற்றவே,
திருவவதாரப் படலம் 49.

"பாரகம் பக்கன, பதலை முற்றுற நெக்கன" என்றதற்கு "பூமி பிளவுபட்டது, மலைகளெல்லாம் வெடித்தன" என சுப்பிரமணிய சாஸ்திரிகள் பொருள் கூறியுள்ளார். ஆனால் "பக்கன" எனும் பதத்தின் அடி "பக்"-"வே" எனக் கருதும் வடமொழி. ஆகவே, பாரகம் வெந்தது, வெப்ப முற்றது எனக் கொள்வாம். "பதலை நெக்கன"=மலைகள் உருகின.

"தபனியப் பார்" இவ்வெப்பமுற்ற பாரகத்தைச் சுட்டுகிறது.

"பார்" "பாரகம்" எனப்பட்டது பூமி முழுதும் அல்ல. "பூவுல கண்டமுற்றும் பொன்னெனப் பராய வன்றே" என்றதிலும் "பூவுலகு அண்டம் முற்றும்" தீவுகளை மாத்திரம் சுட்டுகிறதன்றி பூமி முழுவதையும் அத்துடன் வேறு அண்டங்களையும் சேர்த்துச் சுட்டுவதல்ல. ஏனெனில்,

" மேதினி சூழ்ந்து விண்போய்
மூதண்டங்காறுஞ் சென்ற முதல்வன் கண்ணுதலிற் செந்தீ."
திருவவதாரப் படலம் 46.

என்றதில் முன் "பூவுலகண்ட முற்றும்" என்றதையே ஈண்டு மேதினி என்றார். "முதல்வன் கண் நுதலின் செந்தீ" மேதினியைச் சூழ்ந்து, (பின்னர்) "விண்"ணுக்குச் சென்று, (பின்னர) "முது அண்டம்" வரையும் பரந்தது எனறதில் "விண்" எனப்பட்டது சுவர்க்கம்—இது யாழ்ப்பாணம் என பின் நிரூபிப்பாம் (அதிகாரம் 8),

"முதுஅண்டம்" எனப்பட்டது இலங்கைத் தீவு. அதாவது, அக்கினிப் பொறிகள் ஏழு தீவுகளிலும் பரந்து, யாழ்ப்பாணக் குடாநாடு சென்று அங்கும் பரந்து இலங்கை வரையும் போயின, என்பதே கர்ணபாரம்பரியத்திலிருந்தது. இது இயற்கையோடு இணங்குகிறது. இக் கர்ணபாரம்பரியத்தை அமைத்தே சுவாமிகள் கூறியிருக்கின்றார்.

"முது அண்டம்" என இலங்கையைக் குறித்ததிலிருந்து, தீவகளையே பண்டையோர் அண்டங்கள் என்றார் என வெளியாகிறது.

ஆகவே "பூவுல கண்டமுற்றும்" என்றது சத்த தீவுகளைச் சுட்டுகிறது.

"கண்ட நஞ்சுடைய வண்ணல் கருணைசெய் தினிநீ யேனை
யண்டமுஞ் சென்று நாடி யானை யாலகிலம் யாவு(ம்)."

திக்குவிசயப் படலம் 132.

என்றதாலும் "அகிலம்" (பூமி, பூவுலகு) ஓர் அண்டத் திரட்டு (குலவிய அண்டங்கள்) எனக் குறிக்கப்பட்டது.

ஆனாலும் "பூவுலகு" எனப் பண்டையோர் வழங்கியது அண்டங்கள் எனப்பட்ட தீவுகளை மாத்திரம் அடக்கியதல்ல. தீவுகளிருந்த கடலகளும் அப்பெயருள் அடங்கின.

"பூவுலகிடையே போந்து புணரி யொன்றகன்று மற்றைத்
தீவினை யொருவிச் சூரன் சேனைமாநீத்தஞ் சூழ
மாவொடு புவனி போற்ற வரி யராவணையி னேமிக்
காவலனுறுபில் கூர் பாலின் கடலிடைக்கடிது புக்கான்."

திக்குவிசயப் படலம் 73.

என்றதால் பண்டையோர் பூவுலகென வழங்கியது புணரிகளும் தீவுகளும் சேர்ந்த இடம் எனக் குறிக்கப்பட்டது.

ஆகவே தபனியப் பார் எனப்பட்டது ஏழுதீவுகளும் ஏழுகடலுமாம்.

ஏழு தீவுகளும் ஏழுகடலும் பாக்கு நீரிணையும் அங்குள்ள தீவுகளுமாதலின், பாக்கு நீரிணைக் கரையைச் சுட்டியே " அப்பாற் றங்கியது தபனியப்பாரதனைச் சூழ்போய்த் தடம் பெரு நேமிப்பொருப்புச் சார்வுற்றன்றே " என்றார். மேலும்,

" நேமிவரை யதற்கிப்பாற் சுடரே யப்பா னிசிப்படலஞ்
செய்ய மணி நிறனே மன்னர்
காமருசீ ரியக்கரிராக் கதரே வெம்பேய்க் கணங்களமர்ந்
திடுவர் திசைக் கடவு ளோருந்
தாமுடைய மாதிரத்தின் மேருவின்கட் டங்குதல்போல்
வைகுவரங் கதனுக் கப்பா
லேமமுறு புறக்கடலங் கதனுக் கப்பா லிருளாகு
மதற்கப்பா லெய்து மண்டம்,

(அ. கோ. ப. 58)

என்றதில தபனியப்பாரைச் "சுடர்" எனக்குறித்து, அது நேமி வரை (நேமிப் பொருப்பு, பெருங்கடலின் கரை)க்கு இப்பால் என்றும், நேமிவரைக்கப்பால் " நிசிப்படலம் " (சொன்னத்தரை, பொற் பூமி: நிசி = பொன்) என்றும், அதற்கப்பால் " புறக்கடல்," அப்பால் " இருள் " ("பேரிருள் சேர்ந்த ஞாலம்," இருள் நிலம்) என்றும் பூமியின் இயறகையை சுவாமிகள் தெளிவாக்கிஞர்.

" நிசிப்படலம்".—நிசிப்படலம் என்றதற்கு சுப்பிரமணிய சாஸ்திரிகள் " இருட்படலம் " எனப்பொருள் கொண்டார். இப்படியாயின் புறக்கடலுக்கப்பால "இருள்" இருந்ததென சுவாமிகள் திரும்பவும் இருளைக் குறித்திருக்கமாட்டார். அதுவுமன்றி, நிசிப்படலத்தின் விபரமாகவே " செய்யமணி நிறனே " என்று அதன் நிறத்தையும், " மன்னர் காமருசீரியக்கர் இராக்கதரே " என்று அவ்

விடத்து அரசனையும் குறித்தார். திக்குப்பாலகரும் வசிக்கு மிடங்கள் அங்கிருந்தன என்றார். இராட்சதர், இயக்கர், தேவர் இலங்கையில் வசித்தார்கள் என இராமாயணத்தி லும், இயக்கர், தேவர் வசித்தார்களென மகாவம்சத்திலும் குறிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே "நிசிப்படலம்" சொன்னத் தரையாகிய இலங் கையன்றி வேறல்ல.

சூரபன்மன், பாற்கடலிற் றுயில்கூர் விஷ்ணுவைத் தோற்கடித்த பின் (திக்குவிசயப்படலம் 73—99.)

"ஆழியங் கிரியின் காறு மகலிட வரைப்பு முற்றச்
சூழுற நாடிப் போந்து." (திக்குவிசயப் படலம 100.)

துறக்கம் புக்கான் எனப் பட்டதில் இப் பெரு நேமிக் கரையின் ஓர் பகுதியே "அகலிட வரைப்பு" (பூமியின் எல்லை) எனப்பட்டது. அதாவது சூரபன்மன் பாற்கடல் தொடக்கம் சக்கரவாள மலைவரையும் இருந்த கடற்கரை யைச் சோதித்தான். (சோதித்தநின் நியாயம் பின் கூறு வாம்—அதிகாரம் 8). ஈண்டு அகலிடம் (பூமி) எனப்பட் டது பாரகம்: பூமி முழுதுமலல.

குறிப்பு:—சுப்பிரமணிய சாஸ்திரிகள் கொள்ளுகிறபடி "நேமிவரை" சக்கரவாளமலை எனக் கொண்டாலும் அது மாந்தைப் பகுதியிலாதலால் அதற்கு இப்பால் பாக்கு நீரிணையும் அதன் தீவுகளும் (தபனியப்பார்) அப்பால் இலங்கையும் (நிசிப் படலம்) இருக்கின்றன.

"நேமிப் பொருப்பு" தானும் சக்கரவாளமலை எனக் கொள்ளப்படின் "அப்பால், பெருதடம் (பெருங்கரை) தபனிய பாரைச் சூழ்போய் நேமிப்பொருப்பைச் சார்வுற்று (கிட்டி) தங்கியது" எனக் கொள்க.

## தொல் பாருலகு

பார், பாரகம், பூவுலகு, மேதினி, அகிலம், அகலிடம் எனச் சுவாமிகள் சுட்டியது ஏழு தீவுகளும் ஏழு கடல்களு மடங்கிய இடமெனவும் இது பாக்கு நீரிணையும் அதிலிருக்கும் தீவுகளுமன்றி பூமி முழுதுமல்லவெனவும் தெளிவாக்கினும்.

தொல் பாருலகு (அ. கோ. ப. 19) எனக் குறிக்கப்பட்டதும் இதுவே.

" சூழறு சம்புத்தீப முதலா வண்டச் சுவர்காறும்
புவி யென்பர் தொல்லையோரே."

அ. கோ. ப. 60.

என்றதால் பண்டையோா பூமி முழுதையும் புவி என வழங்கிலா எனச் சுவாமிகள் குறித்தார்.

தொல்லையோர " பார " என வழங்கியது புவியின் ஓர் பாகம். அது ஓர் தேசம். இத்தேசத்தையே புலவர் பாருலகு (உலகு = நாடு) என்றார். திருச்செந்திப் படலம் 13-ம் செயயுளில் பொன்னிறுடு " பொன்னுலகு " எனப் படுவது ஈண்டு நோக்கற்பாலது.

" தொல் பாருலகு " என்று " தொல் " எனும் விசேஷணம் சேர்க்கப்பட்டிருப்பதாலும் " பாருலகு" பூமி முழுதையும் கருதவில்லை யென்பது தெளிவாகிறது. "பழைய" பூமி "புதிய" பூமி என்று இருபூமிகளில்லை. பழைய நாடு புதிய நாடு என்பதில் வழு இல்லை.

" மண்" (திருவிளையாட்டுப் படலம் 6) "மண்ணுலகு" (எதிர் கொள் படலம் 19) எனக் குறிக்கப்பட்டதும் ஏழு தீவே.

## பாதலங்களும் மேலுலகங்களும்

கந்தபுராணக் கதையுடன் சேர்த்துக் கூறப்படும் நரகங் களைப்பற்றியும், பிரமபதம், விஷ்ணுலோகம், சிவலோகம் (அ. கோ. ப. 65) முதலிய மேலுலகங்களைப்பற்றியும், பின் கவனிப்பாம். (அதிகாரம் 9). சுவா லோகமெனப்பட்டது பொன்னுலகு—சுவாக்கம் (அ. கோ. ப. 64.)

நரகங்களெனப்பட்டவை சீர் திருத்தத்திற் குறைந்த வாகளின் வாசமும், மேலுலகங்களெனப் பட்டவை அறிவி லுயர்ந்தவாகளின் வாசமுமெனக் கொள்வாம்.

### அளவுகள்

இவை வீண்தோற்ற மானவை.

### பொழிப்பு

பண்டையோா பூமியைப் புவி என்றூா.

புவியின் பிரிவுகளாகப் பண்டையோா வழங்கியி நப் பது:—

1. பாருலகு (மண்)—
   எழு தீவுகள் } பாக்கு நீரினையும் தீவுகளும்.
   எழு கடல் }
2. சுவா லோகம் (விண்). சுவர்க்கம்—யாழ்ப்பாணம்.
3. சொன்னத்தரை (முது அண்டம்)—இலங்கை.
4. புறக்கடல்—இந்து சமுத்திரம்
5. பேர் ஞாலம் (இருள்)—இந்தியா.

கந்தபுராணத்திற் கொடுக்கப்பட்டுள்ள பூமியின் இயற் கை வரலாற்றில், பண்டையோர் கர்ணபாரம்பரியமாசச்

சொல்லிக்காட்டிய விவரங்கள் அடக்கப்பட்டுள்ளன. அள வுகளோ வீண்தோற்ற மானவை.

இவ்விவரங்களைக் கச்சியப்ப சுவாமிகள் திட்டமாகவும் தெளிவாகவும் குறித்திருக்கிறார்.

இவ்விவரங்களிலிருந்து, சொற்களின் பொருள் காலாந் தரத்திற்றிரிபுற்றதென அறியவருவதன்றி பூமியின் பாகங் களாக இருந்த பொருள்களின் வடிவம் திரிபுபெற்றதாகக் காணேம்.

# அதிகாரம் 2

## சத்த தீவுகள்

### தனித்தனி நிருபணம்

பாக்கு நீரிணையிலிருக்கும் சத்ததீவுகளே, கந்தபுராணம் சுட்டும் எழுதீவுகள் என நிருபித்தாம். ஈண்டு புராணத்திற் குறிக்கப்பட்ட பெயர்கள் ஒவ்வொன்றும் எவ்வெத் தீவினது என நிரூபிப்பாம்.

இத்தீவுகளின் புராணப்பெயர் சம்பு, சாகம், குசை (குசம்), கிரவுஞ்சம், இலவு (சான்மலி), கோமேதகம், புட்கரம்.

தற்காலப் பெயர் ஊர்காவற்றுறைத் தீவு, காரைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினை தீவு.

## சம்பு தீவு

சம்பு தீவு உப்புக்கடலால் சூழப்பட்டிருந்தது.

"சம்பு தீவு, ஆறு தீவுகளாற் சூழப்பட்டிருக்கும் வட்ட வடிவமான மத்திய தீவு. அங்கு நாவல் மரம் மிகுந்தமையின் இப்பெயர் பெற்றது."

உப்புக்கடற் தீவு.—அநுமார் சீதையைத்தேட இலங்காபுரிக்குப் போனபோது உப்புக்கடலிலிருந்த "மைநாக" எனும் மலையைத் தொட்டுப் போனார் என வால்மீக இராமாயணத்திற் குறிக்கப்பட்டிருக்கிறது. (D. T. R. p. 880).

"மைநாகன்,"—"மைநாக" வின் உருவகம்—"இந்தியாவின் தென்முனைக்கும் இலங்கைக்கு மிடையிலுள்ள கடலிலிருக்கும் ஓர் பார். மலையரசனுக்கும் மேனகைக்கும் புத்திரன்." மலையரசன் எனப்பட்டது இமையமலை. மேனகை மேருவின் புத்திரி.

"கூடு மகவண்ணல் குலி சந்தொடர நேமி
பூடு புகலுற்றிடு மை நாகவரை

இலங்கை வீழ் படலம் 5

என கந்தபுராணத்திற் குறிச்சப்பட்டது இதுவே.

"மைநாக" எனும் பெயர "நீரில் (மை) மலை (நாகம்)" எனப் பொருள்படும்: அதாவது "மலைத் தீவு." இது நாகதீவு என வழங்கப்பட்ட நயினை தீவாம் (யா. யா. ச. ப. 7)

ஆகவே, சம்புதீவு எனப்பட்டது நயினா தீவு

நாவலந்தீவ.—சம்புதீவு, நாவலந்தீவு எனும் பரியாயப் பெயராலும் வழங்கப்படும். (அ. கோ. ப. 33).

நாவலந்தீவு—மணிபல்லவம்—மணிமேகலை எனப் பெயர்கொண்ட காவியத்தில் பல இடங்களிலும் நாவலந்தீவு குறிக்கப்பட்டிருக்கிறது இக்குறிப்புகளை ஆராய்ந்து பார்க்கு மிடத்து அக்காவியத்தில் இப்பெயர் மணிபல்லவம் எனப்படும் தீவின் பெயரன்றி வேறல்ல வென வெளிப்படுகிறது

"கோவலன் மடந்தை குணதவம் புரிநதோ
ளாவலந்தீவிற் றுன்னி மிக்கோ
ளங்கையினேந்திய வமுதசுரபியொடு
தங்காநிப்பதித் தரும வனததே
வந்து தோன்றின (ள்)

மணி, காதை 28, அடி 179—83

இதன் பொருள் "கோவலன் புதல்வி, சிறந்த தவஞ் செய்தொழுகுபவள்; இச்சம்புத்தீவில் எல்லாருள்ளுஞ் சிறந்தவள்; அவள் கையிலேந்திய அமுத சுரபியென்னும் பாத்திரத்தோடு இந்நகரில்வந்து தருமவனத்தே உறைகின்றாள்."

என்று சாமிநாதையரவர்கள் கூறியிருக்கிறார் (மணி. ப.193). அதாவது, நாவலந்தீவு இந்தியா எனக் கொண்டார்.

ஆயின், "தான் தனி மிக்கோன், நாவலந்தீவில் அங் கையில் ஏந்திய அமுதசுரபி" அதாவது அமுத சுரபியைக் கைக்கொண்ட இடம் நாவலந்தீவெனக் குறிக்கப்பட்டதன்றி "நாவலந்தீவில் எல்லாருள்ளுஞ் சிறந்தவள்" என மடந்தை யின் சிறப்பு விசேஷிக்கப்பட்டதல்ல, என்பது

" ஆங்கதன் பயனே யாருயிர் மருந்தா
யீங் கிப்பாத்திர மென்கைப் புகுந்தது
நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து
மணி. காதை 11, அடி 105—7.

இப்பாத்திரம் ஈங்கு, நாவலந்தீவில் (சம்புத்தீவில்), என் கையில் வந்தது, என்றதால் தெளிவாகிறது.

மணிபல்லவம் ஓர் தீவு. அது காவேரிப்பூம் பட்டினத் துக்குத் தெற்கே 30 யோசனை தூரத்திலிருந்தது.

" பூங்கொடி தன்னைப் பொருந்தித் தழீஇ
யந்தர மாரு வாறைந் தியோசனைத்
தென்றிசை மருங்கிற் சென்றுதிரை யுடுத்த
மணிபல்லவத்திடை மணிமேகலா தெய்வ
மணியிழை தன்னைவைத் தகன்றது தானென்.
மணி. காதை 6. அடி 210—14.

ஆகவே நாவலந்தீவு மணிபல்லவமாம்.

மணிபல்லவம்—நாகதீபம் —

" தேவர் கோனிட்ட மாமணிப்பீடிகை
பிறப்புவிளங் கவிரொளி யறத்தகை யாசனங்
கீழ்நில மருங்கி னாக நாடாளு
மிருவர் மன்னவ ரொருவழித் தோன்றி
யெமதீதென்றே யெடுக்கலாற்றார்

தம்பெரும் பற்று நீங்கலு நீங்கார்
செய்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்துத்
தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் பரிநா
ளிருஞ்செரு வொழிமி னெமதீ தென்றே
பெருந்தவ முனிவ னிருந்தற முரைக்கும்
பொருவறு சிறப்பிற் புரையோ ரேத்துந்
தரும பீடிகை.

மணி. காதை 8 அடி 52—63.

என்று மணிபல்லவத்தில் நடந்ததாக மணிமேகலையிற் குறிக்கப்பட்டிருக்கும் சம்பவம் நாகதீபத்தில் நடந்ததாக மகாவம்சத்திற் குறிக்கப்பட்டிருக்கிறது. (Mhv. i. 45—62) ஆகவே, மணிபல்லவமும் நாகதீபமும் ஒன்றே. (A. J. pp. 7—8). ஆனால் நாகதீபம் யாழ்ப்பாணம் என்பது சிலரின் கொள்கை. (A. J. p. 117).

நாகதீபம்.—"நாகதீப" என மகாவம்சத்தில் வருவது நாகதீவு (நாகதீபம்) எனும் தமிழ்ப் பெயரின "பாலி" வடிவம் என்பது வெளிப்படை. சம்புதீவு ஜம்புதீப எனவும் புங்குடுதீவு பியங்கு தீப எனவும் வருவதை நோக்குக (Mhv. xiv, 8—9; xxv. 107). அதுவுமன்றி, யாழ்ப்பாணத்தை "காந்தாரம்" என்றார் மணிமேகலை ஆக்கியோன் (மணி. காதை 9, அடி 12). யாழ்ப்பாணத்தின் ஓர் பூர்வ பெயர் காந்தருவ நகரம் (யோ. யா. ச. ப. 5). மேலும், "நாகதீப," "மணிநாகதீப" எனவும் சிங்கள நூல்களில் வழங்கப்பட்டுள்ளது (யா. வை. வி. ப. 23). மகாவம்சத்தில் நாகதீபத்தோடு சேர்த்துக் கூறப்படும் சம்பவங்களெல்லாம் நாகதீவோடு சேருமன்றி யாழ்ப்பாணத்தோடு பொருந்தமாட்டா. நாகதீபத் துறையை ஜம்புகோல என்பர் (Mhv. xix. 23). அவ்விடத்துப் பிராமணனை "திவக்க" பிராமணன் என்பர் (Mhv. xix 37)—" மணி

பல்லவமெனுந் தீவக" (மணி. காதை 21, அடி 86—7)த்திற் "தீவத்தெய்வத" த்தின் (மணி. பதிகம். அடி 4) கோயிற் பிராமணி.

"மணி" "ஜம்பு" "நாக" முறையே மணித்தீவு, சம்புதீவு, நாகதீவு, எனும் பெயர்களிலிருந்தெடுத்துப் பாவிக்கப்பட்டன. "கொல=பல்லவம்" "கொல" தமிழ்க "குழை"யின் சிங்கள வடிவம் (யா. வை. கௌ. அனுபந்தம் ப. 119). குழை=தளிர்=பல்லவம்.

மணிபல்லவகடல்.—மணிபல்லவமிருந்த கடலைக் குறித்துச் சாத்தனார் கூறியிருப்பது பாக்கு நீரிணையை யன்றி வேறு கடலைச் சுட்ட வில்லை.

1. அது மாக்கடல்.

'கண்டறியாதன கண்ணிற் காணு
நீல மாக்கட னெட்டிடை யன்றியும்"

(மணி, காதை 8, அடி 16, 17)

மணிமேகலையின் கண்ணுக்கெட்டியது மாக்கடல். இது சகரனின் மக்கள் குதிரையைத் தேடிப் பூமியைத் தோண்டியதா லுண்டான சத்த சாகரம். மா=குதிரை.

2. அதில் முத்து விளைந்தது.

"முத்துவிளை கழனி"

மணி, காதை 8, அடி 4

பாக்கு நீரிணையின் மன்னாப்பகுதி குறிக்கப்பட்டது.

3. அதில் ஓர் துறைமுகமிருந்தது.

"வீசு நீர்ப் பரப்பி னெதிரெதி ரிருக்குந்
துறையுந் துறை சூழ் நெடுமணற் குன்றமும்

மணி, காதை 8, அடி 33, 34

நயினாதீவு இலங்கையின் விசேஷதுறை. தொலமி இதை Kouroula (கூழ் உலம்—பொன்மலை) என்றார். பெறிப்பிளஸில் Poudouke (பூதூக்கி- பூதரம், மேரு) எனப்பட்டது

4. அகில், கப்பல்கள் சேதப்பட்டன.

"கலங் கவிழ் மகளிரின் வந்தீங் கெய்திய"

மணி காதை 11, அடி 7

மணிமேகலை கப்பற்சேதப் பெண்போல மணி பல்லவத்தில் நின்றதாக தீவதிலகை கூறியதிலிருந்து அத்தீவுப்பகுதியில் கப்பற்சேதம் பல முறையும் சம்பவித்ததென்பது தெளிவாகிறது.

இதுவுமன்றி,

"விரைமர முருட்டுந் திரையுலாப் பரப்பு"

மணி, காதை 8, அடி 5.

என்றதாலும் சப்பற் சேதமே சுட்டப்பட்டது. சேதப்பட்ட கப்பல்களிலிருந்த சந்தனம் அகில் முதலியவையே நீர் மேல் மிதந்தன.

குறிப்பு.—மணிமேகலை காதை 25 அடி 178—91-ல் துறையும் கப்பற் சேதமும் குறிக்கப்பட்டிருக்கின்றன. மணி பல்லவதுறை, மணிமேகலை காதை, 14 அடி 81-லும் குறிக்கப்பட்டிருக்கிறது. நயினாதீவுப்பகுதியில் வருஷந்தோறும் பல கப்பல்கள சேதப்பட்டன என்பது சரிததிரம், (A J. pp.207—8)

நாக தீப, மணிபல்லவம், நாவலந்தீவு ஒரே தீவின் பெயர்களாம். அது நாக தீவு எனப்பட்ட நயினா தீவு.

நாவற்பழத் தீவு.—சம்பு தீவில் நாவல் மரம் மிருந்திருந்தது. சங்கதீசன் எனப்பட்ட ஓர் சிங்கள அரசன் நாவற்பழமருந்த பாசீன தீப எனப்பட்ட ஓர் தீவுக்கு காலத்துக்குக் காலம் போய் வந்தான். இதனால் இடுக்கண் பட்ட தீவார் நாவற்பழங்களுள் நஞ்சிட்டு விட்டார். அவற்றை உண்ட அரசன் அத்தீவிற்றானே மரித்தான். (Mhv. xxxvi. 70—2).

இப்பாசீன தீப இலங்கையின் வடமுனைக்கும் இந்தியாவுக்கு மிடையிலிருக்கும் தீவுகளிலொன்று என மகாவம்ச தீகா எனும் நூல் குறிக்கும் (Mhv. p. 261 Footnote).

பாசீன விகாரை (Eastern monastery: Pacinadipa = East-Island) நாகதீபத்திலிருந்தது (Mhv. xix. 34).

ஆகவே, பாசீனதீப நாகதீவெனப்பட்ட நயினை தீவன்றி வேறல்ல. இதுவே நாவற்தீவு—சம்புதீவு.

நரித் தீவு.—இலங்கையை ஒல்லாந்தர் (Dutch) அரசாண்ட காலத்தில் பல்தேயு (Baldeus) பாதிரியார் (கி. பி. 1658—65) தாம் நயினை தீவைத் தரிசித்தபோது அத்தீவின் பெயர் அனேக நரிகள் அங்கு வசித்தமையால் வந்ததெனக் கேள்விப் பட்டதாகக் கூறியிருக்கிறார். நயினைதீவு எனும் பெயருக்கும் நரிகளுக்கும் ஓர் தொடர்புமில்லை. ஆகவே, அக்காலத்திற்றானும் அத்தீவின் பெயர் சம்பு (நரி, நாவல்) தீவென அறியப்பட்டிருந்த தென்பது திண்ணமாகிறது. அக்காலத்தில் நாவல் ஒழிந்து நரிகள் மிகுந்து விட்டன போலும்.

சம்பு (நாவல்) தீவையே நரி (சம்பு) தீவு என்றார். அது நயினைதீவு.

### சாகம்

சாகம் எனப்பட்டது காரை தீவு. சாகம் = வெள்ளாடு = கார். கார் தீவு காரை தீவு ஆயிற்று. "கார்" என்பதற்குப் பதிலாக புலவர் ஓர் பரியாயச் சொல்லைப் பாவித்தார். இது பாற்கடலி லிருந்தது.

மணிமேகலையில் இத்தீவு "அசோதரம்" எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஈண்டும் புலவர் ஓர் பரியாயச் சொல்லையே பாவித்தார். "அசம்" = ஆடு. (அச + தரம் =

அசோதரம். (குல + துங்கன் குலோத்துங்கன் ஆவதை நோக்குக.) "தாம்" எனப்பட்டது "பொங்குதிரைப் புணரிகளின் முடிவுதோறும் புடையுறவே வளைந்தொவ்வோர் பொருப்பு நிற்கும்" என்றதை ஒப்ப.

"அரவக் கடலொலி அசோதரம்" (மணி. காதை 9, அடி 38) என்றார். அரவக்கடல் = பாற்கடல், "அரிய ராவணையினேமிக் காவலன் றுயில் கூர் பாலின் கடல்" (திக்கு விசயப்படலம் 73). அராவணை, சரவணை, ஊர் காவற்றுறையென பின் நிரூபிப்பாம் (அதிகாரம் 7).

## குசை

குசத்தீவு (அ. கோ. ப. 49) தனதீவு எனப்படும் (யா. வை. வி. ப. 22) ஊர் காவற்றுறைத் தீவு. குசம் = முலை = தனம். ரண்டும் புலவர் ஓர் பரியாயச் சொல்லைப் பாவித்தார். இத்தீவு தயிர்க் கடலிலிருந்தது என்பர். இத் தீவினருகில் தென் கிழக்கில் "மண்ட தீவு" எனப்படும் ஓர் தீவிருக்கிறது. இப்பெயர் தயிரேடு (மண்டம்) எனும் பதத்திலிருந்து வந்தது. இதிலிருந்து, பண்டையோர் கிரமமாகக் கடல்களுக்குப் பெயரிட்டிருந்தார்கள் என வெளியாகிறது அதாவது வடக்கில் பாற்கடல், பாற் கடலுக்குத் தெற்கே தயிர்க்கடல், தயிர்க் கடலைச் சார்வுற்று தென் கிழக்கே மண்டம். ஆகையால், நெய்க்கடல் தயிர்க்கடலுக்குத் தெற்கே யிருந்ததாதல் வேண்டும்.

## கிரவுஞ்சம்

மேற் குறிக்கப்பட்டதிலிருந்து, நெய்க்கடலி லிருந்த கிரவுஞ்சம் புங்குடு தீவு ஆகிறது. "புங்குரு" (புங்கம் = அம்பு; உருவுதல் = கணை வேன் முதலியன புகுந்தோடல். வழங்கிய பெயர் "வேல் ஊடுருவிச் சென்ற" எனும்

பொருள் கொள்ளக் கூடியதாதலின் புலவா அத் தீவை கிரவுஞ்சம் என்றார் போலும். கிரவுஞ்சகிரி குமரனின் வேலி ஞல் பிளக்கப்பட்டது. "புங்குரு" "புங்குடு" வாகி யிருத்தல் கூடும்.

## இலவு

இலவ தீவு எனப்பட்டது எழுவை தீவு. இத் தீவு சான்மலி எனவுங் குறிக்கப்பட்டிருக்கிறது. (அ. கோ. ப 53). "சானமலி, 1. இலவமரம், 2. ஓர் தீவு. சத்த தீவுகளில் ஐந்தாவதானது. இலவமரம் மிகுந்தமையின் இப்பெயர் பெற்றது."

## கோமேதகம்

சாகம், குசை, கிரவுஞ்சம் வடக்குத் தெற்காக நிரையே குறிக்கப்பட்டவண்ணம், இலவு, கோமேதகம், புட்கரம் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில், புட்கரம் நெடுந் தீவு என்பதற்குச சான்றுண்டு.

ஆகவே கோமேதகம் எனப்பட்டது அனலை தீவு. பண்டைக் காலத்தில் இத்தீவு கோமேத யாகம் செய்யுமிடமா யிருந்தது போலும். கோமேத அகம். யாகத் "தீ" யிலிருந்து அனல் தீவு, அனலை என வந்திருக்கலாம்.

## புட்கரம்

"கமழம்" (Kamara, கமழ: "r"=ழ; தமிழகம Damirike எனப் பட்டதை நோக்குக. A I. p. 49) எனப்பட்ட ஓர் துறைமுகம் பெறிப்பிளஸ் எனும் நூலில் குறிக்கப்பட்டிருக்கிறது (A. J. p. 97). அங்கு கொடுக்கப் பட்டிருக்கும் வரலாற்றிலிருந்து அத்துறை பாக்கு நீரிணை யின் தென்பாகத்திலிருந்ததெனவும் பூதூக்கி (பூதரம், மேரு)க்குத் தெற்கே யிருந்ததெனவும் காணப்படுகிறது.

மேரு சம்புத்தீவின் நடுவில் நின்றமையால் (அ. கோ. ப. 29) கமழும் நயினதீவுக்குத் தெற்கேயிருந்தது.

"கமழும்" "கமலம்" எனும் சொல்லின் திரிபு. கமலம் = தாமரை = புட்கரம். எண்டும் புலவர் ஓர் பரியாயச் சொல்லைப் பாவித்தார்.

நயினதீவுக்குத் தெற்கேயிருப்பது நெடுந்தீவு. கி. பி. முதலாம் இரண்டாம் நூற்றுண்டுகளில் இத்தீவின் பெயர் கமலம் என வழங்கப்பட்டதாகத் தெரியவருவதால அதன் பண்டைப் பெயா அதுவே எனக் கொள்வாம்.

புட்கரத்தில் ஓர் வட்ட அசலம் (இது ஓர் கோட்டை) இருந்தது (அ. கோ. ப. 57). கர்ணபாரம்பரியத்தின்படி கி. பி. முதலாம் நூற்றுண்டளவில் வெடியரசன் கோட்டை நெடுந்தீவிலிருந்தது எனவும் அக்கோட்டை தற்காலம் அழிந்து கிடப்பதை அத்தீவின் மேற்குப்பகுதியிற் காணலாம் எனவும் யோன் ஆசிரியர் கூறியிருக்கிறுர். (யோ. யா. ச. ப. 6). ஆகவே, பரம்பரையாக ஓர் கோட்டை நெடுந்தீவிற் பரிபாலிக்கப்பட்ட தென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆகவே புட்கரம் எனப்பட்டது நெடுந்தீவு.

**குறிப்பு :—கண்ணகைக்குப் பாதசிலம்பு செய்தற்கேற்ற நாகரத்தினம் வாங்க மீகாமன் வந்தது வெடியரசன் காலத்திலாதலின் (யோ. யா. ச. ப. 7) அவன் காலம் கி. பி. முதலாம் நூற்றுண்டு வரையில் எனக் கொண்டாம்.**

## பொழிப்பு

| | | |
|---|---|---|
| சம்பு | எனப்பட்டது | நயினதீவு |
| சாகம் | ,, | காரைதீவு |
| குசை | ,, | ஊர்காவற்றுறைத தீவு |

| | | |
|---|---|---|
| கிரவுஞ்சம் | எனப்பட்டது | புங்குடுதீவு |
| இலவு | ,, | எழுவைதீவு |
| கோமேதகம் | ,, | அனலைதீவு |
| புட்கரம் | ,, | நெடுந்தீவு |

சம்பு (நயினாதீவு) ஏனைய ஆறு தீவுகளின் மத்தியத்திலிருக்கிறது. பண்டையோர் இதைக் குறிக்கப் பண்டிதர் சம்புதீவு ஒவ்வோர் தீவினதும் மத்தியத்திலிருந்ததெனக் கொண்டு ஆறு தீவுகளையும் ஏககேந்திர வளையங்கள் என்றார்.

# அதிகாரம் 3.

## சம்பு தீவு

### அதின் உள் விரிவு.

சத்த தீவுகளுள் அதி விசேஷமானது சம்பு. கந்த குமரனின் சரித்திரத்தோடு தொடர்புள்ள இடங்கள் பல இத்தீவிலிருந்தன

இதன் நடுவில் மேருவரை, மேருவைச் சுற்றி,

கிழக்கே — மந்தரம்
தெற்கே — *கந்தமாதனம்
மேற்கே — விபுலம்
வடக்கே — சுபார்சுவம்

எனப்பட்டவைகளும் அட்ட கிரிகளும் இருந்தன என்றும், மேருவைச் சுற்றி ஒரு கண்டமும் எட்டுக் கிரிகளுக்கும் அருகில் எட்டுக் கண்டங்களுமாக நவகண்டம் இத்தீவின் பிரிவுகளாக இருந்தன என்றும் கூறப்பட்டிருக்கிறது.

| அட்ட கிரி | நவகண்டம் |
|---|---|
| கிழக்கு | கிழக்கு |
| மாலியவான் | பத்திரம |
| மேற்கு | மேற்கு |
| கந்தமாதனம் | கேதுமாலம் |
| தெற்கு | தெற்கு |
| நிசதம் | அரி |
| ஏமகூடம் | கிம்புருடம் |
| இமையம | பரதம் |
| வடக்கு | வடக்கு |
| நீலம் | இரமியம் |
| சுவேதம் | இரணியம் |
| சிருங்கம் | குரு |
| | மேருவைச் சூழ்ந்து |
| | இளாவிருதம் |

* அட்டகிரியிலொன்றாகிய வேறோர் கந்தமாதனமு மிருந்தது

## நவகண்டத்தின் இயல்பு

நயினுதீவு 2½ மைல நீளமும் 1 மைல் அகலமுமுள்ள ஓர் சிறுத்தீவு. இதில் ஒன்பது கண்டங்கள் இருந்தன என்றூர் பண்டையோர். பண்டையோர் "கண்டம்" எனக் கொண்டது ஓர் துண்டம், சிறு பிரிவு. இப்பிரிவுகள் பருப்பத்திற் சிறிதாயினும் மேன்மையில் உயர்ந்தமையின் பெரும் கண்டங்களென பண்டையோரால் மதிக்கப்பட்டன பண்டையோர் இவ்வண்ணம் சொல்லிக் காட்டியதைப் பண்டிதர் பருப்பத்திற் பெரிய பிரிவுகளெனக் கொண்டு ஒன்பது பெரும் பிரிவுகளடங்கிய சம்பு தீவு ஓர் பூமிசாஸ்திரமுறைப் படியான தீவல்ல அது ஓர் பெரிய தேசமாதல் வேண்டும் என ஊகித்து, அது பண்டு தொட்டின்று வரையும் நன்கறியப்பட்ட இந்தியாவன்றி வேறல்ல; இல்லை, இது முழுச் சம்பாக முடியாவிடில் பரதகண்டமாயாகுதல இருக்கவேண்டும் என்றூர். அது பாதிப் பூமி எனக்கொள்வாருமுளர்!

* உண்மையாக ஓர் சிறுத்தீவுதானும் ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப்படக் கூடும்.

இனி, சம்புத்தீவி னெட்டுப்* பிரிவுகளுக்கு இடையிடையே "எட்டு வரை" (அ. கோ. ப. 34) இருந்ததாகப் பண்டையோர் சொல்லிக்காட்டியது காலாந்தரத்தில் "அட்ட கிரி" யாயின. "எல்லை = வரை = மலை = கிரி"

## அட்டகிரியின் இயல்பு

பண்டையோர் தாம் "வரை" என்றது "குலம்" எனச் சொல்லிக் காட்டியிருந்தமையின் "அட்டகிரி" "அட்ட குலமலை" எனவும் வழங்கப்பட்டது. "குலம்" எனும் பதத்தின் பொருள் "அரமனை, இரேவதி, கூட்டம், ஜாதி, மனை, விலங்கின் கூட்டம்". ஆகவே பண்டையோர் இப்பதத்தை "அரமனை, மனை" எனும்

கருத்தில் பாவித்திருக்க வேண்டும். அவற்றின் தொகை சிறிதாகையால் அட்டகுலங்களும் எட்டு அரமனைகள் எனக் கொள்வாம். இவை பிரமாண்டமான கட்டிடங்களா யிருந்தது பற்றிப்போலும் “ குலகிரி ” “ அட்டகுலமலை ” என வழங்கப்பட்டு “ குலம் ” குன்றி “ அட்டகிரி” யாயின.

ஆகவே அட்டகிரி பூமி சாஸ்திரமுறையான மலைக ளல்ல, அரமனைகள்.

நவிஞதீவில், அதிபூர்வகாலத்தில் அங்கிதீரனின் புத்தி ரர், நவகண்ட அரசர், தத்தமக் கொவ்வோரரமனையை அமைப்பித்தார் போலும். (அ. கோ. ப. 28).

கந்தபுராணத்தில், “ வரை ” “ கிரி ” “மலை” “வெற்பு” எனப்படும் மேருவரை, இமகிரி, வெள்ளிமலை, கந்த வெற்பு முதலியவையின் இயல்பும் இத்தன்மைத்தேயென பின் நிரூபிப்போம்.

## கயிலாசம்

“ ஏம கூடததடவரைத் தென்பாலிமைய வடபாறன்னி
லேற்ற மிருங் கயிலைநிற்கு மதற்கு மீதே யிமையாமுக்கட்
பகவனுமையாளோடும் வீற்றிருப்பன் ”

(அ. கோ. ப. 41.)

ஈண்டு குறிக்கப்பட்ட கயிலை சம்பு நீவிலிருந்தது. இது ஏமகூடத்துக்குத் தெற்கே இமையத்துக்கு வடக்கே இருந் தது. திருகைலாசப் படலத்திற் குறிக்கப்படும் கைலாசம் இதுவல்ல. ஆகவே இருகயிலை இருந்தன.

## சோம லோகம்

“ சோமன் திசை ” என அண்டகோசப்படலம 35-ம் செய்யுளில் குறிக்கப்பட்டது “ வட திசை ” யைக் கருது வதாக சுப்பிரமணிய சாஸ்திரிகள் கொள்வர்.

வால்மீக இராமாயணத்தில் "சோம லோக" எனப் பட்ட ஓர் இடம் மேருவுக்குக்கிட்ட இருந்ததாகக் குறிக்கப் பட்டிருக்கிறது (D. T. R. p. 1638, Region of the Moon). ஆகவே சோமலோகமே சோமன் திசை எனப் பட்டது மேலும் சோமலோகமே "திங்களுல" காகி புவியின் மேற்கணத்திலிருப்பதாக அண்டகோசப் படலம் 62-ம் செய்யுளில் குறிக்கப்பட்டிருக்கிறது.

நயினாதீவின் வடபாதி சோமலோகம் எனப்பட்டது.

## சூரிய லோகம்

வால்மீக இராமாயணத்தில், "சூரிய லோக" எனப் பட்ட ஓர் இடம் மேருவுக்குக கிட்ட இருந்ததாகக் குறிக் கப்பட்டிருக்கிறது. (D. T. R. p. 1636. Region of the Sun). சூரியலோகமே "இரவிபதம்" ஆகி புவியின் மேற் கணத்திலிருப்பதாக அண்டகோசப் படலம் 62-ம் செய்யு ளில் குறிக்கப்பட்டிருக்கிறது.

நயினாதீவின் தென்பாதி சூரியலோகம் எனப்பட்டது. இப்பகுதியில் சிவனின் (சோதி) வாசமாகிய கயிலாசமும் கந்தகுமாரனின் (சோதி) வாசமாகிய கந்தவெற்பும் இருந்த மையின் இப்பெயர் வந்தது போலும்.

குறிப்பு :—பூமி முழுவதையும் கருதும் சொற்களால் சம்புதீவு (நயினாதீவு) பல இடங்களிலும் சுட்டப்பட்டிருக்கிறது. "பூவுல" கில் (அ. கோ. ப. 73 பார்க்க) இருந்ததாகப் பண்டையோர் சொல்லிக்காட்டிய சூரிய சந்திர மண்டலங்கள்—நாட்டின் பகுதி கள்—விளக்க மாறுபாட்டால் ஆகாய மண்டலங்களாயின. ஏனைய மண்டலங்களும் இவை போன்றன. இவற்றுட் சில பின் கவனிக்கப்படும் (அதிகாரம் 9).

# சம்புத்தீவின் உள்பிரிவு

(நயினைதீவு)

வடகடல்

---

குரு (க)

சிருங்கம் (கிரி)

இரணியம் (க)

சுவேதம் (கிரி)

இரமியம் (க)

நீலம் (கிரி)

சோம லோகம்

மேற்கடல்

கேதுமாலம் (க)

கந்தமாதனம் (கிரி)

இளாவிருதம் (க)

மேரு

மாலியவான் (கிரி)

பத்திரம் (க)

கீழ்கடல்

நிசதம் (கிரி)

அரி (க)

ஏமகூடம் (கிரி)

கிம்புருடம் (க)

கயிலை

சூரிய லோகம்

இமையம் (கிரி)

பரதம் (க)

---

தென் கடல்

கந்த வெற்பு.

க = கண்டம். கிரி = அட்டகிரி.

# அதிகாரம் 4

# மேரு

"விண்ணுயர்சம் புத்தீவி னடுவு நின்ற மேருவரை செயகமலப்
பொகுட்டுப் போல
நண்ணுமதற் கியோசனையுன் னதமெண் பத்து நான்
குளவா யிரமாகு ஞால மாழ்ந்த
தெண்ணிரண்டா யிரஞ்சென்னி யகலிருப்பா னிராயிரமாம்
பராரை யெல்லே யிதனிற் பாதி
வண்ணமிகு மேகலைமூன் றதனு ளுச்சி வாய்த்திடுமே கலை
யினிற்பல் சிகர மல்கும். (அ. கோ. ப. 29.)

மேருவரை யதற்குநடுப் பிரமன் பூ யூர் மிக்கமதே வதிய
தற்கு மெலைத்திக்கி
லுரணன் வாழ் வைகுண்டம வடகீழ பாலி ஞதனமர்
சோதிட்கந் திசைகளெட்டுரு
சீரியவிந் திரன்முதலா மெண்மர் தேயந தெற்கு முதல்
வடக்களவு மருங்கு தன்னி
னேரியதோர் தேசமது செவ்வே போகு நெடும்பூமை
யொன்றுளது நினைக மாதோ." (அ. கோ. ப. 30.)

## 1. மேருவின் நிலையம்.

"சீர்தத நான் முகனுறங்குழிச் சிந்துவூடமுந்திப்
பேர்த்து ஞாலம்விட் டெழுதரு மேரு"
(மகேந்திரஞ் செல் படலம் 3.)

என்றார். அதாவது மேரு ஏா கடலில் (சிந்துவில்) இருந்தது. அது பிரளயத்தில் அமிழும், பின் கிளம்பும். இது யான் காட்டிய சம்பு த்வீபின் நிரூபணத்தோடன்றி பொதுக் கொள்கையோடியையாது.

"புகழ் சூழ்ந்த புணரி அகம் சூழ்ந்த புவியில் பொன் நேமியளவும்" என குலோத்துங்க சோழனின் சாசனத்தில் வருவதும் இதையே சுட்டுகிறது. பொன்நேமி = மேரு.

## 2. மேருவின் உள்விரிவு

### பல் சிகரம்

"ஞாலமார்ந்த" பகுதி, பாரை, சென்னி என மூன்று மேகலைகளாக மேருவைப் பிரித்து உச்சிப்பகுதியில் (சென்னியில்) பல சிகரங்கள் உண்டு என்றார்.

"சிகரம்" எனும் பதத்துக்கு "மலை யுச்சி" எனப் பொருள் கொள்வர். ஆனால், அதற்கு "வீடு" எனும் பொருளுமுண்டு.

"மாளிகை" எனும் கருத்தில் சிகரம் எனும் பதம் பல இடங்களிலும் பாவிக்கப்பட்டிருக்கிறது.

"உரிய மந்திர துணைவரிற் றலைமைபெற் றுறையுந்
தருமகோபன்றன் கடிமனைச் சிகரமேற் றய்கி"

(நகர் புகுபடலம் 98).

"கானமார்நத கடுக்கைநற் கூவிளைத்
தேனவாம பொழிற் றின்சிகரத்திடை"

(திருககைலாசப் படலம் 4).

"மனைச் சிகரம்" எனப்பட்டது வீடு அன்றி வேறாகாது. "பொழில்" = சோலை. சோலையிலிருந்த சிகரம் ஓர் மாளிகை யன்றி வேறாகது.

மைநாகத்தை வர்ணிக்கையில் கின்னரரும் (கந்தருவரும்) பெரிய சர்ப்பங்களும் (நாகரும்) வசிக்கும் ஆயிரஞ் சிகரங்கள் அங்கிருந்தன என்றார் வால்மீகன் (D. T. R. p. 880). இக்குறிப்பிலிருந்தே சிகரத்தின் உண்மையான பொருள் தெரியவந்தது. மைநாக = நாகதீவு = நயினாதீவு.

## மும் மூர்த்தி பதம்

மேருவின் நடுவில் பிரமன் வாழும் மனோவதியும் விஷ்ணு வாழும் வைகுந்தமும் சிவன் வாழும் சோதிட்கமும் இருந்தன இவை சிற நகரங்களன்றி வேறாகா.

இவற்றையே விளக்க மாமபாட்டால் "பிரமபதம்" "நாரணன் வாழ் பேருலகம்" "சிவலோகம்" என்று ஆகாயத்திலமைத்தார் (அ. சோ. ப. 65.)

## எண்மர் தேயம்

மூர்த்தி பதங்களைச் சூழ்ந்து அட்டதிக்கிலும் இந்திரன் முதலிய திக்குப் பாலகரின் நகரங்கள் எட்டும் இருந்தன

## 3. மேருவின் இயல்பு

"செங்கமலப் பொகுட்டுப்போல" மேரு இருந்த தென்றார். தாமரைக் கனியின் நட்டைத் தலையில், நடுவே நான்கு விதை அறைகளும் (சில காயில மூன்றாமென்பார்) அவற்றைச் சூழ்ந்து எட்டு விதை அறைகளும் உண்டு. நடு அறைகளைப் போன்றவை மூர்த்தி பதங்கள். சுற்றியிருந்தவற்றைப் போன்றவை திக்குப் பாலரின் நகரங்கள். யுக்தமான உவமை யன்றோ!

ஆகவே, மேருவின் உச்சிப் பக்கத்திலிருந்த சிகரங்கள் இந்நகரங்களிலிருந்த மாளிகைகளும் வீதிகளுமன்றி வேறல்ல. இவ்விதமான இயல்பைச் சுட்டிப் பின்வருமாறு சுவாமிகள் கூறினார்.

"அன்னதோர் கயிலைநாப்ப ணம்பொனின் சுடர்மேல
கொண்ட
நன்னெடுஞ் சிமையத்தோங்க னவையெரீஇ நண்
ணிற்றென்னக்

கன்னியங்காப்பு மேவிக் கதிர்மணிக் கற்றை சுற்றப்
பொன்னெடுங் கோயிலொன்று பொலிவொடும்
பொருந்திற்றன்றே.

(திருக்கைலாசப் படலம் 15.)

அதாவது, மேரு (சிமயத்தோங்கல்) வந்தமைந்தாற்போல ஓர் கோயில் கயிலையிற் பொருந்திற்று. அதைச் சுற்றி அழிவில்லாத மதில் (கன்னியங் காப்பு) இருந்தது—மேருவைச் சுற்றியும் மதில் இருந்தது, அந்த கோயில்கள் இருந்தன எனப் பொருள் குறிக்கப்பட்டது.

“ நாற்பெரும் வாயிலோடு மேருவே நண்ணிற்றென்ன
மாற்பெருங் கோபுரங்கள் மணிவெயிலெறிப்ப நல்கி
நூற்படு மொழுக்கநாடி நூறியோசனை யொன்றாகப்
பாற்படு மாடவீதி பறபல வமைத்து மன்றே,

(நகர்செய் படலம் 5 )

அதாவது, வீரமகேந்திரபுரம் மேருவைப் போல கோபுர வாயில்கள் மாடங்கள் வீதிகள் முதலியவை அமைக்கப்பட்டுக் கட்டப்பட்டது—மேருவிலும் இவை இருந்தன எனப் பொருள் குறிக்கப்பட்டது. மகேந்திரபுரத்துக்கு நான்கு வாயில்களிருந்தன. மேருவுக்கோ, “தெற்கு முதல் வடகளவு மருங்குதன்னி னேரியதோர் தேசமது செவ்வேபோகு நெடும் பூழை ஒன்றுளது” என்றார். அதாவது, மேருவினூடே, நடுவில் (மருங்கு தன்னில் = இடையில்), தெற்கெல்லை தொடக்கம் வடக்கெல்லை ஈறாக ஓர் வீதி இருந்தது. அதன் அந்தங்களில் வாயிற் கதவுகளிருந்தமையின் “பூழை” என்றார் “பூழை” = கோபுர வாயிற் கதவிலிட்டுப் புகும்வழி.

இத்தால், மேருவைச் சுற்றி மதிலிருந்தது, வடக்கிலும் தெற்கிலும் கோபுர வாயில்களிருந்தன எனக் குறிக்கப்பட்டது. ஆகவே மேரு ஓர் பெரும் நகரமன்றி மலையல்ல.

என்றாலும், மேரு சாதாரணமான நகரமல்ல.

திக்குவிசயப்படலத்தில் மேருவின் உரிமையான தன்மை குறிக்கப்பட்டிருக்கிறது

தன் மேலவர்களை (இந்திரனையும் சூரனையும்) வென்றிட சூரபன்மன் படைகளுடன் சென்றபோது அவன் முதல் முதல் தாக்கியது மேரு. அங்கிருந்த திக்குப் பாலகரின் நகரங்களை ஒன்றின்பின் ஒன்றாகத் தாக்கினான்.

| | |
|---|---|
| வடக்கில், | குபேரன் சரண்புகுந்தார். |
| வடகிழக்கில், | ஈசானன் சிவபிரானுடைய வடிவத்தைப் பெற்றவனாதலின் அவனுடைய நகரத்தை சூரன் தாக்காது விட்டான். |
| கிழக்கில், | இந்திரன் சுவர்க்கத்துக்கு ஒளித்தோடினான். |
| தென் கிழக்கில், | அக்கினி போர் செய்து தோற்றுச் சரண்புகுந்தான். |
| தெற்கில், | யமன் சரண்புகுந்தான். |
| தென் மேற்கில், | நிருதி தன் படைகளோடும் சரண் புகுந்தான். |
| மேற்கில், | வருணன் கடலில் ஓடினான். |
| வடமேற்கில் | வாயு இருளுலகத்துக்கு ஓடினான்: அதாவது, இந்தியாவுக்கு. |

ஆகவே திக்குப் பாலகரின் நகரங்கள் சேனவீரரின் பாசறை வீடுகளும் சேனாபதிகளின் மாளிகைகளும் சேனைக்குரிய மற்றும் வசதிகளுமமையப் பெற்றவையாயிருந்தன. இதனால் பிறப்பது மேரு ஓர் கோட்டை என்பதாம்.

இக் கோட்டையில் ஓர் சுத்த நீர்த் தடாகம் இருந்த தென்று இராமாயணத்திற் குறிக்கப்பட்டிருக்கிறது (D. T. R. p. 1694).

மேருக்கோட்டை அங்கிருந்தமையின் நயினை தீவு அரணிடப்பட்ட தீவாகிறது. இதைக் குறித்தே வால்மீகன்,

> மைநாக, " அசுரரைத் தடுக்கத் தேவர்கோனிட்ட
> புறக்கதவம்" (D. T. R. p 880).

என்றார். அசுரனாகிய சூரபன்மனும் இதையே முதற் தாக்கினன்! "மைநாக"= நயினை தீவு.

புத்த தேவர் நாக தீபத்தைத் தரிசித்தபோது ஓர் ராஜாயத்தன மரத்தை அவ்விடத்திலிருந்த வாயில்—காப்பரணத்தின் அருகில் நட்டார் என மகாவம்சத்திற் கூறப்பட்டிருப்பதால் (Mhv. i. 56) பண்டுதொட்டுப் பரம்பரையாக ஓர் கோட்டை அத் தீவிற் பரிபாலிக்கப் பட்டிருந்த தெனத் தெளிவாகிறது. நாகதீபம்= நயினை தீவு.

மேருவின் உயரம் 84,000 யோசனை என்றார். அதாவது, பதிலட்சம் மைலுக்கு மேற்பட !!! இது விருத்திக் கதை. பூமியிலிருந்து சந்திரனின் தூரம் 2, 38, 793, மைல் மாத்திரமே.

## 4. அட்டநாகம், அட்டதிக்கயம்

> " பக்கன பாரகம் பதலை முற்றுற
> நெக்கன பணிகண் மெய் நெளித்து நீங்கிய
> திககய மரற்றியே தியக்க முற்றன
> தொக்கன வுயிர்த்தொகை துளக்க முற்றவே
> (திருவவதாரப் படலம் 49.)

என்றதில் குறிக்கப்பட்ட " பணிகள் " " திக்கயம் " திக்குப்பாலகரின் நகரங்களை அடியாகக் கொண்ட கற்பித கதையோடு சேர்ந்தவை.

அட்டநாகம்—பூமியை எட்டுத்திசையிலும் தாங்கி நிற்பனவாக எண்ணப்படும் பாம்புகள்.

அட்டதிக்குக் கசம்—(அட்டகுலயானை) எட்டுத்திக்கிலும் நின்று பூமியைத் தாங்குவனவாகச் சொல்லப்படும் யானைகள்

(சொ—ஓ. த. அ.)

பண்டையோர், திகுருப்பாலகரின் நகரங்களையோ அரமனைகளையோ "நாகம்=மலை" (மலை போன்றவை அல்லது சிகரங்கள்) எனச் சொல்லிக்காட்டியதே காலாந்தரத்தில் "நாகம்=பாம்பு, யானை" எனப்பொருள் திரிபுற்று அட்ட—நாகம், அட்ட—திக்குக்—கசம், ஆயிற்று.

பண்டையோர சத்ததீவுகளைப் "பூமி" என்றும் அவற்றைத் "தாங்கு" வதே ("தாங்கல்=காத்தல்") திக்குப்பாலகரின் கடமை யென்றும் சொல்லிக் காட்டியதே, காலாந்தரத்தில் "தாங்கல்=சுமத்தல்" எனப்பொருள் மாறி, "பூமி" "பூமி" ஏழுமாகி பூமியின் மத்தியத்தினின்ற மேருவிலிருந்த திக்குப்பாலகர் பூமியினந்தத்துக்கு மாற்றப்பட்டார். மாற்றப்பட்டதும் படிப்படியாகவே.


தொடக்கத்தில், மேருவை விட்டு அதன் கீழ் போய் அதை மாத்திரம் சுமந்தார்கள். அதாவது, மேரு பூமியினின்றும் பிரிக்கப்பட்டு தூக்கிப் பிடிக்கப்பட்டது. பின்னர், இந்த நிலையை விட்டு சம்பு தீவின் கீழ் போனார்கள். போகவே, மேரு "பூதரம்"—பூமியால தூக்கப்படுவது, "அந்தர வெற்பு" (இந்திரன் கயிலை செல் படலம் 3) ஆயிற்று; சம்பு தீவும் பூமியின்று பிரிக்கப்பட்டு தூக்கிப் பிடிக்கப்பட்டதாய் அந்தரத் தீவு, "அந்த ரத்தி லமா உலகம்" (விண்குடியேற்று படலம் 17), ஆயிற்று. "அந்தரம்=ஆகாயம், இடை (வெளி)"

பின்னர், இந்த நிலையையும் விட்டு பூமி முழுதின் அந்தத்துக்குப் போனார்கள்.

குறிப்பு:—மணிமேகலை, காதை 25, அடி 213-ல் "அந்தரத் தீவகத் தருந் தெய்வம" எனப்பட்டதில் "அந்தரத் தீவு" என்றதின் பொருள் "சிறு தீவு" என்பர் சாமிநாதையரவர்கள். ஆனால், தீவதிலகை காவலிருந்தது மணிபல்லவத்தில் மாத்திரமாதலின் அத்தீவே "அந்தரத் தீவு" எனப்பட்டது. மணிபல்லவம் = சம்பு "அந்தரம" = அமதரம் = "மைநாகம்" ஆகலாம். அம் = நீர் = மை; தரம் = மலை = நாகம்.

மேரு பாக்கு நீரிணையிலிருக்கும் நயினை தீவில் இருந்த ஓர் கோட்டையன்றி வேறல்ல.

## மேருக்கோட்டையின் உள்விரிவு



## அதிகாரம் 5

## இமையம்

அட்ட குல கிரிகளுள் இமையம் கந்தபுராண சரித்திரத்தோடு அதிக சம்பந்தமுள்ளது. இமவான் எனவும் வழங்கப்பட்டது. இமையம் இந்திரனின் வாசமாக இருந்தது. இந்திரனை,

"பொன்னிய லிமகிரிப் புரத்து மேவிய மன்னவன்."
(வரைபுனை படலம் 26.)

என்றார். பார்வதி வசித்ததும் இமையத்தில்.

"அம்மை வாழிமையம்" (திருவவதாரப் படலம் 90.)

"அவ்வரைக்க ணகன் பெரு நொச்சி"
நொச்சி = மதில் (தேவகிரிப் படலம் 15.)

இமையம் ஓர் மதில் சூழ்ந்த "புரம்" அன்றி மலை அல்ல என்பது, மேலே கொடுக்கப்பட்ட மேற்கோள்களிலிருந்து தெளிவாகிறது.

இமையவர் எனும் குலப்பெயர் இவ்விமையத்திலிருந்தே வந்தது.

"இமையம்" எனும் பெயர் "இமம்—பனி" எனும் சொல்லிலிருந்து வந்ததென்பது பொதுக்கொள்கை. ஆனால் "இமம்" "பொன்" எனும் கருத்தும் உடையது.

"இரும்பனி யிடையரு விமையப் பொன்வரை"
"கோடுயர் பனிகொள் பொற் குன்றம்"
(பார்ப்பதிப் படலம் 15, 16.)

என்று இமையம் பனியினால் மூடப்பட்டதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இது நயினை தீவோடு இயையாது. ஈண்டு சுவாமிகள் இந்தியாவின் வட எல்லையாகிய இமயமலையையே கருதினார். இமையம் இமயமலை என்பதே பொதுக்கொள்கையும். ஆனால், சுவாமிகள் "பொன்வரை" "பொற்குன்றம்" என்றும் குறித்திருப்பது கவனிக்கப்படவேண்டும். இவற்றால் இவ்விமையம் கர்ணபாரம்பரியத்தில "பொன்மலை" யாகச் சொல்லிக் காட்டப்பட்டதென்றும், விளக்க மாறுபாட்டால் இந்திய இமயத்தின் சுயலட்சணம் இத்துடன் சேர்க்கப்பட்டுக் கூறப்பட்டிருக்கிறதென்றும் கொள்வாம்.

சம்புத்தீவி லிருந்ததாக கந்தபுராணம் கூறும் இமையம் இந்திய இமயமலை எனும் விபரீத கொள்கைக்கு ஒரேயொரு உதாரணந்தானும் போதிய நிராகரணமாகும்.

சூரபன்மன் மேருவைத் தாக்கினான் ; அங்கிருந்த திக்குப் பாலகரிற்சிலர் சரண்புகுந்தார், ஒருவர் போர செய்து தோற்றார் சிலர் ஒளித்தோடினார் எனக்கண்டோம். சூரபன்மன் வசித்தது இலங்கையில். இலங்கையிலிருந்து தன் படைகளுடன் அவன் இந்தியகரை யடைந்து இமயமலை வரையும் போய் அதையுங் கடந்து அதற்கு வடக்கேயிருந்த மேருவைச் சேர்ந்தான், அங்கு போராடினான் என்றால் கூடியதல்லவே !

சூரபன்மன் தாக்கியது மேருவல்ல, திக்குப்பாலகர் பூமியினந்தத்தில் அட்டதிக்கிலுமிருந்தார்கள், அவர்களைத் தாக்கினான் என்றால் அதிலும் கேடாகுமன்றோ !

## தோல் இமையம்

சம்புத்வீபிமையத்தை "தோல இமையம்" என்றார் சுவாமிகள்.

"சுற்றுறு மெழுநதி இமையத் தொல்கிரி, யுற்றனர்"

(வரைபுனை படலம் 29.)

"மேருவின், சுற்றமதாகிய விமையத் தொல் வரை"

(பார்ப்பதிப் படலம் 6.)

தொல்லோர் சொல்லிக் குறித்த இமையத்தை "இமையத் தொல்கிரி" "இமையத் தொல்வரை" என்றார். அது மேருவுக்குச் சமீபத்திலிருந்தது. ஏழு நதிகளில் வசித்தவர்கள் அந்த இமையத்துக்குப் போய் பார்வதியின் கல்யாணத்திற் சமுகமாயிருக்கக் கூடிய இடமாயிருந்தது. ஈண்டு ஏழுநதி எனப்பட்டவை "கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, காவேரி, சிந்து, கோதாவரி". என சுப்பிரமணிய சாஸ்திரிகள் கூறியுள்ளார். ஆனால் நருமதை, காவேரி, கோதாவரி நதிகளுக்கும் இமயமலைக்கும் ஓர் தொடர்புமில்லையே!

ஈண்டு "சுற்றுறு மெழுநதி" எனப்பட்டவை ஏழு தீவுகளையும் தனித்தனியே சூழ்ந்து நின்ற ஏழு கடல்களுமாம். ஏழு தீவுச் சனங்களும் பார்வதியின் கல்யாணத்துக்கு இமையத்துக்கு வந்தார்கள் என்பதே பண்டையோர் சொல்லிக் காட்டியது. இதை அமைத்தே சுவாமிகள் "சுற்றுறு மெழுநதி இமையத் தொல்கிரி யுற்றனர்" என்றார். பண்டையோர் ஏழு கடல்களையும் ஏழு ஆறுகளென்றார் என்பதற்கு எழாற்றுப் பிரிவு இன்றும் சான்றாகும்.

தோல் இமையம், தொல்லோரின் இமையம், பாக்கு நீரிணையிலிருக்கும் நயினா தீவிலிருந்தது.

# அதிகாரம் 6

## கயிலாசம்

### (பெருங் கயிலை)

“கயிலாசம், வெள்ளிமலை, சிவபிரானின் பூலோக வாசம். மேருவுக்குத் தெற்கே இருப்பதாகக் கூறப்படும்.”

மேருவுக்குத் தெற்கே, இமையத்துக்கு வடக்கே இருந்த கயிலாசம் சம்புத்தீவிலிருந்தது. (அதிகாரம் 3)

ஈண்டு கவனிக்கப்படும் கயிலாசம் வேறு. இந்தக் கயிலாசத்தின் எல்லைகளாவன :—

“ஏற்ற மேருவே யாதியாம் வரைகளேழு வகையாற்
சாற்று நேமிக ளாழியங் கிரிபெருஞ் சலதி
நாற்றிசைக்கணு மொச்சிபோற் சூழ்தர நடுவண்
வீற்றிருப்பது கயிலையா கியதனி வெற்பு.”

(திருக்கைலாசப் படலம் 13.)

ஈண்டு குறிக்கப்பட்ட பொருள்கள் கயிலாசத்துக்கு நான்கு திக்கிலும் இருந்தன. எல்லாஞ் சேர்ந்து, ஒவ்வொன்றுமல்ல, அதைச் சூழ்ந்தன. யான் நிரூபித்தபடி இவை பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | மேரு முதலிய மலைகளும் ஏழு கடல்களும் | = பாக்கு நீரிணை |
| 2. | ஆழியங் கிரி | = மாந்தைக்குச் சமீபத்திலிருந்த இடம். |
| 3. | பெருஞ் சலதி | = இந்து சமுத்திரம். |

இவை கயிலாசத்தின் நான்கு பக்கங்களிலு மிருந்தன. ஆகவே, கயிலாசம் மாந்தையிலிருந்தது.

இக்கயிலை சம்புத் தீவிலாவது ஏனைய ஆறு தீவுகளி லாவது இருக்கவில்லை என்பது பின்வருஞ் செய்யுளில் குறிக்கப்பட்டிருக்கிறது.

" மாடு சூழ்தரு மேருவே யாதியாம் வரைகள்
பாடு சேரினு முலகெலா மழியினும் பரந்து
கூடு மண்டங்க ளுலையினுங் கொன்றைவே ணியன்போற்
கேடி லாமலே யமாவது கயிலையங் கிரியே."

(திருக்கைலாசப் படலம் 11.)

உலகு = ஏழு தீவுகள்.

குறிப்பு :—ஏழு தீவுகளையும் "பரந்து கூடும் அண்டங்கள் என்றார், "குலவிய (கூட்டமான) சம்புசாகம்......பரவுமிவ் வுலகில்" என்றார் அண்டகோசப் படலத்தில்.

இக்கயிலை இலங்கைத் தீவில் பாக்கு நீரிணைக் கரையில் இருந்ததென பின்வருஞ் செய்யுளில் குறிக்கப்பட்டிருக் கிறது.

" கீணி லாவுறு முலகெலா நீங்கியே கீழ்போய்ச்
சேணி லாவுறு பதமெலா முருவி மீச் சென்று
மாணிலா வுறு மண்டத்தி னடிமுடி மருவத்
தாணுவா யுல கிறுதியி னிற்பதச் சயிலம்."

(திருக்கைலாசப் படலம் 10.)

கீழ் நிலாவுறும் உலகு = இந்தியா
சேண் நிலாவுறு பதம் = சுவர்க்கம், யாழ்ப்பாணம்
மாண் நிலாவுறும் அண்டம் = இலங்கைத் தீவு.
உலகிறுதி = ஏழு தீவுகளும் ஏழு கடல்களுமாகிய "உலகின்" அந்தம்
= பாக்கு நீரிணைக் கரை.

இக்கயிலை இந்தியாவிலுமல்ல, யாழ்ப்பாணத்திலுமல்ல, இலங்கையின் " அடி முடி "க்குக் கிட்ட பாக்கு நீரிணைக்

கரையில் இருந்ததெனப் பண்டையோர் சொல்லிக் காட்டியதை அமைத்தே சுவாமிகள் கூறியுள்ளார். "அடி= ஆதி" "முடி=குடுமி" ஆகவே "அடி முடி" எனப் பட்டது இலங்கையின் வட அந்தம்.

ஈண்டும் மாந்தையே சுட்டப்பட்டது.

இந்தியா இலங்கைத்தீவைக் கிட்டி இருக்கும் இடமாகிய மாந்தையைச் சுட்டியே அண்டகோசப் படலம் 60-ம் செய்யுளிலும் குறித்தார்.

"ஊழிநெறி யாற்றதத மூயிரைத்தாமே யொழிவு செய்தோருந்
தெருளு முணர்விலோரு
மாழிவரைப் புறஞ்சூழ்வ ரப்பாலாகு மாரிருளசே ரெல்லை
தனி ஞாதி யீசர்
வாழுமொரு பெருங்கயிலை யுண்டவ் வண்ட மருங்
கதனிற் கணகிரைகள் வதிந்துமல்குஞ்
சூழுறு சம்புத்தீப முதலாவண்டச் சுவர்காறும்
புவி யென்பர் தொல்லையோரே.

ஆழிவரைப்புறம் = சக்கரவாளமலையைச் சூழ்ந்த
சொர்ணத்தரை = இலங்கை,
ஆர் இருள் = பேரிருள் சேர்ந்த ஞாலம்
= இந்தியா,
சேர் எல்லை = கிட்டும் இடம்,

மேலும் கயிலாசம் வானயாற்றின் வடகரையிலிருந்ததெனப் பண்டையோர் சொல்லிக் காட்டியதை அமைத்து,

"கானமார்ந்த கடுக்கை நற் கூவிளை த
தேனவாம் பொழிற் றிண்சிகரத்திடை
வானயாறு வருதலின் மாசிலா
ஞான நாயகன் போல நணியதே."

(திருக்கைலாசப் படலம் 4,)

" குன்றதன் புடையில் வீழுங் குரைபுனலாற்றிடை
மண்டலங் காமர்காவின் மலர்மண மளாவிவாரித்
தென்றியாயமைந்து மெல்லச் சினகரம் புகுதுமெல்லை
நின்றகோா நந்திகாரூஉ வுரப்பினை ணெடிதுசீறி."
(திருவவதாரப் படலம் 11.)

அதாவது, தூதனைிய வாயு வானயாற்றுறையடைந்து, தென் றற்காற்று தெற்கே கிளம்பி வடக்கே வீசுவது போல ஆற் றின் வடக்கேயிருந்த கயிலைக்குப் போனான் என்றார்.

குறிப்பு :—மாநதைத் துறை தெற்கு முகமாக இருந்ததென பிளினி கூறியது வியாக்கியானிகளை மயக்கிவிட்டது. மந்தா கினியின் வடகரையிலிருந்த துறை தெற்கு முகமாகத்தானே வேண்டியது.

## வான யாறு

வான யாற்றின் பெயர் மந்தாகினி. " மந்தாகினி= கங்கை, ஆகாய கங்கை "

ஆகாயகங்கையின் கரையில் அனுராதபுரமிருப்பதாக மகாவம்சம் கூறும் (Mhv. xxix. 5. Heavenly Ganga). இது தற்காலம் மல்வது ஓயா, அருவி ஆறு எனப்படும். இந்த ஆறு இராட்சதக் குளத்தை நிரப்பி அதன் அணைக் கட்டின் மேலாகப்பாய்ந்து மாந்தைக் கருகில் ஓடி கடலுள் விழுகிறது. மாந்தைக் கருகே பாயும் நதி மந்தாகினி எனப்பட்டது அன்றேல் மந்தாகினியிலிருந்த விசேஷ பட்டினம் மாந்தை எனப்பட்டது.

பிளினி என்னும் ரோம ஆசிரியர் (கி. பி. 50) மாந் தையை பழைய—சீ—மந்தா, அதனருகில் பாய்ந்த ஆற்றின் பெயரும் அதுவே யெனக் கூறியிருக்கிறார். மாந்தை நதி மூன்று கிளைகளாகி கடலுள் விழும், அது " மெகிஸ்ப" (Megisba) எனப்பட்ட பிரமாண்டமான குளத்திலிருந்

தூற்பத்தியாகிறது, அக்குளத்தில் மேய்ச்சற்றரை யாகப் பாவிக்கப்படும் தீவுகளிலிருந்த தென்றும் கூறியுள்ளார். இவையும் கந்தபுராணத்திற் குறிக்கப்பட்டிருக்கின்றன எனப் பின் காட்டுவோம் (அதிகாரம் 10). ஈண்டு "மெகிஸ்ப" எனும் பெயரினுற்பத்தியைக் கவனிப்பாம்.

## மகா ஈஸ்வர குளம்

"மெகிஸ்ப" (Megisba) மகா ஈஸ்வர என்றதின் லத்தீன் வடிவமன்றி வேறல்ல அதாவது, இராட்சதக் குளம் கி. பி. 50-ம் ஆண்டு வரையில் மகா ஈஸ்வர குளம் என வழங்கப்பட்டது. அது ஓர் ஈஸ்வரத்துக்குச் சமீபத்தில் இருந்தமையின் இப்பெயர் பெற்றது. அந்த மகா ஈஸ்வரம் திருக்கேதீஸ்வரமாம்.

ஆகவே, பெருங்கயிலை எனப்பட்டது திருக்கேதீஸ்வரம். இதுவே சிவபிரானின் பூலோக வாசம்—வெள்ளி மலை.

## அதிகாரம் 7

## அராவணை

மேருக் கோட்டையைத் தனதடிப்படுத்திய பின், சூரபன்மன் பாதலவுலகுக்குப் போய் அங்கிருந்த தானவர் கும்பிட அவர்களுக்குக் கிருபை செய்து, பின் நாகர் கோனுலகிற் போய் அவனுடன் போர் செய்து வெற்றிகொண்டு அவனிடமிருந்த அமிர்தத்தை வலாற்காரமாகப் பறித்துப் புசித்து, பின் ஏனைய நரகங்களுக்கும் போய் ஆங்காங்கு தன் கீர்த்தியை ஸ்தாபித்து திரும்பினான் எனப்பட்டிருக்கிறது. (அ. கோ. ப. 69—72). இவ்வுலகங்கள் பாக்கு நீரிணையின் இந்திய கரையிலிருந்த இடங்கள். இவ்விடத்தரசர் இந்திரனுக்குதவியாகித் தன் பின்னணியைத் தாக்காது தடுக்க அவர்களைக் கீழ்ப்படுத்தினான் போலும். அக்காலத்தில் இந்தியகரை தீவுகளுக்குச் சமீபமாக இருந்தது. திரும்பி வந்து,

> " பூவுலகிடையே போந்து புணரியொன்றகன்று மற்றைத்
> தீவினையொருவிச் சூரன் சேனைமா நீத்தஞ் சூழ
> மாவொடு புவனிபோற்ற வரியராவணையி னேமிக்
> காவலன் றுயில்கூர்பாலின் கடலிடைக் கடிது புக்கான் "
>
> (திக்குவிசயப் படலம் 73.)

என்றார். அதாவது, அவன் சம்பு தீவைச் சேர்ந்து, அதைச் சூழ்ந்த உப்புக்கடலைத் தாண்டி, ஏனைய தீவுகளைத் தவிர்த்து, பாற்கடலைச் சேர்ந்தான்.

மேருவே தீவுபற்றின் முக்கிய அரணாதலால் அதைக் கீழ்படுத்தியபின் காவலற்ற ஏனைய தீவுகளைத் தாக்க அவசியமிருந்ததில்லை—புட்கர கோட்டையை வெறிதாக்கி திக்குப் பாலகர் மேருவிலிருந்தார்கள்.

## நேமிக் காவல்

வால்மீகன் நாகநீவைப் "புறக்கதவம்" என்றெனெ மூன் குறித்துள்ளாம். "உட்கதவம்" ஒன்று இருந்த தென "புறக்கதவம்" பொருள் குறிக்கிறது. இதுவே "அராவணையி னேமிக் காவல்" இங்கு காவல் செய்தவர் விஷ்ணு, இந்திரனின் தம்பி. ஆகவே சூரபன்மன் இக் காவலைத் தாக்கவேண்டியதாயிற்று. அவன் பாற்கடலில் புக விஷ்ணு யுத்தக்கால் தொடுத்தார்.

விஷ்ணுவைச் சூரபன்மனின் தம்பியாகிய தாரகன் தோற்கடித்தான்.

பாற்கடல் காரைநீவைச் சூழும் கடல் என காட்டிடும். ஈண்டு "அராவணையி னேமிக் காவல்" எனப்பட்டது தற்காலம் "ஊர் காவற் துறை" எனப்படும் துறையன்றி வேறல்ல என்பது வெளிப்படை. ஊரைக் காத்தற்கு நியமிக் கப்பட்ட இத்துறையின் விசேஷத்தால் தனதீவு எனப்பண்டு வழங்கப்பட்ட தீவு ஊர்காவற்றுறைத்தீவு என இன்று வழங் கப்படுகிறது. "அராவணை" எனும் பெயர் சரவணை ஆயிற்று.

சரவணை.—"அரவம்" (பாம்பு) "சர்ப்பம்"—சரபம் —சரவம்: சரவ அணை "சரவணை" ஆயிற்று. இது ஊர்கா வற்றுறைத்தீவின் வடபகுதி.

யாழ்ப்பாணத்தின் காவலுக்கு காரைதீவுக்கும் ஊர்கா வற்றுறைத்தீவுக்கு மிடையேயுள்ள வாய்க்காலின் காவல் இன்றியமையாத தென்பதற்கு அங்குள்ள கடற்கோட்டை —இது ஒல்லாந்தரால் கட்டப்பட்டது—இன்றும் சான்று கும்.

ஊருத்துறை.—ஊர்காவற்றுறை ஊருத்துறை எனவும் வழங்கப்படும். இப்பெயரினுற்பத்தி நயினாதீவின் ஓர் பெய

ராகிய "சூழ்ஊலம்" (தொலமி). ஊலத்துக்குப் போகத் தோணியேறுமிடம் "ஊலாத்துறை" "ஊராத்துறை" "ஊருத்துறை" ஆயிற்று. சிங்களர் இத்துறையை "ஊரு தொட்ட" என்றதாலும், இத்துறையோடு பன்றியைச் சேர்த்து ஓர் கட்டுக்கதை இருப்பதாலும், "ஊரு" எனும் பதம் சிங்களத்தில "பன்றி" எனும் பொருளுடையதாதலாலும் இத்துறைப் பெயர் பன்றியிலிருந்து வந்த தென்பர் சிங்களமறிந்த தமிழர் சிலர். "ஊராத்துறை" எனும் பெயரையே தமிழாசிரியர் "ஊர்காவற்றுறை" யென்றுயர்த்திக் கூறுவர் என்பர் அவர்.

ஆனால் "ஊரா" "ஊலா" வின் திரி பன்றிப் "பன்றி" யன்று. "ஊர்காவற்றுறை"யின் உற்பத்தி ஊர்காப்பன்றி "ஊரா"ப்பன்றி யன்று.

அரசவிலை ஊர்காவற்றுறையாம்.

குறிப்பு.—வெலணை (வேலை—கடல் ; அணை—கரை) நாரந்தனை (நாரம்—நீர் ; அந்தனை—முடிவு) எனப்படும் பிரிவுகளும் ஊர்காவற்றுறைத் தீவிலிருக்கின்றன. இப்பெயர்கள் சரவணையை ஒத்த பெயர்களென்பது நோக்கற்பாலது.

# அதிகாரம் 8

## சுவர்க்கம்

ஊர்காவற்றுறையில் விஷ்ணுவைத் தோற்கடித்தபின், சூரபன்மன்

"ஆழியங்கிரியின்காறு மகலிடவரைப்பு முற்றச்
சூழுற நாடிப்போந்து தொல்லிரு விசும்பி னேகித்
தாழுறு நிலையிற் செல்லும் தபனனே முதலோர் யாரும்
வாழியென்றுசி கூற வானுயர் துறக்கம் புக்கான்"

(திக்குவிசயப் படலம் 100.)

என்றார். அதாவது பாற்கடல் தொடக்கம் சக்கரவாளமலை வரையும் (மார்ந்தை வரையும்) உள்ள பெரிய கடற் கரையை (தடம் பெரு நேமிப் பொருப்பை—அதிகாரம் 1 பார்க்க) தேடிப்பார்த்தபின் சுவர்க்கத்துட் புகுந்தான்

கரையைச் சோதனை பண்ணிய நோக்கம் தன் படையின் பின்னணியை பகைவர் தாக்க இடம் விடாதிருக்கவே யாம்.

சுவர்க்கமே இந்திரனின் நாடாதலாலும், மேருக் கோட்டையை விட்டோடி

"வெந்துய ரமரர் கோன் விண்ணிற் போயினான்"

விண் = சுவர்க்கம். (திக்குவிசயப் படலம் 40.)

ஆதலாலும், இந்திரனைத் தேடி சூரபன்மன் சுவர்க்கத்துக்குப் போனான்.

சூரபன்மன் சுவர்க்கத்துட் புகவே, அதைக் கேள்வியுற்ற இந்திரன் ஒளித்தோடினான்.

கொம்மென மனையுடன் குயிலுருக்கொடே
விம்முறு பிழைமுயன் விண்ணிற் போயினான்.

(திக்குவிசயப் படலம் 108.)

என்றார். ஈண்டு "குயில்" எனப்பட்டது ஓர்வகைத் தோணி. "விண்ணிற் போதல்" பாய்த் தோணியிற் பிரயாணம் பண்ணுதல் எனும் கருத்துடைத்து.

குறிப்பு:—அனுமாரின் கடற் பிரயாணத்தை வால்மீகன் "பிது பந்தனம"—தகப்பனின் பாதை—என்றார். அதாவது காற்றினால் போகல். அதாவது, அனுமாரின் தகப்பன் வாயு வாதலால் காற்றினால் போகல் ஆகும். இதை "ஆகாய வழியே போதல்" என்பர் புலவர். அனுமாரின் பயணத்தைப்பற்றி வால்மீகன் கொடுக்கும் விபரம் பாய்த்தோணிப் பிரயாணத்தினதே (D. T. R, pp. 876—9).

இந்திரன் ஒளித்தோட,

"ஒன்னலர் தேடுவதுணர்ந்து வானவர்
மன்னவனுக்கமு மாயும் போலுமா
லென்னினிச் செய்வதென் றிரக்க மெய்தியே
பொன்னக ரெங்கணும் பொலிவு மாய்ந்ததே."

(திக்குவிசயப் படலம் 109)

என்றார்.

## பொன்னகர்

சுவர்க்கத்திலிருந்த இந்திரனின் நகர் பொன்னகர் எனப்பட்டது. சுவர்க்கத்தைப் பொன்னினாடு என்பர்.

"பொன்னினாடு புரந்திடு மன்னன்"

(பாயிரப் படலம் 5)

என்றார்.

"இற்றையிப் பகன்முத லென்று மெங்களுக்
குற்றதோர் கடவுணீ யோம்பும் வேந்து நீ
பற்றுள தருமநீ பலரும் யாமினி
மற்றுன தேவலே மரபிற் செய்து மால்."

(திக்குவிசயப் படலம் 114).

எனக் கூறிச் சரண்புகுந்தார் பொன்னகா வாசிகள்.

" என்றிவை புகன்று போற்று மிமையவர் தம்மை நோக்கி
நன்று நுஞ் செய்கை யன்னு நகை செய்து யாப்பு நீக்கி
மன்றநம் பணி மேல் கொண்டு வைகுதிரினி நீ ரென்னு
வன்றவர் தம்மை விட்டா னழுன்மகத் தாவிவிட்டான்."

(திக்குவிசயப் படலம் 115.)

நாடு, நகர், இப்பூமியின் கண்ணன்றி ஆகாயத்திலிருந்த வையல்ல. இமையவர் இப்பூமியில் வசித்தவர்.

" தாழுந்தவத்தோன் றனைக் கண்ணுதற சாமி நோக்கித்
தாழுங்குறியோ யிவண் யாவருஞ் சார்த லாலே
தாழும் புவிதக் கிணைமுத்தரஞ் சால வோங்கத
தாழும் சுவர்க்க நில னுந்நனி தாழு மன்றே."

(திருக்கல்யாணப் படலம் 51.)

இவண் = இமையத்தில்.

என்றார்: இமையத்தோடு சுவர்க்க நிலமும் தாழும்: இமயமும் சுவாக்கமும ஒரே இராச்சியத்திலிருந்தன.

" சுவர்க்க நிலம் " பூமியிலன்றி ஆகாயத்திலல்ல.

ஆகவே, சூரபன்மன் புகுந்த சுவர்க்கமும் இந்திரனின் பொன்னகரும் இப்பூமியிலிருந்த இடங்கள். நயினுதீவுக் கோட்டையைத் தளதடிப்படுத்தி ஊராகாவற்றுறைக் காவலை வென்று சூரபன்மன் புகுந்த நாடு யாழ்பாணக் குடா நாடு அன்றி வேறாகாது. பொன்னகர் பொன்னாலையாம்.

ஊர் காவற்றுறை யிலிருந்து யாழ்ப்பாணம் புகும் வழி இன்றும் பொன்னாலை வழியாகவே இருககிறது!

" அவ்விடத்திலுள்ள சதுரங்கமணல், மாளிகை
யடைப்பு முதலாமிடங்களும், கட்டிடக்
குறிகளும், கண்டெடுக்கப்படும் பூர்வபொன்
னுணையங்களும், அவ்விடமிருந்த அட்டோ
லிககங்களைக் காட்டுகின்றன." (யோ. யா. ச. ப. 6.)

சுசுஅர (Sousouara) எனப்பட்ட ஓர் தீவு இலங்கையின் முன் புறத்திலிருப்பதாக தொலமி எனும் கிரேக்க ஆசிரியர் குறித்துள்ளார். (A. I. p. 251) இது 'சு' (மேன்பாட்டைக் குறிக்கும் முதலைடைமொழி) சுவர (சுவர் மேலைகம் அ. கோ. ப. 64), யாழ்ப்பாணம். கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்றானும் சுவரம் எனும் பெயர் யாழ்ப்பாணத்தைக் குறித்து வழக்கிலிருந்தது.

சுவர்க்கமே சுவர்லோகமாயிற்றென்பது வெளிப்படை.

“ சுவர் லோக மெய்ப்பதந் திலக்க மாங்கே
புகலோடு வானவரும் பிறரும் போற்றப்
புரந்தரன் வீற்றிருந் தரசுபுரிவன்” (அ. கோ. ப. 64)

புரந்தரன் = இந்திரன்.

# அதிகாரம் 9

## சில உலகங்களும் அண்டங்களும்

### உலகங்கள்

சுவர்க்கத்தைத் தனதடிப்படுத்தியபின், சூரபன்மன் மகலோகம் (அ. கோ. ப. 116), மலரயன் பதம் (அ. கோ. ப. 117), விஷ்ணு லோகம் (அ. கோ. ப. 126), சிவலோகம் (அ. கோ. ப. 129) போனான் என்றார்.

மலரயன் பதம்.—பிரமனின் பதம் அவர் வசித்த இடமாதல் வேண்டும். இது மேருவிலிருந்தது. பிரமா என்றும் மேருவில் வாழ்ந்தார் (D. T. R. p. 1693). ஆகவே சூரபன்மன் மேருவுக்குப் போனான். அதாவது யாழ்ப்பாணத்திலிருந்து நயினை தீவுக்குப் போனான். அங்கு மனோவதியிற் பிரமாவைத் தரிசித்தான். அவர் ஆசி கூறினார். அதன்பின், விஷ்ணு லோகம் போனான்.

விஷ்ணு லோகம்.—இது வைகுண்டம். அங்கு போய் விஷ்ணுவைத் தரிசித்தான். அவரும் ஆசி கூறினார். பின் சிவனின் மூதுலகுற்றான்.

சிவலோகம்.—இது சோதிட்கம். அங்கு போய் சிவபிரானை வணங்கி நின்றான்.

> "கண்ட நஞ்சுடைய வண்ணல் கருணை செய்தினி நீ யேனை
> யண்டமுஞ் சென்று நாடி யானையாலகிலம் யாவு
> மெண்டிசை புகழு மாற்றாலிறை புரிந்திருத்தி"
>
> (திக்குவிசயப் படலம் 132.)

என்று சிவபிரான் திருவாய் மலர்ந்தருளினார்.

சூரபன்மன் போனது நயினைதீவிலிருந்த மும்மூர்த்தி பதங்களுக்கன்றி வேறிடத்துக்கல்ல என்பது ஈண்டு தெளிவாகிறது. இவை ஒரு அண்டத்திலிருந்தன. அது பற்

றியே "ஏனை யண்டமும் சென்று" என்றார் சிவபிரான். இவ்வண்டங்களே "அகிலம் யாவும்" அதாவது பூவுல கண்டமுற்றும் (திருவவதாரப் படலம் 45) — சத்த தீவுகள் (அதிகாரம் 1. தடமரியப்பார் பார்க்க).

மகலோகம் :—மகலோகம் எனப்பட்டதும் ஓர் இடமன்றி ஆகாய உலகமல்ல. அது நாவலந் தீவிலிருந்தது. அங்கு "ஓசை கொண் மறைகளார்க்கும்" என்றார். (திக்கு விசயப் படலம் 116). அது யாகஞ் செய்யுமிடம்.

"மேருவிலுடைப்பரன் விரும்ப வகிலத்தே
நாரதனொர் வேள்வியை நடாத்தியிடலுற்றான்."

"மாமுனிவருஞ் சுரரு மாநிலவரைப்பிற்
றேமவு தவத்தினுயர் தொல்லை மறையோரு
மேம மொடு சூழ்தர வியற்றிய மகத்திற்
றீமிசை யெழுந்த தொரு செக்கர்புரை செச்சை

"அங்கிதனில வந்ததகராற்று மகந்தன்னி
னங்களினமே பலவு நாளு மடுகின்றார்."

(தகரேறு படலம் 1—3.)

நாரதன் வேள்வி செய்தது "அகில"த்தில்—சத்த தீவில். வேள்வி நடந்த இடத்தில் பல ஆடுகள் எப்பொழுதும் கொல்லப்பட்டன. ஆகவே அது ஓர் மகதலம்.

"பரந்ததனை மால்வரை பராகமெழ வோடித்
திரிந்துயிர் வருந்த வடல் செய்தது செயிர்த்தே."

"எட்டுள திசைக்கரி யிரிந்தலறி யேங்கக்
கிட்டி யெதிர் தாக்கும்."

(தகரேறு படலம் 6, 7.)

ஈண்டு மால்வரை எனப்பட்டது இமையம் (இமையமால் வரை பார்பதிப் படலம் 11) கந்தவரை (திருவிளையாட்டுப்

படலம் 112) அல்லது நாபிஞதீவிற் கயிலாசம் (கணங்கள் செல் படலம் 8 பார்க்க), ஆதல் வேண்டும். திசைக்கரி திக்கு பாலகரின் நகரங்கள். ஆகவே, மகதலம் இமையத்துக் கும் மேருவுக்கு மிடையிலிருந்ததெனக் கொள்வாம். மக தலம் மகலோகம் ஆயிற்று.

மூவுலகு (Triune world).—சூரசங்காரத்தின் பின் இலங்கையும் இந்திரனி னிராச்சியத்தின் ஓா பாகமாயிற்று. சுவர்க்கம் (விண்) சத்த தீவு (மண்) இலங்கை (கீழுலகம்: அசுரா வாசம்), இம்மூன்றுமே "மூவுலகு". இந்திரன் மூவுலக வேந்தன் எனப்பட்டான் (D. T. R. p. 1670—Lord of the three worlds). தென்னிந்திய சாசனங் களில் "திரிபுவனச் சக்கரவர்த்தி" என வருவதும் இம் மூவுலகைக் குறித்ததாதல் வேண்டும்.

## அண்டங்கள்—அண்டர்

அண்டங்கள்.—இவை தீவுகளன்றி வேறல்ல. சிவ பிரானின் விடைபெற்று, சூரபன்மன் நாபிஞதீவை விட்டுப் போய் ஏனைய தீவுகளை ஒவ்வொன்ருகத் தரிசித்தான். அங்கு வசித்தவர்கள் உருத்திரரும் (திக்குவிசயப் படலம் 133) வானவரும் (திக்குவிசயப படலம் 135).

"பவர் முதலுருத்திரேசர் பதிஞெருகோடியுள்ளா
ரிவர் சிவனருளால் வானேரினத்துடனீண்டியுற்ருர்."
(உருத்திரர் கேள்விப் படலம் 12.)

எனப்பட்டது ஈண்டு நோக்கற்பாலது.

இவ்வண்டங்களில்,

"தானவர் பலரையங்கட் டன்னரசளிப்ப வைத்தான்"
(திக்குவிசயப் படலம் 135.)

என்ருர். உப்புக்கடலிலிருந்து பாற்கடலுக்கு நேரே போனன் "மற்றைத் தீவினை ஒருவி" போனன் சூரபன்

மன் என முன் கவனித்தாம். எலவே போகாத தீவுகளுக்கு இத்தருணம் போனன் அங்காங்கு தன் அரசை நடத்த வேண்டிய ஒழுங்குகளைச் செய்தான் என்றார்.

" அப்பெரும் புவிக்குத் தானோராயிர கோடியண்ட
மொப்பில வென்ன வுண்டா லொன்றினுக்கொன்று மேலாச்
செப்புறு நிலைமைத்தன்று தெரிநதிடிற் பரந்து வைகும்
வைப்பெனலாகு மன்ன மறறவை யம்பொன் வண்ணம்,"

(அ. கோ. ப. 3.)

எனக் குறிக்கப்பட்டதும் ஈண்டு நோக்கற்பாலது.

அண்டர்.—அண்டர் எனப்பட்டவர்கள் இமையவர்.

" இத்திறம் வீற்று வீற்று வெல்லையிலண்டந்தோறு
மெய்த்தமராகியுள்ள வவுணரை வேநதராக
வைததனன்றுணைவரோடு மீண்டனன் மறறிவ்வணடப
பித்திகையதனுட்சென்று பெறலருநதுறக்க மூற்றன்,"

(திக்குவிசயப் படலம் 136.)

" திண்டிறன் மாயையின் செம்மலித்திற
மண்டர்தந் துறக்க மேலடைந்த காலையில்,"

(எதிர்கொள் படலம் 1.)

அதாவது, அண்டங்களின் (தீவுகளின்) எல்லையைக் கடந்து சுவர்க்கம் சேர்ந்தான், சுவர்க்கம் அண்டருடையது—தீவாரின் தாய்நாடு—என்றார். சுவர்க்கம்=யாழ்ப்பாணம்.

சூரபன்மன் யாழ்ப்பாணத்தை விட்டு, திரும்பவும் நயினதீவு சேர்ந்தான்—அவனி: எதிர்கொள் படலம் 18; மண்ணுலகு: எதிர்கொள் படலம் 19. அங்கு, விசுவ கர்மனை அழைத்து வேண்டிய நகரங்களை அமைப்பித்தான்.

வீரமகேந்திரபுரம், தென்கடலில் இலங்கைக் கரைக்குக் கிட்ட சூரபன்மனுக்காக அமைக்கப்பட்டது. (நகர் செய் படலம் 22).

ஆசுரம், வடகடலில் (யாழ்ப்பாணக் கரையில் ?) சிய முகனுக்காக அமைச்சுப்பட்டது. (நகாசெய் படலம் 24).

மாயாபுரம், நாவலந் தீவில் (நயினு தீவில்) மேருவுக்குத் தெற்கே எமகூடத்துக்குக் கிட்ட தாரகனுக்காக அமைக்கப்பட்டது. (நகாசெய் படலம் 26, 27).

" மற்றுளவெம் புணரிதொறும் வயின் வயின் சேர் தீவு தொறுங்
கொற்றமிகுஞ் சூரபன்மன் குலவுபெருந்தானையெல்லாஞ்
சுற்றமுடன் மேவுதற்குத தொன்னகரம் பல."

(நகர்செய் படலம் 25.)

அமைக்கப்பட்டன.

இதன் பின் தன மகுடாபிஷேகத்தை நிறைவேற்றி,

" ஏவியே தனது தானைக் கிறைவரிற் பலரை நோக்கி
நீவிர்களிரண்டு கோடி நீததமா மணிகத் தோடு
தீவுகடோறு மாழி யிடநதொறுஞ் செய்த மூதூர்
மேவுதிர் விரைவி லென்று வனையரை விடுத்தான் மன்னே "

(அரசுசெய் படலம் 15.)

முன் சூ ர ப ன் ம ன் தரிசித்ததாகக் குறிக்கப்பட்ட அண்டங்களே ஈண்டு தீவுகள் எனப்பட்டன. " மற்றுள வெம்புணரிதொறும் வயின் வயின் சேர் தீவு தொறும் " (நகர்செய் படலம் 25) விசுவகர்மனலமைக்கப்பட்ட நகரங்களே ஈண்டு சுட்டப்பட்டன.

# அதிகாரம் 10

## வேறு சில இடங்கள்

1. சரவணம்.—இமையத்துக்குச் சமீபத்தில் நயினுதீவிலிருந்த ஓர் பொய்கை.

" அம்மை வாழிமையச் சாரற்
றங்கிய கமலம் பூத்த சரவணம்

(திருவவதாரப் படலம் 90.)

2. குமரனின் விளையாட்டிடங்கள்.—கயிலாசமும் (திருக்கேதீஸ்வரமும்) அதன் அயலும்:—

" மன்று தொறுலாவுயலர் வாவிதொறுலாவுந
துன்று சிறு தென்றறவள் சோலை தொறுலாவு
மென்று மூல வாதுலவும் யாறு தொறுலாவுங்
குன்று தொறுலாவுமுறை யுங்குமர வேளே."

(திருவிளையாட்டுப் படலம் 3.)

ஈண்டு, கயிலாசத்துச் சபாமண்டபம் (மன்று) கயிலாசத்துக்குத் தெற்கே வானயாற்றுக்கு வடக்கே யிருந்த சோலை, அதிலிருந்த நீர் நிலையங்கள் (வாவி), வானயாற்றின் வற்றுக் கிளைகள், சக்கரவாள மலை (குன்று) குறிக்கப்பட்டன (அதிகாரம் 6 பார்க்க).

" குளத்தினுலவுநதி குறைந்திடு துருத்திக்
களததினுலவுந நிரைகொள கந்துடை நிலைததாந
தளததினுலவும் பனவர் சாலையுலவும் மென்
னுளத்தினுலவுஞ் சிவனுமைக்கினிய மைந்தன்."

(திருவிளையாட்டுப் படலம் 4.)

ஈண்டு, இராடசதக்குளம், பாலாவி ஆறு (வானயாற்றின் வற்றுங் கிளை) மகா ஈஸ்வரகுளத்திலிருந்த மேய்ச்சற்றரை (அதிகாரம் 6 பார்க்க) குறிக்கப்பட்டன.

தீவுகளும் யாழ்ப்பாணமும்.

" மண்ணிடை யுலாவு நெடு மாதிர முலாவு
மெண்ணிடையுருதகட லெங்கணு முலாவும்
விண்ணிடை யுலாவு மதி வெய்யவனுடுக் கோள்
கண்ணிடை யுலாவு மிறை கண்ணில் வருமண்ணல்.''

(திருவிளையாட்டுப் படலம் 6.)

ஈண்டு பாரகம் (மண்), எழுகடல் (எண்ணிடையுரு தது=8 ஆகாதது=7), யாழ்ப்பாணம் (விண்) சோமலோகம் (மதிக்கண்) சூரியலோகம் (வெய்யவன் கண்) மக லோகம் (உடுக்கோள்கண் : உடு=ஆடு ; கோள்=கொலை செய்தல்) குறிக்கபபட்டன.

" அங்கமல நான்முக னரும்பத முலாவு
மங்கல நிறைந்ததிரு மால்பத முலாவு
மெஙகளெபெரு மாட்டித விரும்பத முலாவுந
திங்கண் முடி மேற்புனை சிவன்பத முலாவும்.''

(திருவிளையாட்டுப் படலம் 8.)

ஈண்டு நயினாதீவிலிருந்த மனோவதி, வைகுந்தம், இமையம், சோதிட்கம், கயிலாசம் குறிக்கப்பட்டன.

3. நாகம்.—சுவர்க்கம், யாழ்ப்பாணம்.

" ஆகையா லெம்பிரானி யருவுரு வாகி நின்ற
வேத நாயகனே யாகு மெமதுமா தவத்தா லெங்கள்
சோகமா னவறறை நீக்கிச் சூர்முத றடிந்தே யெம்மை
நாக மே லிருத்து மாற்ற னண்ணினை குமரனே போல்.''

(திருவிளையாட்டுப் படலம் 99.)

குறிப்பு :—" நாகர் " " நாகம—சுவர்க்கம் " எனும் பதத்திலிருந்து வந்ததன்றி " நாகம்—பாம்பு " எனும் பதத்தி லிருந்தல்ல.

4. கிரவுஞ்சகிரி.—மாயாபுரம். நயினாதீவில்.

5. கந்தவரை, கந்தவெற்பு, கந்தமாதனம்.—நயினை தீவில், இது மேருவுக்குத் தெற்கே கயிலாசத்துக் கருகி லிருந்தது. கயிலாசம் இமையத்துக்கு வடக்கே.

" என்னலுங்குக னிசைந்து நடந்தே
பொன்னினலுயர் பொருப்பினை நீங்கித்
தன்ன தொண் கயிலை சாரநதிடு ஞாயகர்
மன்னி நின்ற தொரு மால வரை புக்கான்."

(திருவிளையாட்டுப் படலம் 112.)

" ஈசன்மைந்த னிளைய னிமையவா
பூசை செய்யப் பொருந்தலி னவ்வரை
மாசில் கந்த வரையென யாவரும
பேச வாங்கொர் பெயரினைப் பெறறதே."

(திருவிளையாட்டுப் படலம் 126.)

6. தேவகிரி, இமையவாசயிலம், கடவுள் வெறபு, அமரர் வெற்பு, மணிவரை.—இவை கந்த வெற்பு.

" ஏகவந் தங்கணின்ற விமகிரி யெல்லை தீாந்தான் "

(தேவகிரிப் படலம் 1.)

ஈண்டு, இமகிரிப்புரத்து வட எல்லையைக் கடந்தார் என்னக் குறிக்கப்பட்டது. இமையத்தைக் கடந்து அப்பாற் சென்றாரல்ல. ஏனெனில், எல்லை கடந்து,

" திரு நெடுவேலோன் றென்பாற் செவ்விதி னடந்து மேல்பா
லிரவியி னிரவி செல்ல விமையவர் சயிலஞ் சேர்ந்தான்"

(தேவகிரிப் படலம் 2.)

" கல்லென வருவி தூங்குங் கடவுள் வெற் பொருசாரெய்தி "

(தேவகிரிப் படலம் 8.)

" அவ்வரைக்க ணகன்பெரு கொச்சியுட்
கைவல் வித்தகக் கம்மியர் மேலவ
னெவ்வவர்க்கு மிறைவனிருந்திடத்
தெய்வதக்குல மொன்று செய்தானரோ."

(தேவகிரிப் படலம் 15.)

" அமரர் வேற்பி லயிற்படையேந்திய
விமலனுற்றது சொற்றனம் ",

(தேவகிரிப் படலம் 32.)

" குருமணி மகுடமாறுங் குழைகளுந் திருவில் வீசத்
திரு மணிவரையின் மேவுந் திருக்கை வேற்பெருமானுக்கு
கரு மணியாழிப் புத்தேள் கையுறையாக வாங்கோர்
பருமணி நீட்டிற் றென்னப் பானுவந்துதயஞ் செய்தான்"

(வழிநடைப் படலம் 1.)

எனப்பட்டதால், கந்தகுமரன் தங்கியது இமையத்துக்கு வடக்கேயிருந்த கயிலாசத்தினருகிலிருந்த கந்தவெற்பிலாதலால் என்க.

குறிப்பு :—மணிவரை மணி ஆழியிலிருந்தது பற்றி அத்துடனிணைததுப் பண்டையோர் கூறியதை சுவாமிகள் இமயமலை மணியாழியோடு சம்பந்தப்பட்டாற் போற் கூறியுள்ளார். மணி ஆழி = பாக்கு நீரிணை, இக்கடற் றீவுகளை தொலமி மணி ஆலத்தீவுகள் (Maniolai Islands) என்றார். (A. I. p. 242).

7. பரங்குன்று.—இது இமையம் என்பது தெய்வயானையம்மை திருமணப் படலத்தில் தெளிவாகிறது. கல்யாணம் நிறைவேறியது பரங்குன்றில். அதற்காக இந்திராணி மேருவிலிருந்து " மடமகடன்னொடும் வானத் தேகினள் " என்றார். " வானம் " = வான் = இமவான் = இமையம்.

8. "வழி" இடங்கள்.— வழி நடைப் படலத்தில் கந்த குமரன் மணிவரையினின்று புறப்பட்டு இமய மலையி லிருப்பதாகக் கொள்ளப்படும் "கேதாரம்," அதன்பின் காசி முதலிய இந்திய ஸ்தலங்களைத் தரிசித்து மண்ணி யாற்றங்கரை சேர்ந்தார் எனச் சுவாமிகள் குறித்துள்ளார். ஆயின் "மணிவரை" (வழி நடைப்படலம் 1) மணி ஆழியி லிருந்த தேவகிரியாதலின், கந்தகுமரனின் வழி இந்தியாவினூடாக வல்லவென்பது வெளிப்படையாகிறது. பின்வரும் குறிப்புகளாலும் இது ஸ்தாபிக்கப்படும்.

## 9. குமாரபுரி, சேய் நல்லூர் (சேய்ஞலூர்)

கந்தகுமரனோடு வழிபோன இந்திரனைப்பற்றிப் பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

> "சூற் புயன் மாறிய சுரத்திற் றொக்குறு
> மாறபரல் வரைபுரை மணலின் றிட்டையின்
> பாற்படுகின்றனன் பனிமதிக்கதிர
> மேற்படவசைசுதனன் வினையம் வேறிலான்."
> (குமாரபுரிப் படலம் 6.)

அதாவது, "சுரத்தில் தொக்கு உறும்......மணலின் திட்டையின் பால்"—சுரத்திற் பொருந்தி யிருக்கின்ற மணலின் திட்டை மீது, எனக் கூறியதால் சேய் நல்லூர், "சுரம்" "மணலின் திட்டை" எனப்பட்ட இடங்களோடு சம்பந்தப்பட்டதாக இருந்ததென்பது வெளிப்படை.

"மணலின் திட்டை" என ஈண்டு குறிக்கப்பட்டது "மணற் திடல்". இது யாழ்ப்பாணத்தினோர் பண்டைப் பெயர் (Y. V. M. p. 5).

"சுரம்" என ஈண்டு குறிக்கப்பட்டது யாழ்ப்பாணம் என இதோ நிரூபிப்பாம்.

ஆகவே சேய் நல்லூர் எனப்பட்டது நாம் "நல்லூர்" எனவழங்கும் இடம். யாழ்ப்பாணத்தில் இன்றும் இவ் விடத்தில் ஓர் விசேஷமான கந்தசுவாமி கோயிலிருக்கிறது.

## 10. சுரம், பெரும் பாலை

"சுரம்" எனும் பெயர் "சுரர்" (வானவர்) எனும் பதத்திலிருந்து வந்தது. சுரர் + அம் = சுரம். இதை வால்மீகன் சுரசா என வழங்கினார் அதன் பொருள் நாகரின் (சுரரின்) தாய் (சம், பிறப்பைக் கொடுத்த) என்றார். அதாவது, சுரரின் முக்கிய தேசம், தாய் நாடு, சுரம், சுரசம் எனப்பட்டது. இதைப் பெரும் பாலை என்றார்.

> " ஏழு நேமியும் பெரும்புறக்கடலு மெண்டிசையுஞ்
> சூழ வன்னதாலழிவின்றித தொன்மை போலாகி
> யாழியுளனுறும் வடவையி னவற்றிணைப் பருகி
> யூழிதன்னினு மிருப்பதவ் வுயர் பெரும் பாலை."
>
> (சுரம்புகு படலம் 2,)

என்றார். அதாவது சுரத்தைச் சூழ்ந்து எட்டுப் பக்கமும் "எழு நேமி" (பாக்கு நீரிணை) யும் "பெரும் புறக்கடல்" (இந்து சமுத்திரம்) உம் இருக்கின்றன. இப்படி இருப்பது யாழ்ப்பாண மன்றி வேறிடமல்ல. யாழ்ப்பாணத்துக்கு மேற்கே பாக்கு நீரிணை. இத்துடன் தொடர்ந்துள்ள கடல் (Jaffua Lagoon) தெற்கே யிருக்கிறது. யாழ்ப்பாணத்துக்கு வடக்கேயும் கிழக்கேயும் இந்து சமுத்திர மிருக்கிறது.

> " கொற்ற வெங் கதிர்வே லண்ணல் கொல்லுலையழலிற் செக்கர்
> பற்றிய விரும்பு போலும் பாலையங் கானத் துற்றான்,"
>
> (சுரம்புகு படலம் 1,)

என்றார். ஈண்டு பெரும்பாலையை "கொல்லனது உலைக் களத்திலுள்ள அச்கினியிற் காய்ந்து சிவப்பேறிய" இரும் போடு உவமித்துக் கூறினார். ஆனால்,

" தண்ணிலா வெழு நாத்தலை யிரண்டுடைத் தழலின்
பணணவர்க்குல காயது முது பெரும்பாலை."

" வறிய செந்தழல் வெவ்வனம் வேலவன் வரலா
னறிய தண்மலாச் சோலையா யுவகை நல்கியதே."

(சுரம்புகு படலம் 4, 23.)

எனக் குறித்ததில் அது உண்மையாகவே நீக்கிரையான இடமெனக் காட்டப்பட்டது.

" தொழிலிது புரிந்தகாலைச் சூரமகன் றனது மாடே
தழிய கா வலரை நோக்கிச் சயந்தனு மிவரு மல்லா
லொழிய நின்றோரை யெல்லா மொல்லையிற் றருதிர் பின்ன
ரழிய விம் மூதூர் செந்தீ யாரசனுக் களித்தி ரென்றான்."

(அமரர் சிறைபுகு படலம் 92.)

இது பொன்னகா (பொன்னாலை) அக்கினிக் கிரை யாக்கப்பட்டதைக் குறிக்கிறது. அக்கினி பரந்து அதிக நாசஞ் செய்தது.

பெரும்பாலை இரு பாலை என இன்று வழங்கப்படு கிறது. இது நல்லூருககு வடக்கே இருக்கிறது. நல்லூரி லிருந்து செந்திக்குப் போன வழியிலிருந்தது. பராசர முனிவரின் குமாரா அறுவா பரங்குன்றிலிருந்து இங்கு வந்து கந்தகுமரனைச் சேர்ந்தார்கள். இமயமலையிலிருந்து தென் இந்திய பாலைக்கு வருவதா நயினை தீவிலிருந்து யாழ்ப்பாணத்து இரு பாலைக்கு வருவதா கூடியது ?

## 11. செந்தி.

" சுரமது கடந்து நீங்கிச் சோதிவேலுடைய வண்ணல்
விரிபுனற் சடிலத்தண்ணல் மேவு செங்குன்றூர் நோக்கிப்

பருமணி வயிரமுத்தம் பலவளம் பிறவு மாழித்
திரையெறி யலைவாயாகுஞ் செந்திமா நகரம் புக்கான்.''
(திருச்செந்திப் படலம் 1.)

செந்தி, செங்குன்றாரிலிருந்தது. இது முத்து விளையுங் கடலாகிய மன்னார்க்குடாக் கடலிலிருப்பதாக வர்ணித்து இந்தியாவிலிருக்கும் திருச்செந்தூர் எனச் சுவாமிகள் குறித்தார். ஆனால்,

“ அறுமுக னங்கணேகி யகிலகம் மியனைநோக்கி
யிறையிலோர் சினகரதனை யியற்றுதி யீண்டை யென்னத
திறனுணர் புனைவர் செம்மல் சிந்தையினுடித் தேவ
ருறை திரு நகரம வெஃக வொருதிருக்கோயில்செய்தான்.''
(திருச்செந்திப் படலம் 2.)

என்று அடுத்த கவியிற் கூறிவிட்டார். “தேவர் உறை திரு நகரம் வெஃக ''—தேவர்கள் (வானவர், இமையவர்) வசிக்கின்ற சுவர்க்கம் ஆசைப்படும்படி, “ ஈண்டு இயற்றுதி'' —இச் சுவர்க்கத்தில் அமை, என்றதால் கோயில் கட்டப்பட்ட இடம் சுவர்க்கம் என்பது தெளிவாகிறது.

ஒரு பாட்டுச் செந்தி இந்தியாவில் மறுபாட்டுச செந்தி சுவர்க்கத்தில் !! என்றாலும் கச்சியப்ப சுவாமிகள் இவ்வண்ணம் குறித்திருப்பதாச்சரியமல்ல. ஏனெனில், முதலாஞ் செய்யுளின் முதலாம் இரண்டாமடிகளும் இரண்டாஞ் செய்யுளும் பண்டையோர் சொல்லிக் காட்டியதை அடக்கியுள்ளவை, ஏனைய இரண்டடிகளும் தவறான பொதுக் கொள்கையை அடக்கியுள்ளன.

இதை ஒப்ப, குப்பையிற் குன்றுமணி போலத் துலங்கும் நுட்பக்குறிப்புகள் அங்குமிங்கும் காணப்படுகின்றன. இவையே கந்தபுராணச் சரித்திர மூல கர்ணபாரம்பரியத்தை

உள்ளங்கையி நெல்லியங்கனி போலாக்க எதுக்களாயின. இது நிற்க,

செந்தியில்

" பானிமிர் மென்குரற் பாறபடு நல்யாழ்
கான ரிசைத்தனர் கந்தருவத்தோர்."

(திருச்செந்திப் படலம் 4.)

என்றார். அதாவது காந்தருவ நகரத்தார் (கந்தருவத்தோர்) யாழிசையையும் மிடற்றிசையையும் பாடினர்களாம். யாழ்ப் பாணா அவ்விடத்து வாசிகள். அவ்விடம் யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தின் ஓர் பண்டைப் பெயா சாந்தருவ நகரம்

(பெயா யா. ச. ப. 5).

மேலும் செந்தியில்,

" துறந்து சீதியமர் சூர்முத லாரோ
பிறந்த வாறுமவர் பேஸிய நோன்பு
மிறந்த செய்யவர மெய்திய வாறுஞ்
சிறந்து பின்னரசு செய்திடு மாறும்

" மறற வெய்யவாத மாயமு முறகொள்
வெறறியும் வலியு மேன்மையு நும்பா
லிற்றை நாளவரை யியற்றிய துன்பு
முறறு மொன்றற மொழிந்திடு கென்றான்."

(திருச்செந்திப் படலம் 11, 12.)

என்றார். அதாவது கந்தகுமரன் தம்முன் நின்றவரிடத்தில் அவாகள் படும் துன்பங்களை விசாரித்தார். இவர்கள் துன்பப் படுத்தப்பட்டது சூரன் முதலிய அசுரரால். நாம் முன் கவனித்தது இவர்களின் மேல் சூரன் கொண்ட வெற்றி தான்.

ஆகவே யாழ்ப்பாணத்திற்றான் யாழ்ப்பாணத்தவரைத் தான் குமரன் வினவியது.

" கோக்குமர னிவை கூற விசைந்தே
மீக்கொள் பொன்னுலக வேந்தயனின்ற
வாக்கின் வல்லகுர வன்றனை யன்பா
னோக்கி நீயிவை நுவன்றருள கென்றான் "

(திருச்செந்திப் படலம் 13)

யாழ்ப்பாணத் தரசனை (பொன்னுலகு = சுவர்க்கம்) குமரன் அறிய விரும்பியதைக் கூறும்படி வியாழ பகவானைத் தூண்டி விட்டதும். ஈண்டு பொன்னினுட்டை " பொன்னுலகு " என்றதைக் கவனிக்க. அதாவது உலகு = நாடு, தேசம்.

செங்குன்றாரும் வானதியும்.—இவை யாழ்ப்பாணத்தின் எப்பகுதியென கீழே கொடுக்கப்படும் மேற்கோள் விளக்கும்.

" நாட்டுச் சிறப்பையும், பொருள் வரு வழியையு முண்டாக்கும் மலைவள ஆற்றுவளங்கள், இலங்கை இந்தியம் முதலாமிடங்களைப் போலில்லையென்றமைல், அவற்றின் பேராவது உச்சரிக்கும் பாக்கியமாக இந்நாட்டின் வடமேற் பாகத்தோர மலையென்று சொல்லப்படுஞ் சிறுத்திடரும், அதனருகே சமுத்திரதீரத்திற் பாயுமோர் நன்னீரருவியு முண்டு." (யோ. யா. ச. ப. 4).

இச்சிறுத்திடரும் நன்னீரருவியுமே "செங்குன்றாரும் வானதியுமாம்." "செம்மை" எங்கிருந்தென்பீராயின்,

" அவைகட் கணித்தாயவிடம் திருத்தம்பலைப்பதி யெனப் பெயர் பெற்றது." (யோ. யா. ச. ப. 4), என்றார்.

தம்பலப் பூச்சி போன்ற சிவப்பு நிறமுள்ள இடம் தம்பலை எனப்பட்டது. இது செம்பாடு எனப்படுகிறது. செந்நிறத்திலிருந்தே " சேந்தி " " சேங்குன்று " பிறந்தன.

" விரிபுனற் சடிலத்தண்ணல் மேவு செங்குன்றூர் " என்றார். யோன் ஆசிரியர் இதை குறித்துள்ளார்.

"பூர்வகாலத்திற் சிவன் பார்வதி சமேதராய் இவ்விடம் வந்து திருத்தம்பலைப் பதியில் வாசம் பண்ணினர். அப்போது தமது பாரியாகிய உமையவள் ஸ்நானஞ் செய்வதற்காய்க் கண்டகி தீர்த்தத்தை யிவ்விட மழைத்து வைத்தன ரென்றும், அதிற் தேவுக்களும், இருஷிகளும் பிறரும் வந்து தீர்த்தமாடிப் பண்ணியவான்களாய்ப் போயின ரென்றும், அக்காரணத்தால் இந்த நாடு புண்ணியபுர மென்றழைக்கப் பட்டதென்றும் சொன்னார். அவ்விடத்தே திருத்தம்பலேசுவரன், திருத்தம்பலேசுவரி கோவில்களும் அவைக்கருகிற் கதிரையாண்டவர் கோவிலுங் கட்டப்பட்டிருந்தன."

(யா. யா. ச. ப. 4, 5).

கதிரையாண்டவர் கோவிலும் அங்கிருந்த தென்பதைக் கவனிக்க. கதிரையாண்டவர் = கந்தகுமரன்.

சிவன் "செங்காடன்" எனப்பட்டது இச்செந்நிலத்தில் வசித்தமையின். செங்காடு செம்பாடாயிற்று.

செந்தி கீரிமலை யன்றி வேறல்ல. இதை "சேயுயர் பூம்பொழில்" என்றார் சாத்தனார் (மணி. காதை 9, அடி 30).

கீரிமலைக்கும் நல்லூருக்கு மிடையில் இருபாலை இருக்கிறது.

# அதிகாரம் 11

## இமையவரின் சரித்திரம்

நாம் இதுவரையும் கவனித்த இடங்களே கந்தபுராணம் அறை பொருள்கள். இவ்விடங்களோடு சேர்ந்த பண்டைச் சரித்திர சம்பவங்களே அதில் மறை பொருள். இவற்றை சுருக்கமாகக் கவனிப்பாம்.

### இந்திரனின் இராச்சியம்

யாழ்ப்பாணமும் சத்ததீவுகளும் ஓர் இராச்சியமாயிருந்தது. இவற்றை விண்ணும் மண்ணும் என்றமைத்தார்கள். அதினரசன் இந்திரன், வாசவன், புரந்தரன், தேவர் செம்மல், நாகர் கோன், சுரபதி முதலிய பெயர்களாலும் ஆங்கு வசித்தவர்கள் இமையவர், தேவர், வானவர், அமரர், சுரர், அண்டர் முதலிய பெயர்களாலும் அழைக்கப்பட்டார்கள்.

யாழ்ப்பாணத்திற் பொன்னாலையும் (பொன்னகர்) நயினாதீவில் இமையம் எனப்பட்ட ஓர் நகரமும் இந்திரனின் வாசமாயிருந்தன.

இவ் இராச்சிய பாதுகாப்புக்காக நயினாதீவில மேருக் கோட்டையும், நெடுந்தீவி லோர் வட்டக் கோட்டையும், ஊர்காவற்றுறையிலோர் காவலுமிருந்தன.

கோட்டைகளில் எட்டுத்திக்கிலும் ஓவ்வோர் சேனாபதியின் படையிருந்தது. இவ்வெண்மருள், இந்திரன் தலைவன். குபேரன் "இயக்கர் கோமான்" எனப்பட்டமையின் அவருடைய இராச்சியம் இலங்கையிலிருந்ததாதல் வேண்டும். ஏனைய ஆறு சேனாபதிகளும் நயினாதீ வொழிந்த ஏனைய ஆறு தீவுகளின் சிற்றரசர் போலும். இராச்சியத்தின் அஸ்திவாரம் படைவீரர் மானியமாயிருந்தது போலும்— Feudalism. இலங்கையிலும் எண்மரின் தலங்களிருந்தன (அ. கோ. ப. 59).

ஊர்காவற்றுறைக் கடற்காவல் விஷ்ணுவின் பொறுப்பிலிருந்தது.

மேருக்கோட்டையில் பிரமா, விஷ்ணு, சிவன் வசித்த இடங்களுமிருந்தன. பிரமாவின் வாசம் வேறிருந்ததில்லை. விஷ்ணு ஊர்காவற்றுறைக் காவலிலும் வசித்தார். சிவனுக்கு நயினாதீவில் ஓர் கயிலாசமும், மாந்தையில் இன்னோர் கயிலாசமும் இருந்தன.

## அசுரர்

அசுரரின் வாசம் இலங்கை. சுரருக்கும் அசுரருக்கு மிடையில் என்றும் பகை இருந்தது. அசுரருக்குள், சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் எனப்பட்ட மூன்று சகோதரர் தோன்றி தம் பகைவரை ஒடுக்க எண்ணி அவர்கள் மேற படையெடுத்தார்கள்.

## அசுரர் படையெடுத்தல்

சூரபன்மனும் தம்பிமாரும் தம்படைகளுடன் இலங்கையினின்றும் புறப்பட்டுப் போய் நயினாதீவிலிருந்த மேருக் கோட்டையைத்தாக்கி அதைக் கீழ்படுத்தி, ஊர்காவற்றுறை சென்று அங்கிருந்த காவலையுந் தோற்கடித்து யாழ்ப்பாணம் புகுந்து பொன்னாலை சேர்ந்தார்கள். இந்திரன் ஒளித்தோடி விட யாழ்ப்பாணத்தார் சரண் புகுந்தனர்.

இதன் பின் சூரபன்மன் நயினாதீவுக்குப்போய் அங்கிருந்த வெள்ளிஸ்தலத்தை (மகலோகம்) தரிசித்தான்—ஸ்தோத்திரப்பலி கொடுக்கப் போலும். அதன் பின் பிரமாவையும் விஷ்ணுவையும், சிவனையும் தரிசித்து அவர்களின் ஆசிபெற்று ஏனையதீவுகளையும் தரிசித்து ஆங்காங்கு தன் காரியதரிசிகளை வைத்து யாழ்ப்பாணம் சேர்ந்தான்.

## சூரபன்மன் அரசு செய்தல்

யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பவும் நமினைநிவுக்கு சூரபன்மன் போனான். அதை அறிந்த இந்திரன் பொன்ன கரிலிருந்தொளித்தோடி நமினைநிவு சேர்ந்தான். பாலும், பிரமா முதலியவர்களும் அமராவதி நகரைக்குப் போய் விஷ்ணு விடம் இனிச் செய்யத்தகுந்தது யாதென ஆலோசனை கேட்டார்கள். சரண்புகுதலன்றி வேறுவழியில்லையெனக் கூறி விஷ்ணுவும் அவர்களுடன் நமினைநிவுசருப் போய் சூரபன் மன்முன் யாவரும் அடிகூறி நின்றார்கள். அத்தருணம் நீவாரும் (உருத்திரர்) அங்கு சேர்ந்து அவர்களுடேன்றனர்.

யாவரும் வழிபாடு பண்ணியபின், சூரபன்மன் விசுவகர்மாவை யழைத்து வேண்டிய நகரங்களை அமைப் பித்து மகேந்திரபுரத்திற் தன் பட்டாபிஷேகம் நடாத்தி அரசுரிமை பூண்டு தன் தம்பிமாரையும் அதிபதிகளையும் ஆங் காங்கு அவர்களுக்காக அமைக்கப்பட்ட நகரங்களில் வைத்து இராச்சியபாரம் பண்ணினான்.

“ அகிலம்யாவு, மெண்டிசை புகழுமாற்றுலிறைபுரிந் திருத்தி ” என்று சிவபிரான் கற்பித்ததை மறந்து கொடுங் கோலோச்சுவானாயினான்.

### இமையவரிடும்பை

“ அரசு செய்தலு மந்தரநாதனுஞ்
சுரரு மேனை முனிவருந் தொகுதீஇ
வரை செய் மாடமகேந்திர மாபுரத்
தொருவ னேவலின்முன்ன மொழுகுவார்.”

“ ஊனமுற்றோர்போ லிவ்வா றுலேகின்ற காலத்தி
லொருநாட் சூரன்
வானகத்துத் தலைவனையு மமரரையும்வருகவென
வலித்துக்கூவித்

தானவர்க்குத் தம்பியர் நீ ரவர்பணிநும் பணியன்றோ
தரங்கவேலே

மீனனைத்துங் கறைகொண்டு வைகலுமுய்த் திடுதிரென
விளம்பினரல்."

"போகின்ற நெறியின்கணிமையவரும் புரந்தரனும்
பொருமியேங்கி

யாகின்ற தெமக்கேயோர் பழியன்றோ வலையதுவந
தருங்காமுன்னர்ச்

சாகின்றதே நிகவுமினிதாகு மெமக்கதுவுஞ் சாராதந்தோ
வேகின்ற சிந்தையினே செய்வதெவ னெனப்புலம்பி
வேலைபுக்கார்."

" தேனுலவுந்தாருத திருநிழற்கீழின் பமுறும
வானவர்களென்றே மதிக்குந்தங்கைமையினே
மீனமொடு மீன் சுமந்தேயெல்லோர்களு நகைக்கத்
தானவர்முன் செல்வதினு சாதன்மிகநன்று நன்றே."
(தேவரையேவல்கொள் படலம் 1, 2, 5, 15.)

சூரபன்மனின் கொடுமையினல் இந்திரனும் இமைய வரும் இவ்வண்ணம் புலம்பினர்.

" அவ்வகையாலர சாறறு மெலலையி
லெவ்வமில் சூர்முத லிந்திரன் றெனும்
தெவ்விளை வன்சிறை செய்து தேவியை
வவ்விய வுன்னினன் வருவதோர்கிலான்."

தூதுவர்,

" வந்தனரவுணரும வயங்கொண் மாதரு
மந்தமில் படையொடு மடல்செய் வீரர்போற்
சிந்தனை யாவதோ தெரிந்திலோமென
விந்திரன் வினவுற விசைத்து நிற்கவே."

" பொம்மெனவவர் தமைப் போக்கித் தீயினும்
வெம்மைகொணெஞ்சினர் வினைய முன்னியே
யம்மனை மனைவியோ டகன்று மாயையா
னிம்மெனவிப்புவி தன்னிலேகினன்."

இவ்வண்ணம் இந்திரன் சீகாழிக்கொளித்தோடிவிட, அவன் மகன் சயந்தன்,

" வருந்திய வமரர்தம்மை மனப்படத்தேற்றி நாளுந்
திருந்தலன் பணித்த வேவல் செய்திடத்தூண்டிவான்மே
விருந்தனன்."

(இந்திரன் கரந்துறை படலம் 5, 10, 11, 38.)

" அந்நாளதனி லவுணர்க் கிறையேவ
றன்னான் மிகவுநதளர்ந்து சிலதேவ
ரெந்நாளிப் புன்மை யெனா நீங்கு மென்றிரங்கிப்
பொன்னாடு விட்டுப் புவிதன்னிற் போநதனரே."

(தேவாபுலம்புறு படலம் 1.)

இவர்கள் சீகாழிக்குப் போய் தாம்படும் உபத்திரவங்களை இந்திரனுக்கறிவித்துப் புலம்பினார்கள். சிவபிரானின் துணைவேண்ட, இந்திரன் அவர்களுடன் மாந்தைக்குப் போனான்.

இந்திரன் மாந்தையிற் தங்கியிருக்கையில், சூரபன்மன் தன் தங்கையை இந்திராணியை வசப்படுத்திக்கொண்டு வரும்படி சீகாழிக்கனுப்பினான். அவள் சித்தி பெறாது அவமானப்படுத்தப்பட்டுத் திரும்பி வந்து சூரபன்மனுக்கு முறையிட்டாள். சூரபன்மன் தன் மகனாகிய பானுகோபனைச் சேனையுடன் போய் இந்திரனையும் இந்திராணியையுங் கொண்டுவரும்படி சொன்னான். ஆனால், பானுகோபன் இந்தியாவைச் சேரமுன் மாந்தையிற் தங்கிய இந்திரன் இந்திராணிக்கு நேரிட்ட யாவற்றையும் நாரதமுனிவர் மூல

மறிந்து இந்தியாவுக்குத் திரும்பி அவளையுங் கொண்டு சுயினை தீவுக்குப் போய் மேருக்கோட்டையில் ஒளித்திருந்தான்.

பானுகோபன் கோயிப் பகுதிகுப் போய் அங்கு தேடியும் இந்திரனையாவது இந்திராணியையாவது காணாதமையின் அவர்களைத்தேடி யாழ்ப்பாணம் போனான். அங்கே இந்திரனின் மகன் சயந்தன் பானுகோபனை எதிர்த்துப் போர் செய்து தோற்க, அவனையும் பல இமையவரையும் சிறையாக்கியும், பொன்னகருக்குத் தீயிட்டு விட்டும் பானுகோபன் மகேந்திரபுரம் திரும்பினான்.

"ஆயதோர் அமைதியின்க ணணங்கொடு மேருவெற்பிற
போயின வமரர் கோமான் பொன்னகர் சூரன் மைந்தன்
காயெரி கொளுவியங்கட் கடவுளர் குழுவினோரைச்
சேயொடு பற்றி யேகிச் சிறைசெய்த தன்மை தேர்ந்தான்

"தேர்ந்தனன் றளர்ந்து மேருச்சிலம்பினின் மகவான் பண்ணுள்
வார்ந்திடுங் கங்கைவேணி வள்ளலை யுன்னி நோற்பச்
சார்ந்துநிற கென்னைவேண்டுஞ் சாற்றென முதல்வ னீதி
பேர்ந்தசூர் கிளையைச் செற்றெம் பேதுறவகற றுகென்றான்

"என்றலு மெனநதை சொல்வான் யாமுமை தன்னை மேவி
யொன்றொரு குமரன்றன்னை யுதவுவமவனே போந்து
வென்றிகொள சூரனாதி யவுணரை விரைவிற் செற்று
மனறநும முரிமை யீவன் வருந்தலென் றுரைத்துப் போனான்."

(அமரர் சிறைபுகு படலம் 116—18.)

## கந்தகுமரன் படையெழுத்தல்

"பாரினை யலைத்துப் பல்லுயிர் தமக்கும் பருவரல் செய்து விண்ணவர்த
மூரினை முருக்கித் திமையோயியற்றி யுலப்புறு வன்மைகொண்டுற்ற
சூரனையவுணர் குழுவொடுந் தடிந்து சுருதியினெறிநிறீஇ மகவான்
பேரரசளித்துச் சுரர்துயரகற்றிப் பெயர்தி"

(விடைபெறு படலம் 35.)

என்று சிவன் குமாரனுக்கு விடைகொடுத்து, பெருஞ் சேனையும் படையும் உதவி விட அவர் மாந்தையினின்றும் புறப்பட்டு நயினுதீவு சென்று தாரகனைத் தாக்கி அவனைக் கொன்று, பின் யாழ்ப்பாணம் போய் அது தீயினுலழிக்கப் பட்டுக் கிடந்த நிலைமையைக் கண்டும், அவ்வூரார் பாடிய பாட்டைக் கேட்டும், அவர் படு பாட்டைக் கேட்டிரங்கியும் தம் பனையிற் தங்கி, ஓர் தூதனை சூரபன்மனிடம் விடுத்து சுரரைச் சிறையினின்றும் நீக்கும்படி கேட்டார். சூரன் மறுக்க, தன் சேனையோடும் இலங்கை சென்று கதிர்காமத்திற் பாளையம்போட்டு அசுரருடன் போர் புரிந்து அவர்களையும் அவர்களின் தலைவராகிய சிங்கமுகனையும் சூரபன்மனையும் அழித்து தம்பலைக்குத் திரும்பி, பின் நயினுதீவு சென்றார். அங்கே இந்திரன் தெய்வயானையைக் குமாரனுக்கு மனைவியாகக் கொடுத்தான். அதன் பின் குமாரன் திரும்பவும் யாழ்ப்பாணம் போய் பொன்னகரை முன்போலமைப்பித்து,

## இந்திரனின் மகுடாபிஷேகம்

"அரசியலுரிமைத் தெல்லா மாங்கவரழைததுக் கங்கைத்
திரை செறி தெண்ணீராட்டிச் செழுந்துகில் கலன்கள் சாநதம்
விரை செய்தார் புனைந்துசிய வியன் பெருந்தவிசி னேற்றி
வரிசை யோடிந்திரற்கு மணிமுடி சூட்டினாரால்."

(விண்குடியேற்று படலம் 40.)

எனப் பண்டையோர் சொல்லியுள்ளாரெனவறிக.

# அதிகாரம் 12

## இமையவரின் சந்ததியார்

இந்திரன், சக்கரன், நாகர், தேவர் சிங்களரின் சரித்திர மாகிய மகாவம்சத்தில் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே சரித்திர காலத்திலும் இப்பெயர்களால் அழைக்கப்பட்டவர்கள் இலங்கையில் வசித்தார்களென்பது திண்ணமாகிறது.

கந்தகுமரன் காலத்தில் வசித்த இந்திரன் மகாவம்ச சரித்திர காலத்திலும் வசித்தானல்ல. ஆனால் முந்தியவனைப் போலவே பிந்தியவனும் தேவர்களின் அரசன் எனப்பட்டிருக்கிறான். ஆகவே, இந்திரன், சக்கரன் பட்டப் பெயர் என்பதும், நாகர் தேவர் சாதிப் பெயரென்பதும் தெளிவாகிறது.

பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தில் இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன் எனப்பட்ட ஓர் சேர ராசனைப்பற்றிப் புகழ் பாடப்பட்டிருக்கிறது. இவன் "இமையவர்" எனப்பட்ட சாதியாரை மானபங்கப் படுத்தியமையின், இமையவரம்பன் எனப்பட்டான்.

> "புனல் வாயிற் பூம்பொய்கைப்
> பாடல் சான்ற பயங்கெழு வைப்பி
> னாடு கவினழிய நாமந் தோற்றி."

(செய்யுள் 13, அடி 8—10.)

என்றார். ஈண்டு "நாமம்" "பெயர்" எனும் பொருளுடைய தன்றி "கீர்த்தி" யைச் சுட்டுவதல்ல. பெயர் வந்த காரணம், "புனல் வாயில் வைப்பின் நாடு கவின் அழிய" —கடற் கதவத்தில் (இருந்த) நகரத்தின் ஊர் அழகழிந்தது என்றார். அழித்தவன் நெடுஞ்சேரலாதன்.

இதைக் குறித்தே பின்னும்,

" நுங்கோ யாரென வினவி னெங்கோ
விரு முந்நீர்த் துருத்தி யுண்
முரணி யோர்த் தலைச்சென்று
கடம்பு முதறடிந்த கடுஞ்சின முன்பி
நெடுஞ் சேரலாதன்."

(செய்யுள 20, அடி 1—5.)

முந்நீர் = கடல் துருத்தி = சிறுத்தீவு.

என்றார். அதாவது "இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன்" எனக் கூறுவதற்குப் பதிலாக "இமையவரம்பன்" எனும் பட்டம் வந்த வழியைக் கூறிக் காட்டினார்.

மேலும்,

" துளங்கு பிசிருடைய மாக்கடனீக்கிக்
கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை."

(செய்யுள் அடி 17. 4—5.)

என்றார். ஆகவே நெடுஞ்சேரலாதன் தோற்கடித்தது மாக்கடலிலிருந்த ஓர் சிறுத் தீவினரசனை. அவனுடைய காவல் மரம் கடம்பு. இத்தீவு நயினாதீவு. அதுவே கடலிலிருந்த புறக்கதவம். பாக்கு நீரிணையே மாக்கடல். கந்த குமரன் "கடம்பன்" எனப்பட்டது ஈண்டு நோக்கற்பாலது.

சிலப்பதிகாரத்திற் பாராட்டப்படும் கண்ணகையின் காலத்தில், யாழ்ப்பாணத்திலும் தீவுபற்றிலும் வெடியரசன் எனும் குகனும் அவன் சகோதரராகிய வீரநாராயணன், விளங்குதேவன், போர் வீரகண்டன், ஏரிலங்குருவன் எனும் நால்வரும் சிற்றரசர்களாயிருந்தார்களென பூர்வ சரித்திர முண்டு (யோ. யா. ச. ப. 6). ஈண்டு வெடியரசன் "குகன்" எனப்பட்டதும் அவன் தம்பி "நாராயணன்" எனப்பட்டதும் கவனிக்கப்படவேண்டும். "குகன்" கந்த

குமரனின் ஓர் பெயர். "நாராயணன்" விஷ்ணுவின் ஓர் பெயர். இந்திரனின் பெயர் போலவே விஷ்ணுவின் பெயரும் பட்டப்பெயராக அரசனின் தம்பியால் பாவிக்கப்பட்டது. மகாவம்சத்திலும் இப்படியே குறிக்கப்பட்டிருக்கிறது (Mhv. vii. 5). ஆகவே வெடியரசனும் தம்பிமாரும் இமையவரின் சந்ததியாரென்பது தெளிவாகிறது. இவர்களைக் கிருட்டினன் புத்திரரென்பர் (யா. யா. ச. ப. 6). ஈண்டு "கிருட்டினன்" எனப்பட்டவன் அருச்சுனன். இவன் தீர்த்தயாத்திரை செய்தபோது மணிப்புர அரசனின் மகளை விவாகஞ் செய்தான், அவர்களுக்கு பப்பிரவாகன் எனும் மகன் பிறந்தான், தாயையும் மகனையும் அவ்விடத்திற்றானே விட்டுவிட்டு அருச்சுனன் போனான் என மகாபாரதத்திற் கூறப்பட்டிருக்கிறது. (A. J. pp. 33—4). ஈண்டு "மணிபுரம்" எனப்பட்டது பொன்னகர—பொன்றுறை. மணி=பொன். "பொற்றுறைக்குன்றானை தருமராசனின்றம்பி அரிச்சுனன், தீர்த்தயாத்திரை செய்தபோது இத்தலம் (கீரிமலை) வந்து தீர்த்தமாடிப் போயினனென்றும் இதிகாசம் கூறும்" என யோன் ஆசிரியர் குறித்திருக்கிறார் (யோ. யா. ச. ப. 6). வெடியரசனும் தம்பிமாரும் இமையவரின் சந்ததியென இத்தாலும் தெளிவாகிறது.

வெடியரசன் வமிசத்தார் பிற்காலத்தில் முற்குகர் என்றழைக்கப்பட்டார் (யோ. யா. ச. ப. 8). முற்குகர் இன்றும் யாழ்ப்பாணத்தில் வசிக்கிறார்கள்.

ஆகவே, இமையவரின் சந்ததியார் முக்கியர், முக்குவர், முற்குகர் எனப்படும் சாதியாரன்றி வேறல்ல.

உள்ளபடி, இலங்கையை யாழ்ப்பாணத்தினது பெயர் போன பகுதியாகிய தம்பலைப்பதியின் பெயராலும்,

இலங்கைவாசிகளை முற்குகரின் பெயராலும் கிரேக்கர் வழங்கினார்கள்.

Taprobane=தம்பழ பணை=தம்பல பதி, ' r" = "ழ".

Palaeogoni=பழைய உகன்=முன் உகன்=முற்குகன் "i" பன்மை விகுதி.

Salai=சாலர், சலவர்=மீன்பிடிகாரர், கடலோட்டிகள்.

இந்திரனையும் இமையவரையும் நாள்தோறும் மீன் பிடித்துக்கொண்டு வாருங்கள் என சூரபன்மன் கட்டளை யிட்டபோது, அவர்களறியாத் தொழிலைச்செய்யச்சொன்னா னல்ல. அவர்கள் அன்று மீன் பிடித்தது போலவே அவர்களின் சந்ததியார் இன்றும் மீன் பிடிக்கிறார்.

முற்றிற்று.

# அநுபந்தம்

கந்தபுராண மறை பொருள் விளக்க உபயோக உதாரணம்

---

## மணிமேகலை விளக்கம்

### 1. மணிமேகலா தெய்வம்

"பொன்றிகழ் நெடுவரை யுச்சித தோன்றி"

(பதிகம், அடி 3.)

இத் தெய்வதம தோன்றியது மேருமலையின் உச்சியில். இத் தெய்வதம்,

"நாவ லோங்கிய மாபெருந் தீவினுட்
காவற் றெய்வதம்."

(காதை 2, அடி 1—3.)

அதாவது, நாவலந்தீவிற தெய்வதம்.

"மணி பல்லவத்திடை

. ... . ..

... ... .. . .. . இளங்கொடி விரும்பி
மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கித்
தீவதிலகை தன்னொடுங் கூடிக
கோமுகி வலஞ் செய்து கொள்கையி னிற்றலு
மெழுந்து வலம்புரிந்த விளங்கொடி செங்கையிற்
றொழுந்தகை மரபிற் பாத்திரம் புகுதலும்
... ... ... ... ... ... ... ... ... . . .. ... .. .. . .
... .. . .. ... .. . .. .. ... . . ... .. ..
ஈங்கிப் பாத்திர மென்கைப் புகுந்தது
நாவலொடு பெயரிய மாபெருந்தீவத்து,"

(காதை. 11, அடி 2, 53—58, 106—7.)

'கோவலன் மடந்தை குணவதம் புரிந்தோ
ணாவலந்தீவிற் றுனனி மிக்கோ

எங்கையி னேந்திய வமுத சுரபியொடு
தங்கா திப்பதித் தரும வனத்தே
வந்து தோன்றினள்."

(காதை 28. அடி. 179—83.)

என்றதால் நாவலந்தீவு மணிபல்லவம் என்பது தெளிவாகிறது.

ஆகவே இத்தெய்வதம் மணிபல்லவத்திற் றெய்வதம். மேலும் இத் தெய்வதம்

" சம்பு என்பாள்."

(பதிகம். அடி 8)

"சம்பு" எனும் பெயரை உடையது. இப்பெயர் வந்த வழி: —

இந்தெய்வதம் தோன்றிய மேரு,

" சூழு கடல் வளை இய *வாழியங்குன்றதது
நடுவு நின்ற மேருக் குன்றம்."

*"ஆழிக்குன்றத்து" என்றும் பாடம். (காதை 6. அடி 192—3)

என்றார்.

ஈண்டு " ஆழிக் குன்றம் " எனப்பட்டது " மை நாகம் "—மை = நீர் = ஆழி; நாகம் = மலை = குன்றம். " சூழ் கடல " எனப்பட்டது " சுற்றுறு மெழுநதி " என வரைபுனைபடலம் 29-ம் செய்யுளில் வரும் பாக்கு நீரிணை. " ஆழிக்குன்றத்து நடுவு நின்ற மேருக் குன்றம்" என்றதை ஒப்ப " சம்புத்தீவி நடுவு நின்ற மேருவரை " என்றார் கச்சியப்ப சுவாமிகள்.

ஆகவே, மேருவிற் றோன்றிய தெய்வதம் மேரு இருந்த இடமாகிய " சம்பு " வின் பெயரால் அழைக்கப்பட்டது.

" பொன்றிகழ் நெடுவரை யுச்சித் தோன்றித்
தென்றிசைப் பெயர்ந்தவிந் தீவத் தெய்வதம் "

(பதிகம் அடி 3—4.)

என்றதில் " இ " சுட்டி நிற்பது " தெய்வதம் " அன்றி " தீவு " அல்ல. இத்தெய்வதம் சம்பு தீவத் தேய்வதம்.

இத்தெய்வதம் " தென்றிசைப் பெயர்ந்த"து என்றார். தென்றிசை போய் எழுந்தருளிய இடம் சம்பாபதி. " சம்பு வெண்பாள் சம்பாபதியினள் " என்றார். " சம்பாபதி " இத் தெய்வதத்தின் பெயராகவு மிருந்தது (காதை 6. அடி 138) காவிரிப்பூம் பட்டினத்தின் பழைய பெயராகவும் இருந்தது (பதிகம் அடி 30—2).

" மன் பெயர்ப்படுத்த விவ் விரும்பெயர் மூதூர் "

(பதிகம். அடி 30.)

என்றதனால் பட்டினத்துப் பெயர் தெய்வதத்திலிருந்து வந்தது என்பது தெளிவாகிறது. அதாவது "சம்பாபதி" எனப் பட்ட தெய்வதம் அவ்விடத்தே எழுந்தருளினமையின் அவ் விடம் " சம்பாபதி " எனப் பெயர்பெற்றது.

இத்தெய்வதம் சம்பு தீவினின்றும் சம்பாபதிக்கு (காவிரிப்பூம் பட்டினத்துக்கு) போனதை " தென்றிசைப் பெயர்ந்த" என்றார். ஈண்டு " தென்றிசை " எனப்பட்டது " தெக்கணம் " எனப்பட்ட தேசமன்றி மேருவுக்குத் தெற் கான திசையல்ல. உள்ளபடி போன திசை வடக்கு.

இத்தெய்வதம் தோன்றிய மேரு இமையவரின் கோட்டை யாதலின்

" இன்னுங் கேளாயிமையோர் பாவாய் "

(காதை 18. அடி 159.)

என்றார் இத்தெய்வதம் இமையவரின் தேய்வதம்.

மேலும் இத் தெய்வதம்

"தேவர் கோற் கொடுத்த, தீவகச் சாந்தி."

(காதை 2. அடி 2—3.)

இமையவரினரசனாகிய இந்திரனுக்கே எடுக்கப்பட்டது.

மேரு "மணிமலை" எனப்படும். "மணி" யினை (உச்சி வாய்த்திடு) "மேகலை" (அ. கோ. ப. 29) யிற்றோன்றிய தெய்வதம் மணிமேகலை எனும் பெயர் பெற்றது.

மேரு விருந்த சம்பு பாக்கு நீரிலையிலிருக்கும் நாவிணை தீவென முன் நிரூபித்தாம். மணிமேகலைக் காவியத்தில், சம்புத்தீவொடு சேர்த்துக் கூறப்பட்டவற்றுள் ஒரேயொரு குறிப்பு இதற்கு மாறுபாடாயிருப்பதாகத் தோன்றக் கூடும். அதை ஈண்டு கவனிப்பாம்.

"சம்புத்தீவினுட் டமிழக மருங்கிற்
கம்பமில்லாக் கழிபெருஞ் செல்வ
ராற்று மக்கட் காற்றுந் துணையாகி
நோற்றோ ருறைவதோர் நோனக ருண்டு."

(காதை 17, அடி 62—5.)

என்று காவேரிப்பூம்பட்டினத்தைக் குறித்தார். ஈண்டு கருதப்பட்டது:—

நோற்றோர், தமிழக மருங்கிற் சம்புத்தீவினுட் செல்வர்
ஆற்று மக்கட்கு ஆற்றும், துணையாகி உறைவதோர்
நகர் உண்டு.

அதாவது, காவிரிப்பூம் பட்டினத்தில் ஓர் அன்ன சத்திரம் நோற்றோரால் நடத்தப்பட்டது. அதை ஸ்தாபித்தவர்கள் சம்புத்தீவு வாசிகளாகிய தனவான்கள். சம்புத்தீவு தமிழகத் தினயலிலிருந்தது. இவ்வண்ணம், நோற்றோர், செல்வர் ஆற்ற, துணையானர், எனப்பொருள் கொள்ள இட

முண்டு. இது நயினைதீவொடு வையும். பண்டைக்காலத்தில் நயினைதீவு ஓர் பெரிய கடல்வியாபாரச் சந்தையாயிருந்தது. சீனா, வங்காளம், தமிழகம், எகிப்து முதலிய தேசங்களிற் சரக்குகள் பலருக்கு விற்கத் துறைகளிற் பண்டமாற்றுச் செய்யப்பட்டதாக பெரிப்ளஸ் எனும் நூலிலிருந்தும் பிளினியின் இயற்கைச் சரித்திரத்திலிருந்தும் தெரியவருகிறது. ஆதலால் நாவாய்கள் அங்கிருந்தனவாகக் கொள்வது புதுமையல்ல.

ஆகவே, மணிமேகலா தெய்வம் நயினைதீவுக் காவற் தெய்வம் என்பதற்கு மாறாக யாதொரு குறிப்பும் மணிமேகலைக் காவியத்திற் காணப்படவில்லை.

எப்படியும், இத்தெய்வமே இன்றும் "நாக நயினார்" எனும் பெயர் கொண்டு அத்தீவில் வீற்றிருக்கிறதுமன்றி "நயினைதீவு" எனும் பெயரின் காரணமாகவும் இருக்கிறது. நன்மையை அளிக்கும் மூதாட்டி "நயினார்" எனப்பட்டு நயினார் ஆனாள் அவள் மலையினின்று தோன்றியவளாதலின் நாக நயினார் என்றழைக்கப்பட்டாள்.

நாகம்மாள், நாகதம்பிரான் எனும் பெயர்களாலும் இத்தெய்வம் இன்றழைக்கப்படுகிறது. நயினைதீவுக் கோயிலில் வணங்கப்படுவது நாகபாம்பென்பர் உண்மையை ஆராயா வறிஞர்.

## 2. காந்தாரம்

காந்தாரம் ஓர் பெரிய நாடெனக் குறிக்கப்பட்டிருக்கிறது. அந்நாட்டரசனாகிய அத்திபதியின் முன் அவன் மைத்துனன் பிரமதருமன் போய்

"நீங்கனி *நாவ லோங்கு மித் தீவிடை
யின்றேழ் நாளி லிருநில மாக்க
ணின்று நடுக் கெய்த நீணில வேந்தே

* "நாவலோங்கு மத்தீவிடை" யென்றும் பாடம்.

பூமி நடுக்குறூஉம் போழ்தத் திந்நகர்
நாக நன்னாட்டு நானூறி யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்து கேடெய்து
மிதன்பா லொழிகென "

(காதை 9 அடி 17—23.)

கூறினனெனப் பட்டிருக்கிறது.

"இந் நகர்" எனப்பட்டது காந்தாரவரசனின் நகரமாகிய இடவயம். இது நாவலந்தீவிலிருந்ததல்ல. ஆகவே "இத்" தீவிடை யல்ல "அத்" தீவிடை எனும் பாடமே சரியாகும்.

நாவலந்தீவு நயினாதீவென முன் நிரூபித்தாம். அத்தீவிற் பலமுறையும் பூகம்ப முண்டாவது பண்டைக்கால இயற்கை என்பது வால்மீகன் மைநாகத்தை (நயினாதீவை)ப் பற்றிக் குறிப்பதிலிருந்து தெளிவாகிறது. அது

"மிதக்கும், தாழும், பருக்கும், சிறுக்கும்'
திறமையுடைய தென்பரர் (D. T. R. p. 880).

"சேர்த்த நான்முகனுறங்குழிச் சிந்து வுடமுந்நிப்
பேர்த்து ஞாலம் விட்டெழுதரு மேரு"

(மகேந்திரஞ்செல படலம் 3).

எனக் கந்தபுராணத்திற் குறிக்கப்பட்டதும் ஈண்டு நோக்கற்பாலது.

ஈண்டு தீர்க்கதரிசனஞ் சொல்லப்பட்ட பிரளயம் கி. மு. 250-ம் ஆண்டு வரையில் நிகழ்ந்த பிரளயம். இது சிலப்பதிகாரம் காதை 11 அடி 18—20-ல் குறிக்கப்பட்டிருக்கிறது மன்றி இராசவழி எனும் சிங்களர் சரித்திரத்திலும் குறிக்கப்பட்டுள்ளது. (A. J. pp. 9—11).

பிரமதருமனால் எச்சரிக்கப்பட்ட அத்திபதி

" இடவயமென்னு மிரும்பதி நீங்கி
* வடவயினவந்தி மாநகர்ச் செல்வோன்
காயங்கரையெனும் பேரியாற் றடைகரைச்
சேயுயர் பூம்பொழிற் பாடி செய்திருப்ப."
(காதை 9, அடி 27—30.)

" விடவயினவந்திம மானகர் "
" வசந்த மாநகர் " என்றும் பாடம்.

என்றதால் அவன் தன் நகராகிய இடவயத்தை விட்டு " வடவயினவந்தி " " விடவயினவந்திமம் " " வசந்தம் " என வெவ்வேறு பிரதிகளிற் குறிக்கப்பட்டிருக்கும் நகரமொன்றிற்குப் போக வழிக்கொண்டு, வழியில் காயங்கரையெனப்பட்ட ஆற்றங்கரையிற் தங்கியிருந்தான் என்றார்.

போக வழி கொண்ட இடம்.—" வடவயின் அவந்தி " எனப்பட்டது மத்திய இந்தியாவிலிருக்கும் உஜ்சயினி (Ujjain) போலும். பாடம் " விடவயி னவந்திம மாநகர்" என்றால் "மேருவின் சுற்றமதாகிய இமையம்" (பார்ப்பதிப் படலம் 6) ஆகலாம். விடவம் = சமரேகை ; நவம = கேண்மை = உறவு = சுற்றம். சமரேகை மேருவினூடே போயிற்றென்பது பண்டைக் கொள்கை. பாடம் " வசந்த மாநகர்" என்றால் இந்திரனின் மாளிகை (வசந்தம) இருந்த பொன்னகர் (பொன்னலே) ஆகும்.

பொன்னகர் யாழ்ப்பாணத்திலிருந்ததென நிரூபிக்கப்பட்டது.
இமையம் நயினாதீவிலிருந்ததென நிரூபிக்கப்பட்டது.
அவந்தி இந்தியாவில்.
காந்தாரம் ஆபுகானிஸதானிற் காந்தகார் என்பர்.

காந்தாரம் எனும் பெயர் யாழ்ப்பாணத்தின் ஓர் பண்டைப் பெயரென்பது சரித்திரமாதலாலும் நாவலந் தீவு

நயினாதீவென நிரூபிக்கப்பட்டதாலும் நாவலந் தீவே பூகம்ப முண்டாகப் போகுமிடமா யிருந்ததாலும் அத்திபதி யாழ்ப் பாணத்திலிருந்த இடவயத்திலிருந்து நாவலந் தீவிலிருந்த (நயினாதீவில்) இமையத்துக்குப்போக புறப்பட்டானென கொள்ள இடமில்லை. இந்தியாவுக்குப் போக புறப்பட்டா னெனக் கொள்ள எள்ளளவும் இடமில்லை. ஆகையால் அவன் பொன்னகர் (பொன்னாலை) போகவே புறப்பட்டா னெனக் கொள்ளவே இடமுண்டு.

ஆகவே "வசந்த மாநகா" எனச் சாத்தனார் கூறியதை, "நவந்திம மாநகர்" என யாரோ மாற்றி விட்டிருக்க வேண்டும். ஏனெனில் "விடவயின் வசந்த மாநகர்ச் செல்வோன்" எனச் சாத்தனா கூறியபோது நிரட்சத்துக் கடுத்த தேசத்தில் (Equatorial region) வசந்தம் இருந்த தெனக் குறித்தார். இமையம் இந்திரனின் நகரமாதலாலும் அது மேருவுக்குக் கிட்ட இருந்ததாலும் "வசந்தம்" என்றதை

"விடவயி னவந்திம மாநகாச் செல்வோன்"

என யாரோ மாற்றி விட்டார். ஓர் வேளை அக்காலத்தில் "வசந்தம்—பொன்னகர்" இந்தியாவிலிருக்கும் 'அமராவதி" யெனக் கொள்ளப்பட்டது போலும் அது காரணத்தால் அது சமரேகைக்கடுத்த தேசத்திலில்லையே ஆகையால் சமரேகையிலிருந்த மேருவுக்குக் கிட்ட இருந்த இமையமே கருதப்பட்டிருக்கவேண்டும் எனக் கொண்டார் போலும். காந்தாரம் யாழ்ப்பாணமெனவே இவர் கொண்டார்.

இதன் பின், இமையம் இந்தியாவின் வட எல்லையி லன்றி நிரட்சத்துக்கடுத்திலலையேயெனக் கொண்டு "விடவயி

அவந்திம" என்றது தவறாக வேண்டும், அது "அவந்தி" யாயிருக்கவேண்டும், அவந்தி வடதேசத்திலிருக்கிறதே ஆகையால் பாடம்

"வடவயி னவந்தி மாநகர்ச் செல்வோன்"

ஆதல் வேண்டுமென யாரோ மாற்றிவிட்டார் எனக் கொள்வாம். இவர் காந்தாரம் யாழ்ப்பாணம் என்பதை அறியாதோ கவனியாதோ விட்டார்.

## 3. காயங்கரை ஆறு

சாத்தனார் குறித்த காந்தாரம் எதுவென திட்டமாகக் காட்டுவது பின்வரும் அடிகளாம்.

"காயங்கரையெனும் பேரியாற்றடைகரைச்
சேயுயா பூம்பொழிற் பாடி செய்திருப்ப."

அதாவது, இட வயததுக்கும் வசந்தத்துக்கும் இடையில் காயங்கரையெனும் ஆற்றங்கரையிலிருந்த ஓர் இடத்தில் அத்திபதி தங்கினான்.

காயங்கரை எனப்பட்டது "காய" கரை. அதாவது "கயாகரை." "காய = Gaya = புத்தகயா." புத்தகயாவுக்குப்போக யாத்திரிகர் தோணியேறிய கரை. இது "கசாத்துறை" க் கரை. பண்டைக்காலத்தில் காங்கேசன் துறை கசாத்துறை என்றழைக்கப்பட்டது. (யோ. யா. ச. ப. 13). "கசாத்துறை" "கயாத்துறை" யின் திரிபு.

காயங்கரை ஆறு எனப்பட்டது யாழ்ப்பாணத்து வடகரைக்கும் இந்தியகரைக்கு மிடையிலிருந்த வாய்க்கால்.

அநுமாரின் இலங்கைப்பயண விபரத்தில் அவர் ஓர் ஆறறு வழியே போய் (Water-course D. T. R. p. 879) சாகரத்தில உப்புக் கடலிலிருந்த மைநாகத்தைச் சேர்ந்தார்

என வால்மீகன குறித்திருக்கிறார். இது வங்காளக் கடலையும் பாக்கு நீரிணைக்கடலையும் தொடுத்த ஒடுங்கிய கடலென்பது வெளிப்படை.

கி மு. 500-ம் ஆண்டு வரையில் கலிங்கத்திலிருந்து வந்த பாண்டுவசு மகாகாந்தார நதியின் களிமுகத்தில் இறங்கி, தேவர்களின் உதவிபெற்று சிங்கள வரசனின் தலைநகரி சேர்ந்தான் என மகாவம்சம் கூறும். (Mhv. viii 12). மகாகாந்தாரநதி = காயங்கரை ஆறு.

சக்க பாண்டுவின் மகள் இலங்கைக்கு வந்தபோது குணகாமம் எனப்பட்ட துறையிலிறங்கி தேவர்களின் உதவி பெற்று பாண்டுவசுவின் தலைநகரி சேர்ந்ததாக மகாவம்சம் கூறும் (Mhv. viii. 24—5). "குணகாமம" கிழக்கு ஊர் எனப் பொருள்படும். இது யாழ்ப்பாணத்தின் கீழ்ப் பாகத்திலிருந்ததாக வேண்டும். இத்துறை மகாகாந்தார நதியின் களிமுகத்திலிருந்ததென குறிக்கப்பட்டிருக்கிறது (Mhv. p. 64 Foot note). ஆகவே இது யாழ்ப்பாணத்தின் வடகரையில பருத்தித்துறைப் பகுதியிலிருந்ததாதல் வேண்டும். அதாவது காயங்கரை நதியின் கீழ்அந்தத்தில் குணகாமத்துறை இருந்தது. இதற்கு மேற்கே கசாத்துறை இருந்தது. இதற்கு மேற்கே சம்புத்தீவுக்குப்போக தோணியேறும் துறையாகிய சம்புத்துறை இருந்தது சம்புத்துறை பாக்குநீரிணைக் கடலுக்குப் போகிறதற்குப் பாவிக்கப்பட்ட துறை. ஆகையால் இது மகாகாந்தார நதியின் மேற்கந்தம் எனக்கொள்வாம். அதாவது யாழ்ப்பாணத்தின் வடகரைக் கடல் மகாகாந்தார நதி என்றழைக்கப்பட்டது.

கி. மு. 300-ம் ஆண்டு வரையில் மெகஸ்தினிஸ் எனும் கிரேக்க ஆசிரியர் இந்தியாவிலிருந்து இலங்கையைப் பிரிக்கும்

ஓர் நதி (River) இருந்த தெனக் கூறியுள்ளார். இதனை நிலையம் ஈண்டு வெளியாயிற்று.

அத்திபதியின் காலத்துப் பூகம்பத்தால் இவ்வொடுங்கிய கடல விசாலித்து விட்டது.

## 4. சேயுயர் பூம்பொழில்

"சே=சிவப்பு." காங்கேசன் துறைக்கரையில் சிவப்பு நிறத்தைக் கருதும் பெயருடைய இடம் தம்பலைப் பதி—செந்தி.

## 5. அசோதரம

முற்பிறப்பில் மணிமேகலை அசோதர அரசனின் மகள், அத்திபதியின் மகனுடைய மனைவி. ஆகவே அவளும் அவளுடை கணவனும் அத்திபதியுடன் தம்பலைப்பதியிற் தங்கியிருந்தார்கள்.

"அரவக் கடலொலி அசோதரம்"

(காதை 9. அடி 38.)

என்றார். அரவக் கடல் பாற்கடலாதலின் அசோதரம் சாக தீவாகிறது. இது காரை தீவு.

## 6. சித்திபுரம்.

"சித்தி புரமாளுஞ் சீதரன் றிருமகள்."

(காதை 9. அடி 43.)

ஈண்டு சித்திபுரமெனப்பட்டது பிறகாலத்திற் சிங்களர் கதுறு கொட என்றழைத்த இடமாகலாம். சித்தி=எட்டி மரம்=கதுறு (சிங்களம்).

சித்தா வத்தை (சித்தி வத்தை ? சிங்களத்தில், வத்த=தோட்டம்) எனப்படும் ஓர் இடம் இருப்பது ஈண்டு நோக்கற் பாலது.

## 7. நாவலந்தீவு.

நாவலந்தீவு மணிபல்லவம் எனக் காட்டும் குறிப்புகள் மணிமேகலைக் காவியத்திலிருப்பதாக முன் காட்டியுள்ளாம். இதற்கு மாறான குறிப்பு ஏதாவது அக்காவியத்திலில்லை.

"மணிபல்லவத்திடை மன்னுயிர் நீர்த்தோன்
றற்காத் தளித்த தகையாவதனை
யொற்கா வுள்ளத் தொழியாதுதவி
னுங்கவ் வாவயிற் றமரர் கணமுவப்பத்
தீங்கனி நாவலோங்கு மித் தீவினுக்
கொருதானாகி யுலகு தொழத் தோன்றினன்."

(காதை 15. அடி 16—21.)

ஆங்கு=சாவகத்தில்.

என்றதில் "நாவலோங்கு மித்தீவு" எனப்பட்டது 16-ம் அடியிற் குறிக்கப்பட்ட மணிபல்லவம்.

"நாவலந்தீவிலிந் நங்கையை யொப்பார்
யாவருமில்லை."

(காதை 25. அடி 12—3.)

என்றதில், மணிமேகலை கையிலேந்தி நின்ற பாத்திரம் (அடி 9) நாவலந்தீவில் அவள் கையிற் புகுந்தமையின் நாவலந் தீவில் அவளை "ஒப்பார் யாவருமில்லை" என்றார். இருந்தால், அவர் கையில் அப்பாத்திரம் புகுந்திருக்குமே!

## 8. அந்தரத் தீவு

அந்தரத்தீவு எனப்பட்டது மணிபல்லவம். (நயினா தீவு). இதுவே.

"நால்வகை மரபின் மாபெருந்தீவு"

(காதை 6. அடி 195.)

எனப்பட்டதும். “நாலல்=தொங்கல்.” அந்தரத்தில் தொங்குவது போன்ற குணமுடைய தீவு. அது ஆதிக மாட்சிமை யுடையது.

## 9. பாரகம்

“பாரகவீதியிற் பண்டையோரிழைத்த
கோமுகி யென்னுங் கொழுநீ ரிலஞ்சியொடு
மாமணி பல்லவம வந்த தீங்கென.”
(காதை 28. அடி 201—3.)

ஈங்கு = காஞ்சி

என்றதில் “பாரக வீதி” என்று குறிக்கப்பட்டது மணிபல்லவத்திலிருந்த கோயிலின் “வீதி.” மணிபல்லவம் பாரகத்தில் (எழு தீவுகளில்) இருந்தமையின் “பாரக வீதி” என்றார். “பண்டையோர் பாரகவீதியில் இழைத்த கோமுகி” எனக் கொள்வாம். பாரக வீதி எனப்பட்ட ஓர் வீதி காஞ்சியிலிருந்ததல்ல.

மணிமேகலை வருமுன் காஞ்சிபுரத் தரசன் அமைப்பித்திருந்தது “பொய்கையும பொழிலும்” (அடி 204). மணிபல்லவத்தில் இவை கோயிலின் வீதியிலிருந்தது பற்றி ஓர் கோயிலையும் மணிமேகலை அவ்வரசனைக் கொண்டு செய்வித்தாள் என்க.

Printed at The Royal Printing Works, Mount Road, Madras.